விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 19 செவ்வாய்க்கிழமை (05.11.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 321

## தமிழ் மக்களுக்கு சம்பந்தனும் சுமந்திரனும் உதவமாட்டார்கள்



### யாழில் அத்துரலிய ரத்ன தேரர்

(யாழ்ப்பாணம்)
சம்பந்தனும் சுமந்திரனும் தமிழ் மக்களுக்கு உதவமாட்டார்கள் எனவும் சுமந்திரன் வெளி நாட்டுச் சக்திகளின் முகவர் எனத் தாம் நன்கு அறிவதாகப் பாராளு மன்ற உறுப்பினர் அத்துரலியரத்ன தேரர் தெரிவித்தார்.
நேற்றைய தினம் யாழில் இடம் பெற்ற ஊடகவியலாளர் 23

## யாழில் பொலிஸாரால் துப்பாக்கிச்சூடு

(யாழ்ப்பாணம்)
யாழில் பொலிஸாரால் நேற்று இரவு துப்பாக்கிப் பிரயோகம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.
யாழ் அரியாலை பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிக் கொண்டுவந்த ரக்டரை நோக் கியே இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவந் துள்ளது. 04

### முல்லை கேப்பாபுலவு மக்களின்

# காணிப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பேன்

### முல்லை மண்ணில் சஜித் பிரேமதாச



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு கேப்பாபுலவு மக்களின் காணிப்பிரச் சினைக்கு சிறந்தவொரு தீர்வு வழங்கப்படும் என முல்லை மண்ணில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

சுமூகமாக முடிவடைந்த

## நேற்றைய தபால் மூல வாக்களிப்பு

(கொழும்பு)
2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக் களிப்பு நேற்றும் சுமூகமான முறை யில் இடம்பெற்றதாக தேசிய தேர்தல் கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
நேற்று முற்பகல் 8.30 மணிக்கு ஆரம்பமாகிய தபால் மூல 23

240 கிலோ ஹெரோயினுடன்

## காலி கடற்கரையில் ஐவர் கைது

(கொழும்பு)
சுமார் 240 கிலோ ஹெரோ யின் போதைப்பொருளை ட்ரோலர் படகு ஒன்றில் கடத்திச் சென்ற ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் காலி கடற்கரையை அண்டிய பகுதியில் இலங்கை கடற்படை நடத்திய விசேட 23

சமூக மாற்றத்திற்கு

## முன்னிற்பேன்

### அநுர குமார

(கொழும்பு)
அரசியல் மாற்றத்திற்காக அன்றி சமூக மாற்றத்திற்காக முன்னிற்பதாக ஜனாதிபதி வேட் பாளர் அநுர குமாரதிசாநாயக்க தெரிவித்துள்ளார். 04

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு சஜித்துக்கு ஆதரவளிக்க தீர்மானம்

### உத்தியோகபூர்வமாக விரைவில் அறிவிக்கப்படும் – சம்பந்தன்

(கொழும்பு)
புதிய ஜனநாயக முன்னணி யின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு தீர்மா னித்துள்ளது.
இந்தத் தீர்மானத்திற்கான உத்தியோக பூர்வ அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என தமிழ் தேசியக் கூட்டமைப் 04

## கடந்தகால வரலாற்றை கொண்டு வாக்களியுங்கள்

நீதியரசர் விக்னேஸ்வரன் அறிக்கை



(யாழ்ப்பாணம்)
புதிய ஜனநாயக முன்னணி யின் வேட்பாளர் சஜித் பிரேமதாச வின் வெளிப்படைத் தன்மை இல்லாத தேர்தல் அறிக்கை ஒன்றை அதுவும் கரவாகச் சிங்கள 23

## சுமந்திரன் தலைமையில்

### மன்னாரில் கலந்துரையாடல்

(மன்னார்)
மன்னார் மாவட்டத்தில் இருக் கின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களை ஒன்று கூட்டி நேற்று திங்கட்கிழமை 04

## தமிழுக்கு முதலிடம் வழங்குவதை பொறுக்காதவர்கள் எப்படி தமிழர்களுக்கு தீர்வை பெற்றுத்தருவார்கள்

### முல்லையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கேள்வி

(முல்லைத்தீவு)
யாழ்ப்பாணம் விமான நிலையத் தின் பெயர்ப்பலகையில் தமிழுக்கு முதலிடம் கொடுத்ததை ஜீரணித் துக்கொள்ள முடியாதவர்கள் எவ் வாறு தமிழ் பேசும் மக்களுக்கு தீர்வினை பெற்றுத்தருவார்கள் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பினார்.
ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து நேற்று முல்லைத்தீவில் நடைபெற்ற தேர் தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு தொடர்ந்து உரையாற் றிய அவர், தமிழ் மக்கள் செறிந்து வாழும் யாழ்ப்பாணத்தில் தமிழுக்கு முதலிடம் வழங்கப்பட்ட 04

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக

## ரெலோ, புளொட் இன்று தமது முடிவை அறிவிக்கும்

ரணிலுடன் நேற்று நேரில் பேச்சு

(கொழும்பு)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங் காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டும், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இன்று தமது முடிவை அறிவிப்பதாக தெரிவித் 23

அச்சுவேலி வைத்தியசாலையில்

## சிகிச்சைக்காக சென்ற முதியவர் உயிரிழப்பு

கோபத்தில் வைத்தியரைத் தாக்கிய உறவினர்கள் 23

## என்றும் நீங்காத நினைவலைகள்

26ம் ஆண்டில்...
பாசம் நிறை தந்தை

முதலாம் ஆண்டில்...
பாசமிகு அன்னை



அமரர்
**சிவகுரு பொன்னம்பலம்**
ஓய்வுநிலை புகையிரத தலைமைக் காப்பாளர்
(Head Guard, S.L.Railways)
மலர்வு 27.05.1925 உதிர்வு: 01.05.1993

அமரர்
**பொன்னம்பலம் கண்மணி**
மலர்வு 23.03.1930 உதிர்வு: 16.11.2018

திதி: 13.05.2019

திதி: 05.11.2019

எமக்காக ஓய்வின்றி ஓடி ஓடி உழைத்தீர்கள்!
இமயத்தில் ஏற்றி வைக்க நிதம் நிதம் நினைத்தீர்கள்!
உலகில் நாம் இன்று உயர்ந்த நிலையில் வாழ்கிறோம்.
என்றும் எங்கள் இதயங்களில் அன்புடன் வீற்றிருப்பீர்.

ராணி பவன். பெரியதம்பிரான் கோவிலடி,
கம்பர்மலை, உடுப்பிட்டி வடக்கு.
021 226 5479. 021 226 5014.
021 205 5146. 077 644 1986

என்றும் உங்கள் நினைவுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(859)


# திருநெல்வேலி சந்தைக்கு நாமல் எம்.பி விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலிச் சந்தைப் பகுதிக்கு நேற்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விஜயம் மேற்கொண்டார். சந்தை வியாபாரிகளுடன் கலந்துரையாடியதுடன் அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

இவ் விஜயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டார்.

(ம-3.10)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தில் 1983ஆம் ஆண்டு பிறந்த ரோகிணி நட்சத்திரம், கிரகபாவம் 16, இடபராசி 1ம் பாதம் 10இல் சூரியன் செவ்வாய் உடைய, தனியார் வர்த்தக நிலையத்தில் பணியாற்றும் மணமகனுக்கு மணமகள் தேவை.

(765)

தொடர்புகளுக்கு:
**077 0634 154**



## வளர்மதி சனசமூக நிலையம்
### வராத்துப்பளை, பருத்தித்துறை

கற்றல் வசதி குறைந்த மாணவர்களதும், அறநெறிப் பாடசாலை மாணவர்களதும் கற்றல் வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துக்காக மேற்கொள்ளப்பட்ட மாபெரும் அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்.

| 1ம் பரிசு | 2ம் பரிசு | 3ம் பரிசு |
|---|---|---|
| 899 | 2843 | 967 |

ஆறுதல் பரிசுகள்:- A127, 1263, 2630, 935, 1210, 2752, 2521, A552, 1272, 554

- எமது சனசமூகநிலையத்தின் கல்வி அபிவிருத்தி செயற்றிட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட மேற்படி அதிர்ஷ்டலாபசீட்டு விற்பனையில் உதவி புரிந்த நிர்வாக உறுப்பினர்கள், நலன்விரும்பிகள், பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பொதுமுகாமையாளர்கள் அனைவருக்கும், பரிசில்களுக்கான அனுசரணைகளை வழங்கிய எமது கிராமத்தின் சமூகத்தொண்டர்களாகிய திரு. செல்லையா ஸ்ரீமோகன், திரு.இராசதுரை இராஜ மனோகரன், திருமதி ஞானசீலன் விஜிதா ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
- அதிர்ஷ்டசாலிகள் 31.12.2019ஆம் திகதிக்கு முன்னர் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளவும்.

தலைவர் - திரு. தி.விமலராசா 0778733783
செயலாளர் - திரு. பெ.பத்மநாதன் 0779270679
பொருளாளர் - திரு. தி.நெவில்ஸன் 0777111290 (862)



# SOLAR சிஸ்டம்ஸ்

- செலவை ஏற்படுத்திய மின்சாரம் வருமானத்தைப் பெற்றுத் தரும்
- மின் கட்டணம் இல்லை

MICRO PC SYSTEMS
Micro Power Co Systems



பண்டிகைக்கால சலுகைகள்

WARRANTY 25 YEARS WARRANTY

| 2kW SYSTEM | 3kW SYSTEM | 5kW SYSTEM | 8kW SYSTEM | 12kW SYSTEM | 15kW SYSTEM | 22kW SYSTEM | 33kW SYSTEM | 44kW SYSTEM |
|---|---|---|---|---|---|---|---|---|
| 350,000/= | 470,000/= | 750,000/= | 1,080,000/= | 1,480,000/= | 1,695,000/= | 2,200,000/= | 3,300,000/= | 4,400,000/= |
| 240 Units | 360 Units | 600 Units | 950 Units | 1465 Units | 1795 Units | 2640 Units | 3960 Units | 5280 Units |

மின்சார தடை இல்லை No Power-Cut







- Solar + Storage
- Hybrid / Off-Grid

Off-Grid 1 இலவசம்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

7 வருடங்களுக்கான தவணை கட்டண முறை

44 kW: CEB இனால் வருமானம் ரூ.116,160 (5280 x 22/-) ரூ.44 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 68,600/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 47,560/-

33 kW: CEB இனால் வருமானம் ரூ. 87,120 (3960 x 22/-) ரூ. 33 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 51,450/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 35,670/-

22 kW: CEB இனால் வருமானம் ரூ. 58,080 (2640 x 22/-) ரூ. 22 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 34,300/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 23,780/-

12 kW: CEB இனால் வருமானம் ரூ. 32,230 (1465 x 22/-) ரூ. 14.8 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 23,067/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 9,163/-

* நிபந்தனைகளுக்குட்பட்டது

KACO SMA Fronius SOLAX ENVERTECH victron energy REC Jinko Solar YINGLI SOLAR ReneSola LECO Approved

கொழும்பு - 077 3963281/ 077 3963283 / 071 0356062 / 077 3963278
யாழ்ப்பாணம் - 077 3963280 / 0777 425973 / 0777 425974 / 077 3963284
வவுனியா - 0777 763071 / 077 3963273 / 077 3963280
மட்டக்களப்பு - 071 0356069 / 071 8963280 / 071 0356072 / 077 3963281

**TIPS!!!**
Factors affecting performance of a solar PV system!
*A. Factors which are under the control of Human efforts:*
1. Solar Panels: Figures given in thé datasheet by the. panel manufacture and its accuracy of Peak power, Module efficiency, temperature co efficient.=> So request for Tier 1 brand
2. Installation: Panel's orientation and tilt, System Design, Grid quality =>Select well-trained / Certified Company for the Installation.
3. Inverter: Efficiency =>so select premium brands.

*B. Factors which are beyond the control of Human efforts:*
1. Solar irradiance (SI) available at the site
2. Ambient temperature 3. Accumulation of Dirt/Smog
4. wind speed etc.

மொத்த விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும் : 0773 076409 / 071 9963275 | E-mail: mail@micropcsystems.com | Web: www.solarpowerlk.com

No.115C, W.A. Silva Mawatha, Colombo 06. Tel: 011 4000686 | No.218, Hospital Road, Jaffna. Tel: 021 2225893 | No.66B, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 2221969 | No.115-5C, New Kalmunai Road, Kalladi, Batticaloa. Tel: 011 5640650



# குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

## கோத்தபாய திட்டவட்டம்

(வத்தளை)

**உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருக்கு எதிராகவும் தனது நிர் வாகத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பா ளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

வத்தளையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரதிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், "சர்வதேச புலனாய்வுப் பிரிவினர், இலங்கையில் இந்தத் தினத்தில் தாக்குதல்கள் நடத்தப் படவுள்ளதாக எச்சரிக்கை விடுத் தும் இந்த அரசாங்கம் அதுகுறி த்து எந்தவொரு நடவடிக்கை யையும் மேற்கொள்ளவில்லை.

இதனால்தான் இந்த இழப்பை நாம் எதிர்கொண்டுள் ளோம். நாம் அன்று முன்னெடு த்திருந்த பாதுகாப்புக் கட்டமைப் புக்களை அப்படியே கொண்டு செல்லாதமைதான் இதற்கெல் லாம் பிரதான காரணமாக இருக்கிறது.

இதற்கு ஒட்டுமொத்த அமைச் சரவையும் நிச்சயமாக பதில் கூறியே ஆகவேண்டும் நாம்வெற்றி பெற்றவுடன், நாட்டில் மீண்டும் பாதுகாப்பைப் பலப்படுத்துவோம்.

எமது ஆட்சியில் எந்தவொரு தீவிரவாதிக்கும் அடிப்படைவாதிக்கும் அனுமதி கிடையாது என் பதை இவ்வேளையில் நான் மக்களிடம் உறுதியாகக் கூறிக் கொள்கிறேன்.

மேலும், குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் எமது காலத் தில் நிச்சயமாக தண்டனை பெற் றுக்கொடுக்கப்படும் என்பதை யும் நான் கூறிக்கொள்கிறேன். அனை வரையும் நாம் கைதுசெய்து சட்டத்தை நிலைநாட்டுவோம்" என அவர் மேலும் தெரிவித் தார். (இ-7)

---

# இளைஞர்கள் மீது தாக்குதல்; கண்டித்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்






(கல்முனை)

கல்முனை- சாய்ந்தமருது பிரதேசத்தில் இளைஞர்கள் சிலர் தாக்கப்பட்டதனைக் கண் டித்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட் டமொன்று முன்னெடுக்கப்பட் டது.

சாய்ந்தமருது பிரதேசத்தின் சிவில் அமைப்புகளால் இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக் கப்பட்டது.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரி வித்து அம்பாறை மாவட்டத் தின் சாய்ந்தமருது பிரதேசத் தில் கடந்த வெள்ளிக்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர ஸின் ஏற்பாட்டில் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற் றது.

இந்தக் கூட்டத்துக்கு கட்சி யின் தலைவரும் அமைச்சரு மான ரவூப் ஹக்கீம் வருகை தரும்போது குறித்த இடத்தி ற்கு வந்த சிலர், சாய்ந்தம ருது பள்ளிவாசலுக்கு முன்பாக வைத்து இளைஞர்கள் சில ரைத் தாக்கியதாக குற்றம்சாட்ட ப்பட்டது.

இந்நிலையிலேயே இளை ஞர்கள் தாக்கப்பட்டதைக் கண் டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடத் தப்பட்டது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர், "நீதியான நியாய மான தேர்தல் சாய்ந்தமருதில் நடத்தப்பட வேண்டும்.

கடந்த வெள்ளிக்கிழமை, சாய்ந்தமருது பிரதேச இளை ஞர்களை தாக்கிய குண்டர் குழுவைக் கைது செய்ய வேண் டும்.

தேர்தல் பிரசாரங்களின் போது அரச சொத்துக்களை பயன்படுத்துவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்" என சுலோகங்களை ஏந்திய வாறு கோஷங்களை எழுப்பி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

---

# இந்தச் சந்தர்ப்பத்துடனேயே தமிழ் - முஸ்லிம் மக்கள் ஐக்கியப்பட்டுவிட வேண்டும்

## முன்னாள் முதலமைச்சர் அறைகூவல்

(ஏறாவூர்)

இந்தச் சந்தர்ப்பத்துடனேயே தமிழ் மக்களும் முஸ்லிம் மக் களும் சிறுபான்மை இனங்கள் ஐக்கியப்பட்டு விடவேண்டும் என தான் அறைகூவல் விடுப்பதாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் தெரிவித் தார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து ஏற் பாடு செய்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரசாரப் பொதுக்கூட்டம் ஏறாவூர் நகரில் நேற்றுத் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

எதிர்வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பது என்று முடிவு சொல் லப்படும் என்பதற்கமைவாக ஜனாதிபதித் தேர்தலில், புதிய ஜனநாயக முன்னணியின் வேட் பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குவதற்கு, தமிழர சுக் கட்சி, ஏகமனதாகத் தீர்மானி த்துள்ளதாக தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஏனைய சிறுபான்மைக் கட் சிகள், தங்களது முடிவுகளை ஏற்கனவே அறிவித்துவிட்ட நிலை யில், தமிழரசுக்கட்சி மட்டும், ஜனாதிபதி வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்கள் வெளிவரும் வரை காத்திருந்தது. தற்போது தங் களது முடிவை அவர்கள் அறிவி த்து விட்டார்கள்.

இதுவொரு வரலாற்றுத் திருப் பமாகும். இந்த அறிவிப்புக் கிடை த்ததும் தமிழ் மக்கள் மாத்திர மல்ல முஸ்லிம் மக்களும் மகிழ் ச்சியடைந்துள்ளனர். இந்த மகி ழ்ச்சியின் உள்ளார்ந்தம் என்ன வெனில் கடந்த ஜனாதிபதித் தேர் தலிலும் இனவாதிகளைத் தோற் கடிக்கும் சிறுபான்மையினங் கள் ஓரணியில் நின்று அரசியல் அதிகாரத்தைப் பிரயோகித்தார் கள். இந்த நாட்டில் இன வாதிக ளைத் தோற்கடிக்கும் அவ்வா றான சிறுபான்மையினங்களின் ஒற்றுமை இனிமேலும் தொடர வேண்டும் என்பதை இப்போது தமிழரசுக் கட்சியினர் எடுத்துள்ள ஏகோபித்த முடிவு எடுத்துக் காட் டுகிறது. இனவாதம் இந்த நாட்டு க்குச் சாபக்கேடானது என்பதைச் சிறுபான்மையினரே உலகுக்கு உரத்த தொனியில் உணர்த்த இது சிறந்ததொரு வாய்ப்பாக அமைந் துள்ளது. ராஜபக்ஷக்களின் முகா மில் தஞ்சமடைந்துள்ளவர்களின் தனிப்பட்ட குணநலன்களை உற்றுக்கவனித்தால் அவர்களி டம் இனவாதத்தைத் தவிர வேறெ துவும் இல்லை. அவர்களிடம் இயல்பாகவே குடிகொண்டுள்ள இனவாதம் இந்த நாட்டையும் அவர்கள் சார்ந்துள்ள சமூகத் தையும் அழிவுக்கு இட்டுச் செல் லவே வழிவகுக்கும் என்பதை அந்த மூடர்கள் அறியமாட்டார் கள். உண்மையில் இந்த அறிவி லிகள் தங்கள் சமூகத்தின் மீது பற்று வைப்பார்களாயின் அடுத்த சமூகத்தை அரவணைத்துப் போவதே சிறந்த மாற்றுத் தீர்வாக இருக்கும். ஆனால் அந்த ஆக்க பூர்வமான பரந்துபட்ட சிந்தனை இந்த அற்பத்தனமான அறிவிலிக ளிடம் வந்து சேரும் என்பதற்கு வாய்ப்பே இல்லை. எனவே, எல்லா சமூகங்களிடத்திலும் நட மாடித் திரியும் இனவாதிகளை ஓரங்கட்ட இந்தத் தேர்தலை ஒருவாய்ப்பாகப் பயன்படுத்தி நாட்டை இணைந்து அபிவிருத் திப் பாதையில் இட்டுச்செல்வோம். ஜனநாயகப் பாதையையும் அமை தியையும் விரும்பும் பெரும்பா லான மக்கள் சஜித் பிரேமதாஸ வுக்கே வாக்களிப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

# தமிழர்களின் சக்தி என்பது தமிழ்க் கூட்டமைப்பு அல்ல

## திலங்க சுட்டிக்காட்டு

(ஹோமாகம)

முன்னாள் ஜனாதிபதி சந் திரிகா பண்டாரநாயக்க குமார துங்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பதற்கு எடுத்த தீர்மா னம் தொடர்பில் தான் கவலைய டைவதாக பாராளுமன்ற உறு ப்பினர் திலங்க சுமதிபால தெரி வித்தார்.

ஹோமாகம பகுதியில நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சந்திரிகாவின் தீர்மானம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற ரீதியிலோ அல்லது அரசியல் ரீதி யிலோ இல்லை எனவும் அது அவரின் தனிப்பட்ட தீர்மா னம் எனவும் திலங்க தெரிவித தார்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுதியாக இடம்பெ ற்ற தேர்தலில் 35 வீத வாக்குக



ளை மாத்திரமே பெற்றுக் கொண் டதாகவும் அதனால் தமிழர்க ளின் சக்தி என்பது தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு என சஜித் பிரேமதாஸ தவறாக நினைத்து விட்டதாகவும் அவர் தெரிவித் தார். (இ-7)



# டபிள்யூ டி.ஏ பைனலில் கிண்ணத்தை வென்றார் ஆஷ்லே பார்டி

டென்னிஸ் வீராங்கனைகளுக்கு மிக முக்கியமான தொடராக பார்க்கப்படும் டபிள்யூ.டி.ஏ பைனல்ஸ் தொடர். இனிதே நிறைவு பெற்றுள்ளது.

தரவரிசையில் முதல் எட்டு இடங்களில் மட்டும் உள்ள வீராங்கனைகள் பங்கேற்கும் இத்தொடர், கடினத் தரையில் நடைபெறும் ஒரு தொடராகும்.

இத்தொடரில் பங்கேற்ற 8 வீராங்கனைகளும் ரெட், பர்பிள் என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு பிரிவில் உள்ள நான்கு வீராங்கனைகளும் மற்ற வீராங்கனைகளுடன் தலா ஒருமுறை மோத வேண்டும். முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் வீராங்கனைகள் அரையிறுதிக்கு முன்னேறுவார்கள்.

இதற்கமைய இத்தொடரின் இறுதிப் போட்டிக்கு உலகின் முதல்நிலை வீராங்கனையான அவுஸ்ரேலியாவின் ஆஷ்லே பார்டியும், 8ஆம் நிலை வீராங்கனையான உக்ரைனின் எலினா ஸ்விடோலினாவும் பலப்பரீட்சை நடத்தினர்.

ரசிகர்களின் உச்ச விறுவிறுப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், இரண்டு வீராங்கனைகளும் விட்டுக் கொடுக்காமல் போட்டியிட்டனர்.

இதில் பரபரப்பாக நடைபெற்ற முதல் செட்டில். 6-4 என ஆஷ்லே பார்டி முதல் செட்டைக் கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், எலினா ஸ்விடோலினா மீண்டெழுந்து பதிலடி கொடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், அந்த எதிர்பார்ப்புக்களை தவிடு பொடியாக்கிய ஆஷ்லே பார்டி, செட்டை 6-3 என கைப்பற்றி சம்பியன் கிண்ணத்துக்கு முத்தமிட்டார்.

நடப்பு ஆண்டு கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில், முதல் முறையாக சம்பியன் பட்டம் வென்ற ஆஷ்லே பார்டி, நடப்பு ஆண்டு சிறப்பான ஆண்டாக அமைந்துள்ளது.

## தமிழுக்கு முதலிடம் வழங்குவதை....

வதை எதிரணியினாரல் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. இந்த விவகாரத்தை நாட்டுப்புற சிங்கள மக்கள் ஊதிப்பெருப்பித்து வாக்குச் சேர்க்கும் வேலையை அவர்கள் செய்துகொண்டிருக்கின்றனர்.

சிறுபான்மையினரை இலக்குவைத்து இனவாத தேர்தல் பிரசாரம் செய்கின்ற கும்பல்கள் எதிரணியைச் சூழ்ந்து கிடக்கின்றன. தமிழ், சிங்கள மொழிகளுக்கு சமஅந்தஸ்து என்பது இலங்கை அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம் என்பது இவர்களுக்கு தெரியாமலா இந்த வேலையை செய்துகொண்டிருக்கிறார்கள்.

காணாமலாக்கப்பட்டோரை கண்டுபிடிப்பதற்கான அலுவலகம் ஒன்றை அமைக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கு அறிவுறுத்தியது. அந்த அலுவலகம் அமைவதைக் கூட எதிரணியிலுள்ளவர்கள் எதிர்த்தனர். இவர்கள் எந்த முகத்துடன் உங்களிடம் வாக்கு கேட்கிறார்கள் என்று நீங்கள் கேட்கவேண்டும்.

யுத்த காலத்தில் பலவந்தமாக காணாமலாக்கப்பட்டோர் குறித்து. ஊடகவியலாளர் ஒருவர் எதிரணி வேட்பாளரிடம் கேட்டபோது அவர் வாய்விட்டு சிரிக்கிறார். சகோதரரை திரும்பிப் பார்க்கிறார். அவரிடமிருந்து பதில் வரவில்லை. நான் யுத்தம் செய்யவில்லை, இராணுவ தளபதிதான் யுத்தம் செய்தார் என்ற அவரின் பதில் மிகவும் கோழைத்தனமானது.

நாட்டை பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுத்தாக நெஞ்சைநிமிர்த்தி பிரசாரம் செய்பவர்கள். பிரச்சினைகள் என்று வரும்போது நான் யுத்தம் செய்யவில்லை என்று கோழைத்தனமாக பதிலளித்து தப்பித்துக்கொள்ள முயற்சிக்கின்றனர். இப்படியானவர்களின் கைகளில் நாட்டின் ஆட்சியை ஒப்படைக்க முடியுமா என்று சிந்தித்துப் பாருங்கள்.

முன்னாள் ஜனாதிபதியின் புதல்வர் முல்லைத்தீவு மாவட்டத்தை தத்தெடுத்து. அங்கு தனது முகாமை அமைத்திருக்கிறார். படிப்படியாக புதிய குடியேற்றங்கள் நடைபெற்று, உங்களுக்கு தெரியாமலேயே காணி அபகரிப்பு நடைபெறும். இந்த விடயத்தில் நீங்கள் மிகவும் உசாராக இருக்கவேண்டும் என்றார். (ம-3)

## சுமந்திரன் தலை....

மாலை மன்னார் தனியார் விடுதியில் எதிர்வரும் 16 ஆம் திகதி இடம்பெற இருக்கின்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

தமிழத் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் ஏற்பாட்டில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும்,கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன்,

மக்களிடத்தில் இருந்து அவர்கள் எழுப்பிய பல விதமான கேள்விகளுக்கும்,விமர்சனங்களுக்கும் பதில் வழங்கும் வகையிலும், இத்தேர்தலிலே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் அணுகு முறைகள் சம்பந்தமாகவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாங்கள் எடுத்த தீர்மானம் எப்படியான பின்னணியிலே எடுக்கப்பட்டது என்பது தொடர்பில் விளக்கும் முகமாகவும் இந்த கூட்டம் இடம் பெற்றது. (ம-3,285)

## 2,770 தேர்தல் முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 2,770 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 08 ஆம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் வரை கிடைத்துள்ள குறித்த முறைப்பாடுகளில் தேர்தல் விதி மீறல்கள் தொடர்பில் 2651 முறைப்பாடுகளும், வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 24 முறைப்பாடுகளும் மற்றும் 95 வேறு முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-3)

## தமிழ் தேசியக்....

பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எவ்வித உடன்படிக்கைகளோ, இணக்கப்பாடுகளோ இன்றி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு தெரிவிப்பதற்கு கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## யாழில் பொலி....

இந்நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-3,10)

## சமூக மாற்றத்....

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொருளாதார தரவுகளின் ஆய்வு அறிக்கைகளின் ஊடாக இலங்கை ஒரு ஏழை நாடு என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவரோனும் ஒருவர் ஏதாவது வியாபாரத்திற்காக கடன் பெற்று கஷ்டத்தில் இருந்தால், அவர் அதில் இருந்து மீண்டு வருவதற்காக மீண்டும் கடன் பெற்று நல்ல வியாபாரம் ஒன்றை முன்னெடுப்பதன் ஊடாக கடனில் இருந்து மீள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## நொதேண் வி.கழகத்தின் வாணி விழாவும் தீபாவளிக் கொண்டாட்டமும்







நொதேண் விளையாட்டுக் கழகத்தின் வாணி விழாவும் தீபாவளிக் கொண்டாட்டமும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மன்றத்தில் (கலா மண்டபம்) நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வடமாகாண திறைசேரி பிரதிப் பிரதம செயலாளர் நிதி ஆர்.பத்மநாதன், கௌரவ விருந்தினர்களாக நல்லூர் கோட்டக்கல்விப்பணிப்பாளர் எப்.எக்ஸ். அன்ரன், தொழிலதிபர் ஈ.எஸ்.பி நாகரட்ணம், யா/செங்குந்த இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க உபதலைவர் (கனடா) திருமதி நாகேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழரசுக்கட்சி மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை

## மாநாட்டில் டக்ளஸ் சுட்டிக்காட்டு கோத்தாவுக்கு வாக்களிக்க கோரிக்கை







(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலோ அல்லது தமிழரசுக் கட்சி மீதோ மக்களின் நம்பிக்கை குறைவடைந்த நிலையில் என்னையும் எனது கட்சியையும் நம்பி வாக்களித்தால் நிச்சயம் மக்கள் வெற்றியடைவார்கள் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் விசேட மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வை ஒளிமயமாக்குவதற்காக ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் பல கோரிக்கைகளை முன்வைத்தேன்.

மொட்டுச் சின்னத்தில் போட்டியிடும் கோத்தபாய ராஜபக்ஷவை வெற்றிபெற வைப்பதன் மூலம் நான் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10-101)

## யாழ்.பல்கலை.வரலாற்றில் முதற்தடவையாக மத்திய வங்கி ஆளுநர் சிறப்பு விரிவுரை



(யாழ்ப்பாணம்)

பூளோக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு அபிவிருத்திப் பொருளியல் நிபுணர்கள் கலந்து கொள்ளும் விருந்தினர் விரிவுரைத் தொடர் (Guest Lecture Series) ஒன்றை பொருளியல் துறையைச் சேர்ந்த அபிவிருத்திப் பொருளியல் 2020 வகுப்பினர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஒழுங்கு செய்துள்ளனர்.

இத் தொடரின் ஐந்தாவது விருந்தினர் விரிவுரையை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி நாளை 6 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 11.30 மணிவரை "இலங்கையின் முன்னேற்றம் மற்றும் செழிப்பை மழுங்கச் செய்யும் பேரண்ட பொருளாதார அழுத்தத்தை நிவர்த்தி செய்வதற்கான கொள்கை வகுப்பு கட்டமைப்பை வலுப்படுத்தல்" (Strengthening Framework for Policy Formulation to address the Macro- Economic Stress which has undermined Progress and Prosperity in Sri Lanka) எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆற்றுவார். (இ-5)



திரு இருதய கல்லூரியில் கல்வி கற்று ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஒருவருக்கு அப்பாடசாலையின் பழைய மாணவனும் இத்தாலியில் வசிப்பவருமான கிருபாகரனால் பாடசாலை அதிபர் ராகவன் ஊடாக நேற்றுப் பணப்பரிசு வழங்கப்பட்டது. (படம்:-மகாலிங்கம் செய்தியாளர்)

## ஐந்து தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகளை ஏற்றார் சஜித்

### பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழரசுக் கட்சி புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பதன் மூலம் ஐந்து தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகளை சஜித் ஏற்றுக்கொண்டுள்ளாரென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்க 14 சிறு அரசியல் கட்சிகள் உள்ளடங்கலாக பல்வேறு அமைப்புக்களுடன் நேற்றுத் திங்கட்கிழமை பொதுஜன பெரமுன புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்க்கட்சிகள் 13 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்திருந்தன. நாட்டின் அரசியல் யாப்பில் இரண்டாம் சரத்தை நீக்கி ஒற்றையாட்சியை இல்லாது செய்தல், இராணுவத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துதல், வடக்கு- கிழக்கு இணைப்பு, பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படுதல் போன்ற கோரிக்கைகள் அதில் அடங்குகின்றன.

இது நாட்டுக்கு உகந்ததல்ல என்று தெரிவித்தே அதனை கோத்தபாய ராஜபக்ஷ நிராகரித்தார். ஆனால் தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதன் மூலம் அவர் அந்தக்கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இதன்மூலம் அவர் வடக்கிற்கு ஒருமாதிரியும் தெற்கிற்கு ஒருமாதிரியும் நடந்து கொள்கிறார் என்பது புலப்படுகிறது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அபிவிருத்தி ஒப்பந்தங்களை செய்து கொண்ட சிவில் அமைப்புக்கள் உரிய கொடுப்பனவுகளை பெற நடவடிக்கை எடுக்கவும்- தவிசாளர் நிரோஷ்

(யாழ்ப்பாணம்)

ஊரெழுச்சித் திட்டத்தில் பணிகளை பொறுப்பெடுத்துள்ள சிவில் அமைப்புக்கள் தாமதமின்றி இறுதிக் கொடுப்பனவுகளை பெறத்தக்க வ்கையில் செயற்படவேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்தார்.

நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் பற்றி கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,வலிகாமம் கிழக்கில் இவ் ஆண்டில் எமது பிரதேச அபிவிருத்திக்குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் சிபாரிசில் 300 மில்லியன் ரூபாய் பெறுமதியான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அவற்றில் வேறு பிரதேசங்களில் இல்லாதவாறு தமது பகுதியிலேயே வீதி அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இதுபோன்று கடந்த ஆண்டின் இறுதியில் நாம் சாமர்த்தியமாகச் செயற்பட்டதன் விளைவாக நூறு மில்லியன் ரூபா பெறுமதியான வீதிகளை இத் திட்டத்தின் வாயிலாக அமைத்துள்ளோம்.

செயற்பாட்டின் அடிப்படையிலும் நிதி இயலுமையின் அடிப்படையிலும் வலுப்படுத்த வேண்டும் என்ற தூரநோக்குச் சிந்தனைகளின் அடிப்படையில் சிவில் சமூக அமைப்புக்களிடமே அபிவிருத்தி வேலை ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

சிவில் அமைப்புக்கள் வீதிகளை உரிய முறையில் அமைத்திருந்தபோதும் அவ் வேலைகளை இறுதிப்படுத்துவதற்கு, மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள சிறிய வேலைகளில் கவனம் செலுத்தாமை பொதுவான பிரச்சினையாக இனங்காணப்படுகின்றது.

வீதிகளின் விளிம்புகளில் வீதிப்பாதுகாப்பிற்காக இடப்படும் கிரவல் அணைகளை போடாமை, அபிவிருத்தித் திட்டத்தின் வெளிப்படைத் தன்மைக்காக நடப்படும் பெயர்ப்பலகைகளை போடாமை போன்றவற்றின் காரணமாக இறுதிக்கொடுப்பினவிற்கு பிரதேச சபையினால் சிபாரிசு செய்ய முடியாமல் உள்ளது.

இதனால் எமது பிரதேசத்திலும் அபிவிருத்திகளை நிர்வாக ரீதியில் வேலை முன்னேற்றத்தினை உரியவாறு காட்டுவதில் சிக்கல்கள் உள்ளன. நீங்கள் விரைவாக வேலையை முடிவுறுத்துகின்றபோது அதற்காக பணத்தினை உடனடியாக விடுவிப்பதற்கான இருப்பினை மாவட்ட செயலகம் கொண்டிருப்பதை அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அசமந்தமாக இருக்கின்ற சிவில் அமைப்புக்களால் எதிர்காலத்தில் எமது கிராமத்திற்குக் கிடைக்க வேண்டிய அபிவிருத்திகளை இழக்க வேண்டி ஏற்படும் என்பதை கிராமத்தின் வளர்ச்சியில் ஆர்வமாக இருக்கின்ற சகலரும் கவனம் செலுத்தவேண்டும். எனவே அபிவிருத்தி ஒப்பந்தங்களைச் செய்து கொண்ட சகல சிவில் அமைப்புக்கள் தாமதமின்ற எதிர்வரும் ஓரிரு நாட்களுக்குள் இறுதிக்கொடுப்பனவுகளை பெற நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (9)





யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் சிறுவர் தின நிகழ்வுகள் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட நல்லிணக்கபுர கிராமத்தில் நட்பான நாடு என்னும் தொனிப்பொருளில் கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிராம பொதுநோக்கு மண்டபத்தில் நிறுவன இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் தலைமையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்களாக வடமாகாண நன்னடத்தை பாதுகாப்பு மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வருபன், தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.சிவசிறி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மாணவிக்கு துவிச்சக்கரவண்டி



(யாழ்ப்பாணம்)

நெல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் உதவும் கரங்கள் அமைப்பினர் ஊடாக இராசரத்தினம் மகேஸ்வரி தம்பதியரின் பிள்ளைகளால் கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது. (இ-5)

## மாணவர் விடுதி திறப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஆண் மாணவர்கள் விடுதி திறப்பு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ, வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், விடுதி அன்பளிப்பாளர் திருமதி யோகேஸ்வரி சிவகணேசநாதன், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## ஜனாதிபதித் தேர்தலும் தமிழர்களும் யாழில் "வித்தகம்" கருத்துக்களம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் "வித்தகம்" கருத்துக்களம் "ஜனாதிபதித் தேர்தலும் தமிழர்களும்" எனும் தலைப்பில் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் நல்லூர் கம்பன் கோட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அரசியல் துறை கலாநிதி ரி.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை முன்னாள் அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன், கம்பன் கழக ஸ்தாபகர் கம்பவாரிதி இ. ஜெயராஜ், வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் சு.டிவகலாலா ஆகியோர் நெறிப்படுத்துவர்.

யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறை கலாநிதி எஸ்.சிவகுமார், வடமாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, தமிழ் மக்கள் கூட்டணி ஊடகப் பேச்சாளர் க.அருந்தபாலன், காலைக்கதிர் ஆசிரியர் ந.வித்தியாதரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (இ-5)

## உங்கள் ஜென்ம நட்சத்திரங்களும் துல்லியமான பலன்களும்

## மூலம் நட்சத்திரக்காரர்களின் பலன்கள்

அதிர்ஷ்ட ஜோதிடம்

மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடைய இராசி-தனுசு ஆகும். தனுசு இராசியின் அதிபதி-குரு ஆவார். அதன் சின்னம்-வில் ஆகும். மூலம் நட்சத்திரத்தின் அதிபதி கேது ஆவார். அதன் சின்னம் ஆண்நாய் ஆகும். எனவே இவர்கள் ஓரளவு நேர்மையாகவும் நல்ல புத்திசாலிகளாகவும் இருப்பார்கள். நேர்மைக்காகப் போராடக்கூடிய சுபாவமும் இவர்களிடம் உண்டு. கொஞ்சம் முன்கோபமும் பிடிவாதமும் இவர்களிடம் உண்டு. அதே சமயம் வஞ்சகம், சூது, கபடம், பிறரை ஏமாற்றுதல் போன்ற குணங்களும் இவர்களிடம் உண்டு. ஆனால் இவை வெளியில் தெரியாதவாறு இவர்கள் மறைத்து விடுவர் எனலாம். தாய்ப்பாசம், தந்தைப் பாசமுடையவர்கள். ஆனால் இவர்களுடைய இல்வாழ்வில் சிறு சிறு சண்டை சச்சரவுகள் வந்து விலக இடமுண்டு.

பெரும்பாலும் இவர்கள் மரியாதையாக நடந்து கொள்வர். குழந்தைப் பாசமுடையவர்கள். ஆனால் இவர்களது இல் வாழ்வில் சிறு சிறு சண்டை சச்சரவுகள் வந்து விலக இடமுண்டு.

பெரும்பாலும் இவர்கள் சொந்தத் தொழில் செய்து ஜீவனம் நடத்த நேரலாம். யாருக்கும் இவர்கள் அடங்கிப் போகமாட்டார்கள். எந்த விடயத்திலும் இவர்கள் ஒரு தலைவர் போல செயற்பட நேரிடும்.

பெரும்பாலும் இவர்கள் அடிவயிற்றுக் கோளாறு, மூட்டுவலி, கால்வலி முதலியவற்றால் அவதியுற நேரிடும். இவர்களுக்கு எந்தக் காரியமும் தடைப்பட்டு தாமதமாகி வெற்றியில் முடியும். கொஞ்சம் பொறாமைக் குணமும் இவர்களிடம் உண்டு. பெரும்பாலும் இவர்கள் அழகாகவும் ஓரளவு நல்ல நிறமாகவும் இருப்பார்கள். நல்ல கல்வி ஞானமுடையவர்கள். கல்வியில் உயர் பட்டம் பெறும் அதிர்ஷ்டம் உண்டு. உயர்ந்த இலட்சியமுடையவர்கள்.

தனது இலட்சியம் நிறைவேற கடுமையாகப் போராடுவர் என்பது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் இவர்கள் தங்களது இலட்சியப் பாதையில் வெற்றி காண்பார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. பணம் சம்பாதிப்பதிலும் இவர்கள் கெட்டிக் காரர்களாக இருப்பார்கள்.

## இராசி பலன்

**மீனம்:** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் விரும்பியபடியே கைகூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மேடம்:** தொலைபேசியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**இடபம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர் வருகையுண்டு, 'எதிர்ப்பாக இருந்தவர்கள் இனக்கத்துடன் நடந்து கொள்வர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்:** குறைவாகப் பேசினாலும் குறை கூறாமல் இருப்பது நல்லது, தொழில் வளர்ச்சியில் சிறு குழப்பங்கள் தோன்றி மறையலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**கும்பம்:** ஊர் மாற்றம் இடமாற்றம் என்பன இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணமொன்று இடம்பெறலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூசம் | | |
| சந் | | | |
| சனி.<br>குரு.<br>கேது | சுக் | சூரி.<br>புத | செவ் |

05.11.2019

ஐப்பசி 19, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

அட்டமி முற்பகல் 7.52 மணிவரை

திருவோணம் காலை 6.39 மணிவரை

சுபநேரம் 10.34-12.04 மணிவரை

இராகுகாலம் 3.04-4.34 மணிவரை

அட்டமி-நவமி

வளவன்

**கடகம்:** எண்ணியது நிறைவேறும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, உணர்ச்சிவசப் படுவதை தவிர்ப்பது நல்லது, செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள்.

**மகரம்:** திடீர் பயணங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், நன்மைகள் நாடி வரும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**தனுசு:** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்:** விருந்தினர் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்:** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், உறவினர் வழியில் அனுகூலமுண்டு, யோகமான நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி:** பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மைகள் நடைபெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு, வியாபார விருத்தியுண்டு.

# நாட்டைப் பாதுகாப்பதல்ல அரசாங்கத்தை பாதுகாப்பதே ராஜபக்ஷ குடும்பத்தின் நோக்கம்

## ஹக்கீம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ராஜபக்ஷ குடும்பம் ஆட்சியைக் கைப்பற்றினால்தான் நாட்டின் பாதுகாப்பு நிச்சயிக்கப்படும் என்று பேசுகின்றனர். ஆனால், அவர்களது ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பு எனக்கூறி அவர்களது அரசாங்கத்தையே பாதுகாத்தனர்.

அவர்களது இலக்கு நாட்டை பாதுகாப்பதல்ல, அவர்களது அரசாங்கத்தை பாதுகாப்பதே அவர்களது நோக்கமாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை புல்மோட்டையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, வட, கிழக்கில் 'வாழும் தமிழ், முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் சிறுபான்மை கட்சிகள் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுத்துள்ளன. அகில இலங்கை தமிழரசுக் கட்சியும் அதன் ஆதரவை சஜித் பிரேமதாஸவுக்கு வழங்குவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

கடந்தகால தேர்தல்களில் தெற்கிலுள்ள சிங்கள மக்களின் வாக்குகள் ஒட்டுமொத்தமாக ராஜபக்ஷ குடும்பத்துக்கு எழுதிக் கொடுத்ததாக பேசினார்கள். ஆனால், நிலைமை இப்போது தலைகீழாக மாறியுள்ளது. அவர்களை நோக்கி அச்சம் பீடித்துள்ளது. செல்கின்ற இடமெல்லாம் இப்போது எமது இளம்வேட்பாளருக்கு அமோக வரவேற்புக் கிடைக்கின்றது.

இப்படியான சாதக நிலைமை உருவாகும் என்பதை நாங்கள் முன்னரே அறிந்திருந்தோம். ஐக்கிய தேசியக் கட்சியின் அசல் வேட்பாளர் ஒருவரினால் கடந்த 30 வருடங்களாக ஜனாதிபதி ஆசனத்தை எட்டிப்பிடிக்க முடியவில்லை. 2005ஆம் ஆண்டு களமிறங்கிய ரணில் விக்கிரமசிங்க மிகவும் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவினார்.

தமிழ் மக்கள் வாக்களிப்பதை விடுதலைப்புலிகள் இயக்கம் தடுத்தமையே இதற்கு பிரதான காரணமாகும். இதன் காரணமாகவே, மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் கதிரையில் அமர்ந் தார். 1977இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடித்தது.

பின்னர் 1983 ஆம் ஆண்டு கலவரம் மற்றும் 1986ஆம் ஆண்டில் ஜே.வி.பி. கலவரம் போன்றவற்றால் நாட்டின் ஸ்திரத்தன்மை கேள்விக்குட்படுத்தப் பட்டது. பாதுகாப்பு தொடர்பில் மிக மோசமான பின்னடைவை சந்தித்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுமா?என்பதில் பலருக்கும் சந்தேகம் இருந்துவந்தது.

1988இல் ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டபோது மக்களின் நிலைப்பாடு மாற்றமாக இருந்தது. நீண்ட காலமாக ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி மீது கொண்ட வெறுப்பின் காரணமாக அவருக்கு பாரிய சவால்கள் இருந்தன.

அத்தனை சவால்களையும் வெற்றிகொண்டு, ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். தற்போதைய ஆட்சியில் மக்களுக்கு விமர்சனங்கள் இருக்கின்ற நிலையில் சஜித் பிரேமதாஸவுக்கு வெற்றி கிட்டுமா என்று சிலர் நினைக்கலாம். அன்று அவருடைய தந்தை இதை விட மோசமான நிலையில்தான் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி கண்டார். அவருக்கு முஸ்லிம் காங்கிரஸ் வழங்கிய மறைமுகமான ஆதரவினால்வெற்றிபெற்றார்.

அதேபோல், முஸ்லிம் காங்கிரஸ் தற்போது பகிரங்கமாக ஆதரிக்கும் சஜித் பிரேமதாஸவும் வெற்றிபெறுவார் என்பது தெளிவாக தெரிகிறது. இதனை ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தலாக மக்கள் பார்க்கவில்லை. களமிறக்கப்பட்டுள்ளவேட்பாளர்களின்ஆளுமை, அந்தஸ்து பற்றித்தான் மக்கள் பார்க்கின்றனர். நாட்டின் இறையாண்மை, பாதுகாப்பு ஆகியவற்றை வெளிநாடுகளில் அடகுவைக்காத ஆளுமையொன்று ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தேவை என்ற எதிர்பார்ப்பில் தெற்கில் வாழும் சிங்கள மக்கள் இருக்கின்றனர்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் இவ்வாறே தெற்குவாழ் மக்களை ஏமாற்றிக்கொண்டு வந்தனர். தாங்கள் ஆட்சியை கைப்பற்றினால் தான் பாதுகாப்பு நிச்சயிக்கப்படும் என்ற ஆணவத்தில் எதிரணியினர் பேசுகின்றனர். ஆனால், அவர்களது ஆட்சிக்காலத்தில் பாதுகாப்பு எனக்கருதி அவர்களது அரசாங்கத்தை பாதுகாப்பதில்தான் தங்களது முழுக் கவனத்தையும் செலுத்தினார்கள். அவர்களது இலக்கு நாட்டை பாதுகாப்பதல்ல.

தமது அரசாங்கத்தை பாதுகாக்கவும், ஆட்சி நீடிப்புக்காக பாதுகாப்புத் துறையினரை படைகளாக பயன்படுத்தவும் அவர்கள் திட்டம் தீட்டி செயற்பட்டதை அவதானித்தோம். யுத்தம் முடிந்த கையோடு மறு யுத்தம் ஆரம்பிக்கப்பட வேண்டும். இல்லையெனில் மக்களின் அவதானம் திசைதிரும்பிவிடும் என்று சிந்தித்தார்கள்.

விடுதலைப் புலிகளை தோற்கடித்துவிட்டோம் என்று நிறுத்தாமல், முழு தமிழர்களை தங்களது சப்பாத்து கால்களுக்குள் போட்டு நசுக்கியே அரசியல் செய்தார்கள். யுத்த வெற்றியுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்து, மக்களை பீதியில் வைத்திருக்க வேண்டும் என்ற பாங்கிலேயே அவர்களது செயற்பாடுகள் இருந்தன.

எமது ஆட்சியில் எல்லோருக்கும் பூரண சுதந்திரம் கொடுத்துள்ளோம். ஊடகவியலாளர்களுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. வெள்ளை வான் கலாசாரம் இல்லை.

மக்களின் பிரச்சினைகள் யாவும் சஜித் பிரேமதாஸ ஆட்சியில் தீர்த்து வைக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. எதிரணியின் போலித்தனமான விடயங்கள் யாவும் தற்போது அம்பலத்துக்கு வந்துவிட்டன.

நாட்டின் தேசிய ஒற்றுமை, சமத்துவம், இறையாண்மை போன்றவற்றை பாதுகாத்துகொள்வதற்கும் சிறுபான்மை மக்கள் மத்தியிலுள்ள அச்சத்தைப் போக்குவதற்கும் பெரும்பான்மை மக்கள் மத்தியில் நம்பிக்கை கொண்ட வேட்பாளராக சஜித் பிரேமதாஸ விளங்குகின்றார். அவரின் வெற்றிக்காக அனைவரும் பாடுபடுவோம் என மேலும் தெரிவித்தார். (ஐ)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன கோரிக்கை வைத்தாலும் ஐ.தே.க. தலைசாய்க்கும்

## விஜயதாஸ விளாசல்



(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருக்கின்றமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம். ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன கோரிக்கைகளை முன்வைத்தாலும் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தலைசாய்க்கும் என்று மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை சிறுபான்மை மக்களின் வாக்குகள் தீர்மானித்தாலும் கூட இம்முறை தேர்தலில் அது நடக்காது. பெரும்பான்மை வாக்குகளில் கோத்தபாய ராஜபக்ஷ வெற்றி பெறுவார். ஆனாலும் இதில் கிறிஸ்தவ மக்களின் முழுமையான வாக்குகள் கோத்தபாய ராஜபக்ஷவிற்குக் கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்தார். தற்கால அரசியல் நகர்வுகள் குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த காலத்தில் இருந்து நிலங்களை சர்வதேசத்திற்கு விற்கும் கொள்கை மட்டுமே கையாளப்பட்டது. உடன்படிக்கைகள் மூலமாக துறைமுகங்கள், காணிகள் வெளிநாடுகளுக்கு கொடுக்கப்பட்டன. இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட தீர்மானங்களே அதிகமாக இருந்தன.

எனினும் நான் சிறிது காலம் பொறுத்துக்கொண்டு அரசாங்கத்தில் இருந்தேன். ஜனாதிபதி கேட்டுக்கொண்ட காரணிகளுக்கு அமைய கல்வி அமைச்சைப் பொறுப்பேற்று பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தேன்.

இந்த அரசாங்கத்தில் உள்ள அமைச்சரவை மிகவும் பலவீனமான அமைச்சரவையாகும். நாட்டுக்கும் மக்களுக்கும் தேசிய கொள்கைக்கும் அமைவாக எந்த தீர்மானமும் எடுக்கவில்லை. ஒரு சில அமைச்சர்கள் தமக்கு தேவையான நபர்கள் குறித்து அவர்களுக்கு சாதகமாக செய்ய வேண்டிய விடயங்கள், நிலங்களை விற்கும் நடவடிக்கைகள் என்பன குறித்து மட்டுமே பேசினர்.

அம்பாந்தோட்டை துறைமுகம் விற்கப்பட்டிருக்காவிட்டால் தாக்குதல் இடம்பெற்றிருக்காது. குண்டுத் தாக்குதல் இடம்பெற பிரதான இரண்டு காரணிகள் உள்ளன. தகுதியற்ற பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமித்ததுடன் ஒரு சில மோசமான அதிகாரிகளுக்கு பொறுப்புக்களைக் கொடுத்தனர். அரசியலமைப்பு சபையில் நான் அப்போதும் எதிர்த்தேன். எனினும் பிரதமர் என்னைத் தடுத்தார். ஜனாதிபதியும் தவறு செய்துள்ளார். ஹேமசிறி பெர்னாண்டோவிற்கு அதிகாரத்தைக் கொடுத்தமை தவறாகும்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவுக்கு கொடுத்து பல நாடுகளின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டோம். இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், அமெரிக்கா ஆகிய அனைத்து நாடுகளும் ஒரு அணியாகி இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டன.

இலங்கைக்குள் குழப்பங்களை ஏற்படுத்தவும் இதுவே காரணம். சோபா உடன்படிக்கையை இலங்கைக்குள் கொண்டுவர அமெரிக்கா முழுமையாக முயற்சி எடுத்தது. இஸ்லாமிய 'பய்ங்கரவாத அமைப்புக்கள் அனைத்தின் உருவாக்கதாரி அமெரிக்கா மட்டுமே. அவர்களைக் கொண்டு அமெரிக்கா இயக்கியமைக்கு அமையவே இலங்கையில் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது என்பதே உண்மை.

அதேபோல் தேசிய பாதுகாப்பு விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பலவீனமாகிவிட்டது. ஐக்கிய தேசியக் கட்சியால் தேசிய்ப் பாதுகாப்பை கட்டியெழுப்ப முடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள 13 அம்சக் கோரிக்கைகள் மிகவும் மோசமானவையாகும் இவ்ர்கள்தொடர்சியாக நாட்டைக் குழப்பும் துண்டாடும் நோக்கத்தில் மட்டுமே செயற்பட்டு வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி இன்றும் ஆட்சியில் உள்ளமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம்.

ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்துக் கோரிக்கைகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி தலை சாய்க்கும். சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெறும் கட்சிக்கு இம்முறை வெற்றி கிடைக்கும் எனக் கூற முடியாது. கடந்த 2010 ஆம் ஆண்டு தேர்தலில் சிறுபான்மை மக்களின் பங்களிப்பு இல்லாது மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றார்.

எனினும் 2015 ஆம் ஆண்டு தேர்தலில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் வெற்றியைத் தீர்மானித்தது உண்மையாகும். ஆனால் இம்முறை பெரும்பான்மை வாக்குகள் வித்தியாசத்தில் கோத்தபாய ராஜபக்ஷ வெற்றி பெறுவார். இதில் கிறிஸ்தவ மக்களின் முழுமையான வாக்குகள் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஈரான்-இலங்கை நட்புறவுத் திரைப்படவிழா யாழ்.பல்கலையில் 8 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஈரான் கலாசார நிலையமும் யாழ்.பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையும் இணைந்து "ஈரான்-இலங்கை நட்புறவுத் திரைப்படவிழா" ஒன்றை இரண்டாவது ஆண்டாக இம்முறையும் ஏற்பாடு செய்துள்ளன.

இத்திரைப்படத்திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி மற்றும் 9 ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறவுள்ளது.

இத்திரைப்பட விழாவில் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் "ராணாவின் மௌனம்" (Rannas' Silence) என்ற திரைப்படமும் பிற்பகல் 3 மணியளவில் "வீ காவ் எ கெஸ்ற்" (We Have a Guest) என்ற திரைப்படமும் திரையிடப்படவுள்ளன.

இரண்டாம் நாளான 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் "கொக்கற்றி" (Coquetry) என்ற திரைப்படமும் பிற்பகல் 3 மணியளவில் "சீஸன் ஒவ் நர்கீஸ்" (Season of Narges) என்ற திரைப்படமும் திரையிடப்படவுள்ளன.

சர்வதேச அளவில் வெளிவரும் தரமான திரைப்படங்களை பொது இரசனைத்தளத்திற்குக் கொண்டு வரும் ஓர் முயற்சியாக, இத்திரைப்பட விழா ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## இலத்திரனியல் திரையின்றி பேசமுடியாது

# அச்சம் காரணமாகவே விவாதத்திற்கு வரவில்லை

### கோத்தாவை சீண்டிய சஜித்



(மாபலகம)

**இலத்திரனியல் திரையின்றி பேச முடியாது என்ற அச்சம் காரணமாகவே பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ விவாதம் பற்றி எந்த நிலைப்பாட்டையும் அறிவிக்காமல் உள்ளதாக புதிய ஜன நாயக முன்னணியின் ஜனா திபதி வேட் பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலி மாபலகம பிரதேசத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சஜித் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தற்போதைய சூழ்நிலையில் எனது பிரதிவாதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் பிரதான வேட்பாளராக இருக்கிறார். எனவேதான் அவரைப் பகிரங்க விவாதத்துக்கு அழைக்கின்றேன்.

எனினும் இலத்திரனியல் திரை இன்றி பேச முடியாது என்ற அச்சத்திலிலேயே அவர் விவாதம் பற்றி எந்த நிலைப்பாட்டையும் அறிவிக்காமல் இருக்கிறார்.

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தனித்து விவாதத்தில் கலந்து கொள்ள அச்சம் என்றால் மகிந்த ராஜபக்ஷவையும் உடன் அழைத்து வரலாம். மகிந்தவை மாத்திரமின்றி ஆயிரக்கணக்கானோரை அழைத்து வந்தாலும் எனது தரப்பில் நான் தனியாகவே பங்குபற்றுவேன். அதற்கான பலமும் தைரியமும் என்னிடம் இருக்கிறது. இவ்வாறு விவாதங்களை நடத்தினால் மாத்திரமே மக்களால் நாட்டை ஆட்சி செய்வதற்கு தகுதியான தலைவர் யார் என்பதை தெளிவாக இனங்காண முடியும்" என்றும் சஜித் தெரிவித்தார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஜனநாயக தேசிய முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த நேரடி விவாத சவாலை ஏற்கத் தயார் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நீதித்துறை அதிகாரிகளின் மாநாடு கொழும்பில் நேற்று ஆரம்பம்



(கொழும்பு)

பொதுநலவாய ஒன்றியத்தின் நீதியமைச்சர்களின் நீதித்துறை அதிகாரிகளின் மாநாடு கொழும்பில் ஆரம்பமாகியது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொதுநலவாய ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் திருமதி பற்றீசியா ஸ்கொட்லன் ஆகியோர் தலைமையில் இந்த மாநாடு நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

இந்த மாநாடு எதிர்வரும் 8 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பொதுநலவாய ஒன்றியத்தின் செயலாளர் நேற்று முன்தினம் மாலை இலங்கையை வந்தடைந்தார்.

பொதுநலவாய நாடுகள் மத்தியில் நிலவும் சட்ட கட்டமைப்பு மற்றும் சட்டம் தொடர்பான அறிவை பரிமாறுதல், நீதிமன்ற வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு சட்ட ரீதியிலான ஒத்துழைப்பு, சிவில் சட்ட கட்டமைப்பு மற்றும் ஊழலை இல்லாதொழித்தல், சட்ட கட்டமைப்பை ஒழுங்குறுத்துதல் உள்ளிட்ட பிராந்திய நாடுகள் மத்தியில் சட்டவாட்சி புரிந்துணர்வுடன் செயற்படுதல் தொடர்பாக இந்த மாநாட்டில் கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





**சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வு நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக்கல்விப்பணிப்பாளர் வ.நடராசா, தென்மராட்சி கல்வி வலய அதிகாரிகள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.**

**(படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)**

# ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று வாழ்த்துக்களைப் பெற வேண்டும்

### ரணில் விருப்பம்



(சாவகச்சேரி)

உலகக் கிண்ணத்தை தென்னாபிரிக்க ரக்பி அணி கைப்பற்றியமைக்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சாவகச்சேரியில் இருந்து கொண்டு தொலைபேசி வாயிலாக அந்நாட்டு ஜனாதிபதிக்கு வாழ்த்தைத் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரில் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே தொலைபேசி வாயிலாக அவர் தனது வாழ்த்தைத் தெரிவித்தார்.

தென்னாபிரிக்க ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்ததை மக்களுக்குத் தெரியப்படுத்திய பின்னர் தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்.

தான் இப்போது தென்னாபிரிக்க ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்ததைப் போன்று எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்று வாழ்த்துக்களைப் பெற வேண்டும். அதுதான் உலக மக்களுக்கு நாம் கொடுக்கின்ற வெற்றிச் செய்தியாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-30-89)

# மந்திகை வைத்தியசாலையில் நாய்கள் தொல்லை நிர்வாகம் அசண்டையீனம்;பொதுமக்கள் குற்றச்சாட்டு





(கரணவாய்)

மந்திகை ஆதார வைத்திய சாலையில் கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் சிகிச்சை பெற வருவோர் அசௌகியங்களை எதிர்நோக்குவதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டினர்.

மந்திகை வைத்தியசாலையில் தினம்தோறும் அதிகளவிலான பொதுமக்கள் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் வைத்தியசாலையின் நோயாளர் விடுதி மற்றும் உட்புறப்பகுதிகளில் அதிகளவிலான நாய்கள் நடமாடித் திரிகின்றன.

யாழ்.குடாநாட்டில் பெய்த அடை மழையால் அதிகளவிலான நோயாளர்கள் வைத்திய சாலைகளை நாடி வருகின்றனர்.

அவ்வாறு வருகை தரும் நோயாளர்கள் வைத்தியசாலை விடுதியில் இடப் பற்றாக்குறை நிலவுவதால் நிலங்களில் படுத்துறங்க வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்படுகிறது.

இந் நிலையில் குறித்த வைத்தியசாலை விடுதியினுள் கட்டாக்காலி நாய்கள் நடமாடுவதால் மேலும் தொற்று நோய்கள் ஏற்படக் கூடிய அபாயநிலை ஏற்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டினர். இதுதொடர்பாகயாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது தான் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்தார் (இ-10-60)

### ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு

# அரச,தனியார் துறை ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்பட வேண்டும்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்பட வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது. இதேவேளை எவ்வாறு விடுமுறை வழங்குவது என்பது தொடர்பிலும் தேர்தல்கள் ஆணைக்குழு பரிந்துரைத்தது.**

அதற்கமைய 40 கிலோ மீற்றர் தூரத்திற்குட்பட்ட வாக்காளர்களுக்கு அரை நாள் விடுமுறையும், 100 கிலோமீற்றர் தூரத்திற்குட்பட்டவர்களுக்கு ஒருநாள் விடுமுறையும், 100 முதல் 150 கிலோமீற்றர் தூரத்திற்குட்பட்ட வாக்காளர்களுக்கு ஒன்றரை நாள் விடுமுறையும், 150 கிலோ மீற்றர் தூரத்திற்குட்ட வாக்காளர்களுக்கு இருநாள் விடுமுறையும் பரிந்துரை செய்யப்பட்டது.

எதிர்வரும் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இவ்வாறு விடுமுறை தொடர்பான விசேட அறிவித்தல் வெளியிடப்பட்டது. (இ-7)

# உள்ளக பயிற்சி வைத்தியர்களுக்கு வாக்களிக்க உரிய முறையை அறிவிக்குக

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை

(கொழும்பு)

இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்காக உள்ளகப் பயிற்சி வைத்தியர்களுக்கு தங்களது வாக்கை பதிவு செய்வதற்கு உரிய முறை ஒன்றைத் தயார் செய்யுமாறு இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு அறிவித்தது.

சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இதனைத் தெரிவித்தது.

உள்ளக பயிற்சி வைத்தியர்களாக தங்களது பயிற்சிக் காலத்திலுள்ள வைத்தியர்களுக்கு ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதனடிப்படையில் அவர்களுக்கு வாக்களிப்பதற்கான உரிய முறை ஒன்றை அறிவிக்குமாறு குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டது. (ஜ)

# கற்பித்தலில் தேசிய டிப்ளோமா

(யாழ்ப்பாணம்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியும் யாழ்ப்பாணம்-தேசிய கல்வியியற் கல்லூரியும் இணைந்து கற்பித்தலில் தேசிய டிப்ளோமா வழங்கும் வைபவம் நாளை 6 ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும்.

இதில் முதலாவது நிகழ்வு காலை 8 மணியளவில் நடைபெறும். இதில் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான தொழில்நுட்ப பீட முன்னாள் பீடாதிபதி கணிதவியல் பேராசிரியர் எஸ்.ஸ்ரீசந்திகுணராஜா விருந்தினராகவும் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெறும் 2 ஆவது நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் ஜி.மிகுந்தன் விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-5)

# சபாநாயகருக்கு கௌரவ விருது



(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜெயசூரிய ஜனநாயகம் மற்றும் நேர்மையான பொது மக்கள் சேவைக்கான அர்ப்பணிப்பை மேற்கொண்ட தெற்காசிய இராஜதந்திரியாக கௌரவிக்கப்பட்டார். ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய நட்புறவு அமைப்பின் 20 ஆவது வருடாந்த நிறைவை முன்னிட்டு இந்தக் கௌரவ விருது சபாநாயகருக்கு வழங்கப்பட்டது. இந்தியாவின் சன்சாட் அமைப்பின் பொதுச் செயலாளர் கலாநிதி அனில்கே சிங் உள்ளிட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் தலைமையில் இந்த விருது வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. (இ-7)

# எந்தவிதமான ஒப்பந்தத்திலும் அரசாங்கம் கைச்சாத்திடவில்லை

## சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தவிதமான ஒளிவுமறைவான ஒப்பந்தத்தையும் அரசாங்கம் கைச்சாத்திடவில்லை என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கூறுகையில், ஒப்பந்தங்கள் தொடர்பில் கூற்றுக்கள் எதுவும் இருப்பின் அவற்றை நாம் திருத்திக் கொள்ள முடியும்.

அவ்வாறான திருட்டுத்தனங்கள் ஒப்பந்தத்தில் இருப்பின் அவற்றை நாடாளுமன்றத்தில் மறைக்க முடியாது என் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ)



# மண்ணை மிதித்து நின்றாலே மண் வாசனையை உணரலாம்

## சஜித் கூறுகிறார்



(கொழும்பு)

மண்ணை மிதித்து நின்றாலே மண் வாசனையை உணர முடியும் என ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தமது தந்தையை போல தாமும் அடி மட்டத்திலிருந்து வந்ததாகவும் நாட்டின் பாமர மக்களை கண்டவுடன் தனக்கு பாரிய உற்சாகம் ஒன்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அநுராதபுரம், ஹொரவ்பொத்தான பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ஏழை மக்களே எனக்கு அமுதம். அநுராதபுரம், கெப்பத்திகொல்லாவ, கெக்கிராவ, அம்பாந்தோட்டை என எங்கு என்றாலும் தமக்குப் தாக்குப்பிடிக்க முடியும் எனவும் தெரிவித்தார். (ஜ)

# காணாமல் போனோரின் உறவினர்கள் நாமலுடன் கைதடியில் கலந்துரையாடல்



(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த காணாமல் போனோரின் உறவினர்கள் நேற்றுத் திங்கட்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர். கைதடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பெருமளவில் கலந்து கொண்டன.

இதன்போது காணாமல் போனோரின் உறவினர் தொடர்ந்து ஏமாற்றப்பட்டும், அலைக்கழிக்கப்பட்டும் வருகின்றனர். எந்தவொரு விடயத்திலும் தமக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை.

எதிர்காலத்தில் வீட்டுத்திட்டம்,வாழ்வாதாரம் போன்ற விடயங்களில் காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் அதேவேளையில் அவர்கள் சொந்தக் காலில் நிற்பதற்கு உறுதுணையான வேலை வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என காணாமல் போனோரின் உறவுகள் கோரிக்கை விடுத்தனர்.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் 50இற்கும் மேற்பட்ட காணாமல் போனோரின் உறவினர்கள் கலந்துகொண்டனர். (இ-5-30)

# தமிழரசுக்கட்சி தமிழ் மக்களுக்கு பச்சைத் துரோகத்தை செய்துள்ளது

## ஜனாதிபதி வேட்பாளர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



(முறிகண்டி)

**சஜித்பிரேமதாஸவை ஆதரிப்பதென அறிவித்த விடயமானது ஐந்து கட்சிகள் மற்றும் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு மாத்திரமல்ல தமிழ் மக்களுக்கும் பச்சைத் துரோகத்தை தமிழரசுக்கட்சி செய்துள்ளது என ஜனாதிபதி வேட்பாளர் கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்படி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழரசுக்கட்சி இவ்வாறு துரோ கத்தனமாக செயற்படும் என்பது ஏற்கனவே அறியப்பட்டதேயாகும்.

6 கட்சிகள் இணைந்து கூட்டு முயற்சி எடுத்தபோது ஒரு கட்சி தவிர்ந்து ஏனைய ஐந்து கட்சிகள் ஒப்பந்தம் ஒன்றை செய்திருந்தனர். அதில் 13 அம்சங்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி வேட்பாளர்களிடம் முன் வைப்பதாக தீர்மா னிக்கப்பட்டிருந்த நிலையில், சுமந்திரன் துரோகமான செயற்பாடு ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்த நிலையில் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்ன விடயத்தை கண்டு தமிழரசுக் கட்சி அவர்களுக்கு ஆதரவு வழங்கியிருந்தது எனத் தெரியவில்லை.

இரண்டு தடவை அன்னம் கவிழ்ந்துவிட்டது. முதல் தடவை சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக வாக்களித்தோம். அதில் பயன் கிடைக்கவில்லை. இரண்டாவது தடவையாக நல்லாட்சி அரசிற்காக அன்னத்திற்கு வாக்களித்தோம். இரு தடவையும் தமிழ் மக்களுக்கு எவையும் கிடைக்கவில்லை. தேர்தல் விஞ்ஞாபனத்தில் போர்க்குற்றம் இளைத்தவர்களைப் பாதுகாப்பதாகவே கூறப்பட்டுள்ளது. சரத் பொன்சேகா தான் இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தேன் என்கின்றார். அப்போ யார் கொலைகாரன். இந்த சரத் பொன்சேகாவும் கொலைகாரனே. இவர்களை போன்றவர்களை பாதுகாப்பதற்கா தமிழரசுக் கட்சி சஜித்திற்கு ஆதரவு வழங்கியிருந்தது? காலத்திற்குக் காலம் நாம் ஆட்சி மாற்றத்தை செய்யவில்லை. ஆட்களைத்தான் மாற்றியுள்ளோம். நாம் ஆட்சியை மாற்றியதாக எண்ணிக்கொண்டு இதுவரை இருந்துள்ளோம்.

உண்மை அதுவல்ல. சந்திரிகா, அதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷ, அதன் பின்னர் மைத்திரிபால சிறிசேன, அடுத்தது யாராகவோ இருக்கலாம். அதனால் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்காது. அன்னம் பாலுடன் கலக்கப்பட்ட தண்ணீரிலிருந்து பாலை மட்டும் குடித்துவிட்டு தண்ணீராக தமிழர்களை கைவிட்டு விடும் என்பதே உண்மை என அவர்மேலும்தெரிவித்தார். (9-100)

### சமாதான நீதவான்களின் வடமாகாண மாநாடு வவுனியாவில்

இலங்கை சமாதான நீதவான்கள் பேரவையின் ஏற்பாட்டில் வட மாகாணத்திற்கான மாநாடு எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு வவுனியா நகர கூட்ட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பேரவையின் தேசிய பணிப்பாளர் கலாநிதி பஹத் ஏ.மஜீத் தலைமையில் "சுபீட்சமான இலங்கை" எனும் தொனிப் பொருளில் இடம்பெறவுள்ள இம்மாநாடு அடுத்ததாக மத்திய மாகாணத்தை தொடர்ந்து நாட்டின் ஏனைய மாகாணங்களில் எதிர்வரும் காலங்களில் இடம் பெறவுள்ளது. வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட மற்றும் முழுத் தீவுக்குமான சமாதான நீதவான்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள முடியும்.

கடந்த காலங்களில் சமாதானம் மற்றும் நீதியை நிலை நாட்ட பாடுபட்டவர்களுக்கு இந் நிகழ்வில் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. இந் நிகழ்வில் பங்குபற்ற விரும்பும் சமாதான நீதவான்கள் 077 742 8210 அல்லது 077 420 8010 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பேரவையால் கேட்டுக்கொள்ளப்பட்டது. (9)

## கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குடும்பப் பெண் வவுனியாவில் கைது

(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்று முன் தினம் இரவு கள்ளிக்குளத்தை சேர்ந்த பெண்ணொருவரை ஓமந்தை பொலிஸார் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியா தாண்டிக்குளத்திலிருந்து கள்ளிக்குளத்திலுள்ள தனது வீட்டிற்கு குறித்த பெண் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது நொச்சிமோட்டை பாலத்தடியில் கடமையில் இருந்த பொலிஸார் அவரை சோதனை செய்துள்ளனர். அப்போது அவர் கஞ்சா வைத்திருந்தது தெரிய வந்துள்ளது.

உடைமையில் 500 கிராம் கேரளக் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் வவுனியா கள்ளிக்குளத்தைச் சேர்ந்த 40 வயதுடைய குடும்ப பெண்ணை கைது செய்ததுடன் அவர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளையும் ஓமந்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் குறித்த பெண் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (9-299)

## பெண் பயனாளிகளுக்கு உதவி வழங்கல்



ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியீட்டத்துடன் Humanity & Inclusion (HI) வலது குறைவு சம்பந்தமான அணுகும் வசதி, கண்காணிப்பு மற்றும் தகவல்களுக்கான நிலையம், யாழ்.சமூக செயற்பாட்டு மையம் மற்றும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படும் இலகுவில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய மக்களின் மேம்பட்ட வாழ்வாதாரங்களுக்கான வடக்கு மாகாணத்தில் வலுவான சிவில் சமூக அமைப்புக்கள் எனும் கருத்திட்டத்தின் கீழ் கரைச்சி மற்றும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 8 பெண் பயனாளிகளுக்கு விவசாயத்துக்கான காசோலை வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சியிலுள்ள பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, இப்பயனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியிலுள்ள பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பணிமனையில் இடம் பெற்றது.

இதுவரை, கிளிநொச்சி மாவட்டத்தில் இத்திட்டத்தினூடாக 18 பய னாளிகளுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9)

## வவு.நகரசபை கடிதத்தை பயன்படுத்தி போலி ஆவணம் தயாரிப்பு

### தமிழரசுக் கட்சியின் நகரசபை உறுப்பினருக்கு எதிராக தவிசாளர் பொலிஸில் முறைப்பாடு

(குருமன்காடு)

வவுனியா நகரசபை கடிதத்தை பயன்படுத்தி போலி ஆவணம் தயாரித்த குற்றச்சாட்டில் வவுனியா - இறம்பைக்குளம் வட்டார உறுப்பினர் ஒருவர் மீது நகரசபை செயலாளர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நகரசபையின் தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்தார்.

குறித்த நகரசபை உறுப்பினர் மீது கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரும் இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. ஆனால் அம் முறைப்பாடுகள் தொடர்பில் போதிய ஆதாரங்கள் இன்மையினால் எம்மால் நடவடிக்கை மேற்கொள்ள முடியவில்லை. கடந்த வெள்ளிக்கிழமை (01.11.2019) சோலைவரி பெயர் மாற்றத்திற்காக பொதுமகனொருவர் நகரசபைக்கு வருகை தந்திருந்தார். அந்த சமயத்தில் குறித்த பொதுமகனின் கையில் நகர சபையினால் வழங்கப்பட்டதென ஓர் ஆவணம் இருந்தது.

குறித்த ஆவணத்தை ஊழியர்கள் பரீட்சித்த சமயத்தில் அக் கடிதம் போலியாக தயாரிக்கப்பட்டது என கண்டறியப்பட்டது. அதனைத்தொடர்ந்து நாம் கடிதத்தை எடுத்து வந்த பொதுமகனை அழைத்து விசாரணை மேற்கொண்ட சமயத்தில் வவுனியா தமிழரசுக் கட்சியின் இறம்பைக்குள உறுப்பினர் தான் எனக்கு சோலைவரி பெயர் மாற்றம் செய்ததாக தெரிவித்து இக் கடிதத்தை தந்ததாக தெரிவித்தார்.

நகரசபையின் கடிதத்தை போட்டோ பிரதி செய்து கடிதத்தை மாற்றி நகரசபை செயலாளரின் சின்னம் மற்றும் அவரின் கையெழுத்தை போலியாக இட்டு குறித்த நகரசபை உறுப்பினரால் அவருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், தமிழரசுக் கட்சியின் இறம்பைக்குளம் வட்டார உறுப்பினருக்கு எமது நகர சபையினால் வேறொரு தேவைக்கான அனுப்பிய கடித்தையே அவர் மாற்றியமைந்திருந்தமை அவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் காணப்பட்ட இலக்கமும் குறித்த போலிக் கடிதத்தின் இலக்கமும் ஒன்றாக காணப்பட்டதன் அடிப்படையில் கண்டறியப்பட்டது.

இவ்வாறான விடயங்களின் அடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை (01.11.2019) நகரசபை செயலாளரினால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டதுடன் நேற்று (04.11.2019) விசாரணைக்காக பொலிஸார் இரு தரப்பையும் அழைத்திருந்தனர். இதன் போது குறித்த தமிழரசுக் கட்சியின் நகரசபை உறுப்பினர் போலி கடிதத்தை தானே தயாரித்ததாகவும் அதற்கு மன்னிப்புக் கடிதம் ஒன்றினையும் தருவதாக எமக்குத் தெரிவித்தார். அதன் அடிப்படையில் நகரசபை உறுப்பினரின் நலனை கருத்தில் கொண்டு முறைப்பாடு மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் குறித்த நகரசபை உறுப்பினருக்கு இனி இவ்வாறான செயலில் ஈடுபட்டால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படமென பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் குறித்த நகரசபை உறுப்பினர் தொடர்பில் எமக்கு இரு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் குறித்த நகர சபை உறுப்பினரினால் பாதிக்கப்பட்ட மக்கள் உங்களது ஆவணங்களை நகரசபையில் வந்து உண்மையில் நகரசபையினால் வழங்கப்பட்டதா? என சரி பார்த்துக் கொள்ளுங்கள் என தெரிவித்தார். (9-250-299)







தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஒட்டுசுட்டான் பொது நூலகத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச முன்பள்ளி மாணவர்களுக்கான கதை கூறும் நிகழ்வும் மாணவர்களின் கலை சார்ந்த செயற்பாடுகளும் நூலகர் சி.ஜெயகாந்தன் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது.இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேசசபை தவிசாளர் செ.பிறேமகாந் கலந்துகொண்டதுடன் சுமார் 40 மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றிருந்தனர்.

# கிடைத்த சந்தர்ப்பங்களை தமிழ்த் தலைமைகள் சுயலாப அரசியலுக்காக கோட்டை விட்டுவிட்டார்கள்

(நெளுக்குளம்)

**எங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை தமிழ்த் தலைமைகள் சுயலாப அரசியலுக்காக கோட்டை விட்டு விட்டார்கள் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் எங்கள் மக்கள் பல தேர்தல்களை எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் நாங்கள் ஆயுதம் தூக்கி போராடி இலங்கை- இந்திய ஒப்பந்தத்துடன் கைவிட்டு தேசிய நீரோட்டத்தில் கலந்து கொண்டு ஜனநாயக வழிமுறையின் ஊடாக நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாக எங்களுடைய பிரச்சினையை தீர்க்கலாம் என்ற நம்பிக்கையுடன் அந்தக் கருத்தை முன்வைத்து வந்திருக்கின்றோம்.

ஆனால் அன்று சக தமிழ் கட்சிகளோ, சக இயக்கங்களோ இல்லை. வன்முறை ஊடாகவே பிரச்சினையை தீர்க்கலாம் என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் வன்முறையின் ஊடாகவும் பிரச்சினையை தீர்க்க முடியாது என்று கூறியிருந்தோம். அத்தோடு தேசிய நீரோட்டத்தில் கலந்து கொண்டு தேசிய நல்லிணக்கத்திற்கு ஊடாக தமிழ் மக்களின் வாக்குப்பலத்தின் ஊடாகவுமே வருங்காலங்களில் எங்களுடைய பிரச்சினைகளை தீர்க்கலாம் என்று அன்று கூறியிருந்தோம். அது இன்று யதார்த்தமாக வந்துள்ளது.

அன்று நாங்கள் கூறியிருந்ததை ஏற்றிருந்தால் அழிவுகள், இழப்புக்கள், துன்பங்கள், துயரங்கள், இடம்பெயர்வுகள் எல்லாம் ஏற்பட்டிருக்காது. எங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பங்களை தமிழ் தலைமைகள் சுயலாப அரசியலுக்காக கோட்டை விட்டு விட்டார்கள். யுத்தத்தின் பின் நடைபெற்ற தேர்தல்களில் வேட்பாளர்களாக வந்தவர்களும் அவர்களை ஆதரித்து மக்களை உசுப்பேற்றி மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்கு வந்தவர்களும்தான் வென்றிருக்கிறார்களே ஒழிய மக்கள் வெல்லவில்லை.

மக்கள் வெல்லவில்லை என்பதன் அர்த்தம் மக்களுடைய பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படவில்லை. மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டால் தான் மக்கள் வென்றதாக அர்த்தம். வர இருக்கின்ற சந்தர்ப்பத்தில் எங்களை நம்பி எங்களை பின்பற்றி எங்களுடன் அணிதிரள்வீர்களேயானால் நீங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை விரைவாக தீர்ப்போம்.

முன்னோக்கி செல்லக்கூடிய வகையில் நாங்கள் உங்களுக்கு வழியை காட்டுவோம். உங்களுக்கு பக்கபலமாகவும் இருப்போம் என மேலும் தெரிவித்தார். (9-299)

# பிரதேச சபை புனரமைக்காத வவு.தோணிக்கல் பொதுப்பாதை பொது மக்களினால் புனரமைப்பு



(நெளுக்குளம்)

வவுனியா தோணிக்கல் பொது பாதை ஒன்று நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாமல் அவ்வீதியால் பயணிப்பதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிய பொதுமக்கள் தமிழ் தெற்கு பிரதேச சபையிடம் வீதியை புனரமைப்புச் செய்யுமாறு முறைப்பாடு மேற்கொண்டும் இவ்வீதி புரமைப்புச் செய்யப்படாததால் இந்நிலையில் நேற்று முன்தினம் அவ்வீதி அங்குள்ள பொதுமக்களின் பங்களிப்புடன் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா தோணிக்கல் மேட்டுத் தெரு வீதி நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படவில்லை. இதனால் அவ்வீதியால் செல்லும் மாணவர்கள், வயோதிபர்கள் எனப் பல்வேறு தரப்பினர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் அப்பகுதி மக்கள் இவ்வீதியை புனரமைப்புச் செய்யுமாறு தமிழ் தெற்கு பிரதேச சபையிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டும் அக்கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

தற்போது பெய்துவரும் பருவ மழை காரணமாக குறித்த வீதியில் மழை வெள்ளம் தேங்கி அவ்வீதியால் பயணிக்க முடியாமல் தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் சமூக ஆர்வலர் எஸ். ஜோர்ஜ் தலைமையில் அப்பகுதி இளைஞர்களின் உதவியுடன் நேற்று முன்தினம் தோணிக்கல் மேட்டுத்தெரு வீதி மற்றும் சில குறுக்கு வீதிகளுக்கு கிரவல் போட்டு தண்ணீர் வழிந்தோடுவதற்கான போக் என்பன அமைக்கப்பட்டு அவ்வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இவ்வீதி புனரமைப்பு பணிகளுக்கான நிதி உதவியினை வன்னி மக்களின் காப்பகம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-299)

# ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட மணல் ஏலவிற்பனை எதிர்வரும் 9 ஆம் திகதி சனிகிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே பகிரங்க ஏலவிறபனை ஸ்ரீயில் பங்குபற்ற விரும்புபவர்கள் அன்றைய தினம் இந் நீதிமன்ற வளாகத்திற்கு சமுகமளிக்குமாறு பதிவாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

# அம்பலப்பெருமாள் குளத்தின் பாலத்தினை புனரமைக்குமாறு அரச அதிபரிடம் கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளத்தின் உடைந்த பாலத்தினைத் திருத்தி முதன்மை வீதியினையும் புனரமைத்துத் தருமாறு அம்பலப்பெருமாள் குளம் பொது அமைப்புகள் முல்லைத்தீவு மாவட்டஅரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன. 1968ஆம் ஆண்டில் அம்பலப்பெருமாள் குளம் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டபோது அமைக்கப்பட்ட பாலம் தற்போது உடைந்திருப்பதன் காரணமாக துணுக்காயில் இருந்து அம்பலப்பெருமாள் குளம் வரை நடைபெற்ற ஒரேயொரு தனியார் பேருந்து சேவையும் நடைபெறுவதில்லை. துணுக்காய் கமநல சேவை நிலையத்தில் இருந்து பசளைகளை கிராமத்திற்குள் எடுத்து வருவதற்கு வேறு வழி பயன்படுத்த வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. 1968இல் அம்பலப்பெருமாள் குளம் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டிருந்தாலும் இதுவரை காலமும் கிராமத்திற்கான நிரந்தர வீதி அமைக்கப்படவில்லை. கிராமத்தில் இருந்து துணுக்காய் ஏனைய பகுதிகளுக்கு தற்காலிக வீதி ஊடாகவே பயணிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராமங்களில் வாழ்கின்ற 300 வரையான குடும்பங்களின் நலன்கருதி குறித்த பாலத்தினைப் புனரமைத்து நிரந்தர வீதியினை அமைக்குமாறு பொது அமைப்புகள் மாவட்ட அரச அதிபரிடம் வலியுறுத்தியுள்ளன. (9-350)

# கால்கள் வெட்டப்பட்ட நிலையில் கழுதையின் உடல் மீட்பு

## மாட்டு இறைச்சியுடன் கலந்து விற்பதற்காக கொல்லப்பட்டிருக்கலாம் என மக்கள் சந்தேகம்

(மன்னார்)

மன்னார்-யாழ் பிரதான வீதி, மாந்தை சந்தியில் உள்ள சேமக்காலைக்கு அருகில் நான்கு கால்களும் வெட்டப்பட்ட நிலையில் கழுதை ஒன்றின் உடல் நேற்று திங்கட்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக மன்னார் நகர சபை உறுப்பினர் மைக்கல் கொலின் தெரிவிக்கையில், அப்பகுதியூடாக பயணித்த மக்கள் கழுதை ஒன்றின் உடல், நான்கு கால்களும் முழுமையாக வெட்டப்பட்ட நிலையில் காணப்படுவதாக எனது கவனத்திற்கு கொண்டு வந்தனர்.


உடனடியாக நான் குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டேன். இதன்போது கழுதையின் நான்கு கால்களும் முழுமையாக வெட்டப்பட்டுள்ளன. குறித்த கழுதை மாட்டு இறைச்சியுடன் கலந்து விற்பனை செய்வதற்காக வெட்டப்பட்டிருக்கலாம் என மக்கள் சந்தேகம் கொண்டுள்ளனர்.



இவ்விடயம் தொடர்பாக மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.எம். கில்றோய் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (9-285)

# பாரதம்

## ஆழ்துளைக்கிணற்றில் விழுந்து மற்றுமொரு சிறுமி பரிதாபமாகப் பலி!



(சண்டிகர்)

அரியானா மாநிலத்தில் ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த 5 வயது சிறுமி 16 மணி நேரத்திற்கு பிறகு மீட்கப்பட்டும் பரிதாபமாக உயிரிழந்தாள்.

அரியானா மாநிலம் கர்னால் மாவட்டம் ஹர்சிங் புரா கிராமத்தில் நேற்று முன்தினம் மாலை தன் வீட்டிற்கு வெளியே விளையாடிக்கொண்டிருந்த 5 வயது சிறுமி ஷிவானி, அங்கு திறந்த நிலையில் இருந்த ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்துவிட்டாள்.


இதுபற்றி பொலிஸார் மற்றும் தீயணைப்புத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார், தீயணைப்புப் படை வீரர்கள் மற்றும் தேசிய பேரிடர் மீட்பு படை வீரர்கள் சம்பவ இடத்திற்கு வந்து சிறுமியை மீட்கும் பணியைத் தொடங்கினர்.

சிறுமிக்கு ஒட்சிசன் கிடைக்கும் வகையில் ஆழ்துளைக் கிணற்றுக்குள் ஒட்சிசன் செலுத்தப்பட்டு. குழந்தையின் உடல் நிலையை கமரா மூலம் கண்காணித்தனர். சிறுமி தலை கீழாக ஆழ்துளைக் கிணற்றுக்குள் விழுந்திருந்தாள். 50 அடி ஆழம் கொண்ட அந்த ஆழ்துளைக் கிணற்றின் அருகே, பொக்லைன் இயந்திரம் மூலம் சிறுமி இருக்கும் ஆழம் வரை பள்ளம் தோண்டப்பட்டது. பின்னர் பக்கவாட்டில் சுரங்கம் தோண்டப்பட்டு நேற்றுக் காலை 9.30 மணியளவில் சிறுமியை மீட்டனர்.

பின்னர் உடனடியாக குழந்தையை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் சிறுமியை பரிசோதித்த வைத்தியர்கள், சிறுமி ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

சுமார் 16 மணி நேரம் ஆழ்துளைக் கிணற்றில் சிக்கியிருந்த சிறுமி, 10 மணி நேர போராட்டத்திற்கு பிறகு மீட்கப்பட்டும் குழந்தையைக் காப்பாற்ற முடியாததால் அனைவரும் சோகத்தில் ஆழ்ந்தனர். (ஜ-2)

## சுர்ஜித்தின் பெற்றோருக்கு தமிழக அரசு நிதியுதவி



(சென்னை)


ஆழ்துளை கிணற்றில் விழுந்து உயிரிழந்த குழந்தை சுர்ஜித்தின் பெற்றோருக்கு தமிழக அரசின் நிவாரணமாக ரூ.10 இலட்சத்துக்கான காசோலையை மாவட்ட கலெக்டர் எஸ்.சிவராசு வழங்கினார்.

திருச்சி மாவட்டம் மணப்பாறையை அடுத்த நடுக்காட்டுப்பட்டியைச் சேர்ந்த 2 வயது குழந்தை சுர்ஜித், கடந்த மாதம் 25 ஆம் திகதி மாலை வீட்டின் அருகே விளையாடியபோது, அங்குள்ள ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்தான். அவனை மீட்க எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன.

இதையடுத்து 29 ஆம் திகதி அதிகாலை அழுகிய நிலையில் சுர்ஜித் சடலமாக மீட்கப்பட்டான். இந்த சம்பவம் நாடு முழுவதும் மிகுந்த அனுதாப அலைகளை ஏற்படுத்தியது.

இந்நிலையில் தமிழக அரசு நிவாரணமாக ரூ.10 இலட்சத்திற்கான காசோலைய சுர்ஜித்தின் பெற்றோரிடம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## சமையல் உபகரணங்கள் விண்கலம் மூலம் விண்வெளிக்கு



(வோஷிங்டன்)

விண்வெளி நிலையத்தில் உள்ள வீரர்களுக்கு உணவுப் பொருட்கள் தயாரித்து சாப்பிடுவதற்கான அதிநவீன சமையல் சாதனத்தை சைக்னஸ் என்ற விண்கலத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்து ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றன. இந்த விண்வெளி நிலையத்தில் வீரர்கள் தங்கி இருந்து ஆய்வுப்பணியை மேற்கொள்கின்றனர்.

அவர்கள் பிஸ்கட், சொக்லேட் போன்ற உணவுப்பொருட்கள் தயாரித்து சாப்பிடுவதற்கான மாவு, 'மைக்ரோவேவ் அவன்' (அதிநவீன சமையல் சாதனம்) ஆகியவை அமெரிக்காவின் வெர்ஜீனியா வாலப்ஸ் தீவில் இருந்து சைக்னஸ் என்ற விண்கலத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. நேற்றுத் திங்கட்கிழமை அந்த விண்கலம், சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடைந்தது. (ஜ-2)

## பாகிஸ்தானின் பயங்கர

## இந்தியாவுக்கு அச்சுறு

### அமெரிக்கா சுட்டிக்காட்டு

(வோஷிங்டன்)

**பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகமது போன்ற பயங்கரவாத அமைப்புகள் இந்தியாவுக்குத் தொடர்ந்து அச்சுறுத்தலாக இருப்பதாக அமெரிக்கா சுட்டிக்காட்டியது.**

உலக நாடுகளில் இயங்கும் பயங்கரவாத அமைப்புகள் குறித்த அறிக்கையை அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டது.

குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "பிராந்திய அளவிலான பயங்கரவாதக் குழுக்கள் 2018 ஆம் ஆண்டி

## பிரான்ஸ்-இத்தாலி

## லொறியிலிருந்து 3

(ரோம்)

பிரான்ஸ் - இத்தாலி எல்லையில் லொறியொன்றினுள் கடத்தி செல்லப்பட்ட பாகிஸ்தான் அகதிகள் 31 பேரை இத்தாலி அதிகாரிகள் மீட்டனர். அத்தோடு குறித்த லொறியின் சாரதியையும் கைது செய்தனர்.

இங்கிலாந்தின் எஸ்ஸெக்ஸ் நகரில் குளிர்சாதன வசதி கொண்ட ஒரு கொள்கலனில் இருந்து வியட்நாமை சேர்ந்த 39 பேரின் சடலங்கள் அண்மையில் கண்டெடுக்கப்பட்டன. இந்த விடயம் சர்வ

## அமெரிக்காவுடன் பேச்சு

### ஈரான் மதத்தலைவர் தி


(டெஹ்ரான்)

அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை என ஈரான் மதத் தலைவர் அயதுல்லா கமேனி திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இஸ்லாமிய புரட்சியாளர்களால் ஈரான் தலைநகர் டெஹ்ரானிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் பிணைக் கைதிகளாக கடந்த 1979 ஆம் ஆண்டு பிடித்துவைக்கப்பட்டனர். அந்தச் சம்பவம் நடைபெற்று இன்றுடன் 40 ஆண்டுகள் நிறைவடைவதனை முன்னிட்டு டெஹ்ரானில் நூற்றுக்கணக்கான மாணவர்களிடையே அயதுல்லா கமேனி நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை உரையாற்றினார்.

மேலும் தெரிவிக்கையில், "அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே நீடித்து வரும் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கூறி வருகின்றனர்.

அமெரிக்கரவுடனான எந்தவொரு பிரச்சினைக்கும் அந்த நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண முடியும் என்று யாராவது நம்பினால், அது அவர்களது தவறான புரிதலைக் காட்டுவதாக அமையும்.



உண்மையில், அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதால் எந்தப் பலனும் கிடைக்காது. காரணம், அவர்கள் பேச்சுவார்த்தையின்போது எதையும் விட்டுக்கொடுக்க முன்வரமாட்டார்கள்.

1979 ஆம் ஆண்டின் இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னர், ஈரான் மீது அமெரிக்கா பல்வேறு வகையான நெருக்கடிகளைக் கொடுத்து வருகிறது. ஆனால், இந்த 40 ஆண்டுகளில் அமெரிக்காவின்

# வெளிநாடு

## ..வாத அமைப்புக்கள் ..றுத்தலாக உள்ளன

..லும் மிகுந்த அச்சுறுத்தலாக விளங்கின.

எடுத்துக்காட்டாக, பாகிஸ்தானை மையமாகக் கொண்டு இயங்கி வரும் லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகமது அமைப்புகள் தங்கள் திறனை வளர்த்துக் கொண்டதுடன், இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் இலக்குகளை தாக்கும் நோக்கத்தையும் கொண்டிருந்தன.

அந்தவகையில் கடந்த பெப்ரவரி மாதம் காஷ்மீரின் சஞ்சுவான் இராணுவ முகாமில் ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 7 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த அமைப்புகளின் நிதி சேகரிப்பு, ஆட்சேர்ப்பு, பயிற்சி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த பாகிஸ்தான் தவறிவிட்டது. மாறாக அந்த அமைப்புகளுடன் தொடர்புடைய நபர்களை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட அனுமதித்தது.

ஒருபுறம் ஆப்கானிஸ்தான் அரசுக்கும், ஆப்கான் தலிபான்களுக்கும் இடையேயான அரசியல் நல்லிணக்கத்துக்கு பாகிஸ்தான் குரல் கொடுத்து வந்தாலும் தங்கள் நாட்டில் இயங்கி வரும் ஆப்கான், தலிபான் மற்றும் ஹக்கானி குழுக்கள் மீது நடவடிக்கை எடுக்க தவறி விட்டது.

பாகிஸ்தானைத் தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டு வரும் பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் இந்திய அமைதிக்குத் தொடர்ந்து குந்தகம் விளைவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## நேபாளத்தில் பேருந்து விபத்து பத்துப்பேர் உயிரிழப்பு



(காத்மண்டு)

நேபாளம் நாட்டின் சிந்துபால் சவுக் மாவட்டத்தில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

நேபாளம் நாட்டின் டோலாக்ஹா மாவட்டத்தில் உள்ள மகா டியூராலி என்ற இடத்தில் இருந்து காத்மண்டு நகரை நோக்கி பயணித்த பேருந்தொன்றே இவ்வாறு விபத்திற்குள்ளாகியது.

குறித்த விபத்தில் உயிரிழந்த 10 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், காணாமல் போன வர்களை மீட்கும் பணி இடம் பெற்று வருகிறது.

மேலும் இந்த விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஜ-2)

## ..எல்லைப்பகுதியில் 31 அகதிகள் மீட்பு

..தேச அளவில் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அதனைத்தொடர்ந்து மேற்கத்தேய நாடுகளில் அகதிகள் கண்காணிப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டன.

இந்நிலையில், பிரான்ஸ் - இத்தாலி எல்லையில் உள்ள பிரதான வீதியில் பொலிஸார் தீவிர வாகன பரிசோதனையில் ஈடுபட்டிருந்தனர். அதற்கமைய ஹொரியொன்றை மடக்கி சோதனை செய்தபோதே, பாகிஸ்தான் அகதிகள் 31 பேரை இத்தாலி அதிகாரிகள் மீட்டனர்.(ஜ-2)

## ஊரடங்கு உத்தரவையும் மீறி ஈராக்கில் தொடர் போராட்டம்


(பாக்தாத்)

ஈராக்கில் ஊரடங்கு உத்தரவையும் மீறி மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் குறித்த போராட்டத்தில் பொலிஸார் தலையிடாத நிலையில் தலைநகர் பக்தாத்தின் முக்கிய சந்திகளில் போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்தி மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதேவேளை, மாணவர்கள் தங்கள் கல்லூரிகளில் உள்ளிருப்புப் போராட்டங்களை நடத்தியும் அரச பணியாளர்கள் அலுவலகங்களை மூடியும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வேலைவாய்ப்புக்களை கோரியும் ஊழலுக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கோரியும் மக்களுக்கு



அரசாங்க சேவைகளை சிறந்த முறையில் வழங்குமாறும் கோரி கடந்த ஒரு மாத காலமாக ஈராக்கில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் போராட்டங்களில் மக்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையிலான மோதலில் 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தும் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## ..சுவார்த்தை கிடையாது

### ..திட்டவட்டம்



அத்தனை அடாவடிகளையும் ஈரான் மிகச் சிறந்த முறையில் சமாளித்து வருகிறது.

இதன் காரணமாக, அமெரிக்காவின் நடவடிக்கைகள் நாளுக்கு நாள் மேலும் தீவிரமடைந்து வருகின்றன. இந்நிலையில் அந்த நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் இருப்பதே இந்தப் பிரச்சினைக்கு மிகச் சிறந்த தீர்வுகளில் ஒன்றாகும்" எனத் தெரிவித்தார்.

அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே வரலாற்றுச் சிறப்பு மிக்க அணுசக்தி ஒப்பந்தம் கடந்த 2015 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.

தங்களது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதங்கள் தயாரிப்பதற்கானவை அல்ல என்பதை ஈரான் உறுதி செய்யவும், அதற்குப் பதிலாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை வல்லரசு நாடுகள் விலக்கிக் கொள்ளவும் இரு தரப்பிலும் அந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக கடந்த ஆண்டு மே மாதம் அறிவித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை மீண்டும் அமுல்படுத்தினார்.

அதன் தொடர்ச்சியாக, ஈரானின் கட்டுமானத் துறையைக் குறிவைத்து புதிய பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா கடந்த வியாழக்கிழமை அறிவித்தது.

இதனால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் மேலும் அதிகரித்தது. இந்தச் சூழலில், பதற்றத்தைத் தணிப்பதற்கான பேச்சுவார்த்தையை அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்போவதில்லை என்று ஈரான் மதத் தலைவர் அயதுல்லா கமேனி எனக் கூறியுள்ளார். (ஜ-2)

## பிரெக்ஸிட் நடவடிக்கையில் தாமதம்; போரிஸ் ஜான்சன் மன்னிப்புக் கோரினார்

(லண்டன்)

ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறுவதற்கான 'பிரெக்ஸிட்' நடவடிக்கையில் ஏற்பட்ட தாமதத்துக்கு பிரதமர் போரிஸ் ஜான்சன் மன்னிப்புக் கேரினார்.

28 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து விலக இங்கிலாந்து முடிவு எடுத்தது. இது தொடர்பாக 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற பொது வாக்கெடுப்பில், பெரும்பான்மை மக்கள் அரசின் முடிவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஆனால் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறுவதற்கான 'பிரெக்ஸிட்' நடவடிக்கையை நிறைவேற்றுவதில் இன்னும் இழுபறி நிலை உள்ளது.

இந்த விவகாரத்தில் டேவிட் கமரூன், தெரசா மே என 2 பிரதமர்கள் பதவி விலகியது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய கூட்டமைப்பில்



இருந்து இங்கிலாந்து கடந்த மாதம் 31 ஆம் திகதி விலகுவதற்கு கெடு விதிக்கப்பட்டிருந்தது. இதில் இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் உறுதியாக இருந்தார்.

ஒக்டோபர் 31 ஆம் திகதிக்குள் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேற முடியாமல் தாமதம் ஏற்பட்டால் சாக்கடை குழியில் விழுந்து சாவேன் என்று அவர் ஆவேசமாக தெரிவித்திருந்தார்.

ஆனால் ஐரோப்பிய கூட்டமைப்புடன் ஒப்பந்தம் செய்து கொண்டுதான் வெளியேற வேண்டும், ஒக்டோபர் 31 என்ற கெடுவை நீட்டிக்க வேண்டும் என்று இங்கிலாந்து நாடாளுமன்றம் கூறியது.

அதைத் தொடர்ந்து கெடுவை ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரை நீட்டிப்பதற்கு ஐரோப்பிய கூட்டமைப்பு சம்மதம் தெரிவித்தது.

அதைத் தொடர்ந்து மக்களின் உத்தரவைப் பெறுகின்ற நோக்கத்தில் நாடாளுமன்றத்துக்கு திடீர் தேர்தல் நடத்த பிரதமர் போரிஸ் ஜான்சன் முடிவு செய்தார்.

இது தொடர்பான சட்ட மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறிவிட்டது.

டிசெம்பர் 12 ஆம் திகதி அங்கு தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில், 'பிரெக்ஸிட்' நடவடிக்கையை மேற்கொள்வதில் ஏற்பட்ட கால தாமதத்துக்காக நாட்டு மக்களிடம் பிரதமர் போரிஸ் ஜான்சன் மன்னிப்புக் கோரினார். (ஜ-2)

# சஹ்ரான் குறித்து உளவு பார்க்க

# 10 நாட்களுக்கு முன் அறிவுறுத்தல்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியம்

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியாக கருதப்படும் மொஹமட் சஹ்ரான் எனும் பயங்கரவாதியின் புகைப்படத்தைப் பெற்று உளவு நடவடிக்கைகளை ஆரம்பிக்க, குண்டுத் தாக்குதல் நடத்தப்பட 10 நாட்களுக்கு முன்பு (ஏப்ரல் 11 ஆம் திகதி) தனது பொறுப்பின் கீழ் இருந்த பொலிஸ் பிரதானிகளுக்கு உரிய அறிவுறுத்தல்கள் எழுத்து மூலம் வழங்கப்பட்டதாக, தாக்குதல் இடம்பெறும் போது கொழும்புக்கு பொறுப்பாக இருந்தவரும் தற்போது தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து சேவைகள் தொடர்பிலான பிரதிப் பொலிஸ்மா அதிபருமான லலித் ஷெல்டன் பத்திநாயக்க சாட்சியமளித்தார்.**





உயிர்த்த ஞாயிறு தினம் இடம்பெற்ற தொடர் தற்கொலை தாக்குதல்களை மையப்படுத்தி அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க கடந்த செப்டெம்பர் 21 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சாட்சி விசாரணைகள் நேற்று முன்தினம் 2 ஆவது நாளாக நடைபெற்ற நிலையில் 2 ஆவது சாட்சியாளராக பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஷெல்டன் பத்திநாயக்க சாட்சியமளித்தார்.

இதன்போது, 2019.04.11 அன்று கொழும்பு பிரதிப்பொலிஸ்மா அதிபருக்குக் கிடைத்த மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நந்தன் முணசிங்க அனுப்பிய உளவுத் தகவல் அடங்கிய விசேட கடிதம் மற்றும் அதே திகதியில் அப்போது கொழும்பின் பதில் பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த அஜித் ரோஹண தனக்குக் கீழ் இருந்த உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிய விசேட ஆலோசனை கடிதம் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு அவர் மேற்படி சாட்சியத்தையளித்தார்.

ஆணைக்குழுவின் தலைவர் மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதிபதி ஜனக் டி சில்வாவின் தலைமையிலான மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதிபதி நிசங்க பந்துல கருணாரத்ன, ஓய்வுபெற்ற நீதிபதிகளான நிஹால் சுனில் ராஜபக்ஷ, அத்தபத்து லியனகே பந்துல குமார அத்தபத்து, ஓய்வுபெற்ற அமைச்சு செயலர் டபிள்யூ.எம்.எம். அதிகாரி ஆகியோர் முன்னிலையில் அவர் சாட்சியமளிக்க ஆரம்பித்தார்.

நேற்று முன்தினம் சாட்சி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட போது மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் அய்ஷா ஜினசேன, பிரதி சொலிசிற்றர் ஜெனரல்களான சஞ்ஜீவ திஸாநாயக்க, சுஹர்ஷி ஹேரத், அரச சட்டவாதிகளான கே.டி. சம்பத் மற்றும் ஹரீந்ர ஜயசிங்க ஆகியோர் ஆணைக் குழுவில் பிரசன்னமாகியிருந்த நிலையில் மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் அய்ஷா ஜினசேனவின் மேற்பார்வையில், பிரதி சொலிசிற்றர் ஜெனரல் சுகர்ஷி ஹேரத் சாட்சியை நெறிப்படுத்தினார்.

இதன்போது சாட்சியாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஷெல்டன் பத்திநாயக்க சார்பில் மது ஜயதிலக மற்றும் ஷெஹான் டி சில்வா ஆகியோர் ஆணைக் குழுவில் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தந்தை விட்டுச்சென்ற பாதையில் சஜித் பயணிக்கிறார் - தாஜூடீன்

(அறுகம்பை)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் சேவை நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து மீண்டும் ஆரம்பிப்பதற்காகவே ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ களமிறங்கியுள்ளார் என இலங்கை மக்கள் காங்கிரஸின் பொத்துவில் பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.எம்.எம். தாஜூடீன் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேச அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மத்திய குழுவின் ஏற்பாட்டில் அறுகம்பை தனியார் விடுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக்களாகிய முஸ்லிம் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் சேவை நிறுத்தப்பட்ட இடத்தில் இருந்து மீண்டும் ஆரம்பிப்பதற்காகவே தற்போதைய ஜனாதிபதி வேட்பாளராக இன்று அவருடைய மகன் சஜித் பிரேமதாஸ களமிறங்கியுள்ளார்.

தந்தை விட்ட இடத்திலிருந்து தனது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளதால்தான் இன்று அவர் ரணசிங்க பிரேமதாஸவின் பாதணிகளை அணிந்து அவரைப் போன்றே ஆடை அணிந்து தேர்தல். பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார்.

இவர் 1990 ஆம் ஆண்டு பொத்துவில் பகுதியில் அசாதாரண காலங்களில் இலவச மின்சார இணைப்பை வழங்கி உதவியவர். இவரை பொத்துவில் மக்கள் எவரும் எளிதில் மறந்து விடமாட்டார்கள் என நம்புகின்றேன்.

மேலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் தான் சிறுபான்மை மக்களாகிய முஸ்லிம்கள் மீது தாக்குதல்கள் அதிகளவில் நடத்தப்பட்டன.

இனவாதக் கருத்துக்களையும் தாக்குதல்களையும் மேற்கொள்ளும் மாபெரும் இனவாத முகவர்களான உதய கம்மன்பில, ரத்ன தேரர், ஞானசார தேரர், கருணா அம்மான், பிள்ளையான் போன்ற அனைத்து இனவாதக் குழுக்களும் ஒன்றாக இணைந்துள்ள கட்சியாகவே இன்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காணப்படுகிறது' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## துறவி

ஒரு அரசனும் அமைச்சரும் ஒருநாள் ரொம்ப சாவகாசமாகப் பேசிக் கொண்டிருந்தார்களாம். அரசன் அமைச்சரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டாராம். "ஏன் அமைச்சரே! ஆசை இல்லாமல் ஒரு மனிதனாலே இருக்க முடியுமா?" என்றார். ஏன் முடியாது. "துறவி"கள் எல்லாம் அப்படிப்பட்டவர்கள் தானே என்றார் அமைச்சர். "அவர்களெல்லாம் உண்மையிலேயே ஆசையை விட்டவர்கள் தானா?" என்று கேட்டார் ராஜா. "அப்படித்தான் இருக்க வேண்டும்" என்றார்.

"அப்படியென்றால் ஆசையே இல்லாத துறவியை நான் பார்க்க வேண்டுமே" என்றார். "அது என்ன பிரமாதம்! அதுக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்" என்றார். இவர் சொல்லி விட்டு உடனே புறப்பட்டுப் போனார். அங்கே இங்கே தேடினார். பின்பு தான் அவருக்குப் புரிந்தது. உண்மைத் துறவியைக் கண்டு பிடிக்கிறது எவ்வளவு கஷ்டமான காரியம் என்று. இருந்தாலும் ராஜாவிடம் சொல்லியாச்சே. உண்மைத் துறவியைக் காட்டுறேன் என்று. இப்ப என்ன செய்வது? ராஜாவிடம் சொன்னபடி நடக்கவில்லையென்றால் அவருக்கு கோபம் வந்துவிடுமே.

அமைச்சர் யோசனை செய்தார். அவருக்கு ஒரு வழி தெரிந்தது. அதுதான் சரியென்று முடிவு செய்தார். அதாவது.... அந்த ஊரிலே அவருக்குத் தெரிந்த நாடக நடிகர் ஒருத்தர் இருந்தார். நல்லா நடிப்பார். அவரைப் போய் பார்த்தார். "இதோ பாரு எனக்காக நீ ஒரு காரியம் செய்ய வேணும்" என்றார். "என்ன?" என்று கேட்டார்.

"நீ ஒரு துறவி மாதிரி கொஞ்ச நேரத்துக்கு நடிக்க வேண்டும். ராஜா வந்து உன்னை பார்த்துவிட்டுப் போகிறவரைக்கும் நடி. அதுபோதும். அதுக்காக உனக்கு 10 ஆயிரம் ரூபாய் தருகிறேன்" என்றார். அவர் எந்தக் காலத்திலே இவ்வளவு பணத்தை பார்த்திருக்கிறார். அதனாலே உடனே 'சரி' என்று ஒத்துக்கொண்டார். அமைச்சர் அரண்மனைக்குத் திரும்பி வந்தார்.

"என்ன அமைச்சரே இன்னுமா ஒரு உண்மையான துறவி கிடைக்கவில்லை" என்றார் ராஜா. "உண்மையான துறவி ஒருத்தரை இப்பதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னர் பார்த்துப் பேசிவிட்டு வருகிறேன். அவர் நம்ம ஊருக்கு வெளியே குளக்கரையிலே உள்ள ஒரு ஆலமரத்துக்கு அடியிலே உட்கார்ந்திருந்தார்" இவர்.

"அப்படி என்றால் உடனே புறப்படுங்கள்" என்றார். ராஜா பரிவாரங்களோடு புறப்பட்டார். அங்கே அந்த மரத்தடியிலே அந்த ஆள் வேடம் போட்டுக்கொண்டு துறவி மாதிரி உட்கார்ந்திருந்தார். ராஜா நேராகப் போனார். அந்தத் துறவி காலிலே விழுந்து வணங்கினார். உடனே ராணியும் அவர் காலிலே விழுந்தார்கள். அடுத்தபடியாக அமைச்சர் விழுந்தார். அவருக்குத் தெரியும் இது நம்ம ஆள்தான் என்று... இருந்தாலும் என்ன செய்கிறது. பரிவாரங்களெல்லாம் துறவி காலிலே விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டார்கள். ராஜா பின்பு தங்கத் தட்டிலே பொன்னையும் பொருளையும் வைத்து அந்தத் துறவியிடம் ரொம்பப் பணிவாக நீட்டினார். தாங்கள் தயவு செய்து இதை ஏற்றுக் கொள்ளவும் என்று வேண்டிக்கொண்டார். அந்தத் துறவி பற்றில்லாமல் அதைப் பார்த்தார். "எல்லாத்தையும் துறந்துவிட்ட எனக்கு இதுகளெல்லாம் எதுக்காக?" என்று சொல்லி மறுத்துவிட்டார்.

"ஆகா உண்மையான துறவியைப் பார்த்துவிட்டோம்" என்ற ஆனந்தம் அரசருக்கு. ரொம்ப நிம்மதியாக, திருப்தியாக திரும்பி வந்தார் அரண்மனைக்கு. அதன் பின்பு அமைச்சர் யாருக்கும் தெரியாமல் அந்த துறவியிடம் ஓடினார். சொன்ன மாதிரி பணத்தை நீட்டினார். "இந்தா நான் உன்னிடம் சொன்னபடி 10 ஆயிரம் ரூபாய் எடுத்துக்கொள்" என்றார். அந்த ஆள் ராஜாவிடம் சொன்னது மாதிரியே "எல்லாத்தையும் துறந்துவிட்ட எனக்கு இதுகளெல்லாம் எதுக்காக? வேண்டாம்" என்றார்.

"நடித்த வரைக்கும் போதும். இனிமேல் இந்த நாடகமெல்லாம் வேண்டாம்...வேடத்தைக் கலை" என்றார் அமைச்சர்.

"இது வேடமில்லை. இது வசனமும் இல்லை. இது உண்மை. கொஞ்ச நேரம் துறவி மாதிரி நடித்ததுக்கே இந்த தேசத்து ராஜா, ராணி, அமைச்சர், பரிவாரங்கள் எல்லோரும் என் காலிலே விழுந்து வணங்குகிறார்கள். அப்படி என்றால் உண்மைத் துறவியாக இருக்கிறது எவ்வளவு பெருமையான விடயம்? நான் உண்மையாகவே துறவி ஆகப் போகிறேன். முடிவு செய்து விட்டேன்" என்றார் அந்த நடிகர்.

வேடம் கூட எப்படிப்பட்ட விளைவுகளை உண்டு பண்ணுகிறது பார்த்தீர்களா?

நம்ம ஆள் ஒருத்தர்... ரொம்ப வசதியாகத்தான் இருந்தான். ஒருநாள் அவன் சொத்துப் பூராக திருட்டுப் போய்விட்டது. அதன் பின்பு இவன் துறவி மாதிரி ஆகிவிட்டான். ஊர் ஊராகச் சுற்றினான். ஒரு குருநாதரைத் தேடிக் கண்டு பிடித்தான். அவரிடம் சீடனாகச் சேர்ந்துகொண்டான். அவனைப் பார்த்து ஒருத்தர் கேட்டார். "நீ உண்மையான சீடன்" தானா என்று.

"இல்லை சீடன் மாதிரி நடிக்கிறேன்" என்றான் இவன்.

"அது குரு துரோகம் இல்லையா" என்றார் அவர்.

"இல்லை நான் செய்தது குரு துரோகம் இல்லை. என் குரு செய்தது தான் துரோகம். என்னுடைய பணத்தை கொள்ளை யடித்தது இவர்தான். அதை எங்கே வைத்திருக்கிறார் என்று கண்டு பிடிக்கிறதுக்குத்தான் இவரிடம் வந்து சேர்ந்திருக்கிறேன்" என்றார்.


# மக்களின் தேவைகளை அறிந்தவரே ஜனாதிபதியாக தெரிவாக வேண்டும்

## திஸ்ஸ விருப்பம்

(கொழும்பு)

மக்களின் தேவைகளையும் அவர்களின் நிலைப்பாட்டையும் அறிந்து செயற்படும் தலைவரே அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று ஐ.தே.கவின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் பத்து இலட்சத்துக்கும் குறைவான கடன் பெற்று அதனை உரிய காலத்திற்குள் திருப்பிச் செலுத்த முடியாமல் கடன் பற்றிய தகவல் பணியகத்தின் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருப்பவர்களுக்கு அதிலிருந்து விடுபட மேலும் ஒருவருடம் கால அவகாசம் வழங்கப்படும் என்றும் இதன்மூலம் கடன் பிரச்சினையால் வாழ்க்கையில் முன்னேற முடியாமலிருப்பவர்கள் மேலெழுவதற்கான வாய்ப்பளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பல்கலை.மாணவி திடீர் மரணம்



(பேராதனை)

ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பிரிவில் கல்வி கற்று வந்த மாணவி ஒருவர் திடீரென மரணமடைந்தார். காய்ச்சல் காரணமாக பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் குறித்த மாணவி உயிரிழந்தார்.

கண்டி, பிலிமதலாவை பிரதேசத்தை சேர்ந்த ஓஷானி எரங்கிக்கா பிட்டவல என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்தார். டெங்குக் காய்ச்சல் பரவுவதன் காரணமாக ரஜரட்ட பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடப்பட்டது.

இந்த மாணவி பரீட்சைக்காக சென்ற நிலையில், காய்ச்சல் ஏற்பட்டு பிலிமதலாவையில் அமைந்துள்ள வீட்டிற்கு சென்றுள்ளார். பின்னர் அங்கிருந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்தார். (இ-7)

# சம்பந்தர் பாடுகின்ற தேவாரம் இம்முறை தமிழ் மக்கள் மத்தியில் எடுபட மாட்டாது

## சு.க.அமைப்பாளர் கிருஷ்ணமூர்த்தி தெரிவிப்பு

(காரைதீவு)

சம்பந்தர் பாடுகின்ற தேவாரம் இம்முறை தமிழ் மக்கள் மத்தியில் எடுபடவே மாட்டாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் காரைதீவு பிரதேச அமைப்பாளர் வீரகத்தி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பு வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்கு தமிழரசுக் கட்சி எடுத்துள்ள தீர்மானம் குறித்து நேற்று திங்கட்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்.மக்கள் சார்பான தீர்மானங்களை தமிழரசுக் கட்சி ஒரு போதும்எடுப்பதே இல்லை. மாறாக ஐக்கிய தேசிய கட்சி சார்பான தீர்மானங்களையே எப்போதும் எடுத்து வருகின்றது. அந்த வகையில்தான் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கின்ற தீர்மானத்தை அது எடுத்துள்ளது. இதில் அதிசயப்படுவதற்கு எதுவுமே கிடையாது.

ஆனால் தமிழரசுக் கட்சியின் சுய உருவத்தை தமிழ் மக்கள் அண்மைய வருடங்களில் உள்ளபடி மிக நன்றாக புரிந்து விட்டார்கள். ஆகவே தமிழரசுக் கட்சியின் தீர்மானத்துக்கு பின்னால் தமிழ் மக்கள் இம்முறை செல்லவே மாட்டார்கள். தமிழ் மக்கள் ஏற்கனவே முடிவெடுத்து வைத்திருக்கின்றனர். அதன்படி இம்முறை தமிழ் மக்களின் கணிசமான வாக்குகள்மொட்டுக்கட்சியின் வேட்பாளர் கோத்தபாயவுக்கு கிடைக்கும் என்பதில் எந்தச் சந்தேகமுமே கிடையாது.


கடந்த நல்லாட்சி அரசாங்கம் மூலமாக எந்த நன்மைகளையும் சம்பந்தன் கம்பனி பெற்றுத் தரவே இல்லை. தீபாவளிக்கு தீர்வு வரும், தைப்பொங்கலுக்கு வரும் என்று சம்பந்தர் செய்தி வாசித்து கொண்டிருக்கிறாரே தவிர வேறு எதுவும் நடக்கப் போவதே இல்லை. குறைந்த பட்சம் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தி தருகின்ற விடயத்திலாவது இதய சுத்தியுடன் செயற்பட்டு இருந்தால் பரவாயில்லை.

இரு பிரதான வேட்பாளர்களில் ஒருவருக்குத்தான் தமிழ் மக்கள் வாக்களிக்க முடியும். சஜித் பிரேமதாஸ அவரின் தந்தை ஆர். பிரேமதாஸவின் அதே பாதையில் பயணித்து ஆட்சி புரியப் போவதாக அடிக்கடி சொல்லி வருகின்றார். ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தில் பிரதமராகவும் பின் ஜனாதிபதியாகவும் ஆர். பிரேமதாஸ இருந்த காலம் இலங்கையின் இருண்ட யுகமாகவும் கொடுங்கோல் ஆட்சிக்கு முன்னுதாரணமாகவும் இருக்கின்றது.

குறிப்பாக தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள், இன கலவரங்கள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. தமிழர் தேசத்தில் என்றும் முன்பு இருந்திராத வகையிலும், ஏனைய மாவட்டங்களில் இல்லாதளவுக்கும் பாதுகாப்புத் தளங்கள் நிரந்தரமாக அமைக்கப்பட்டன. அப்பாவித் தமிழ் இளைஞர்கள் இராணுவத்தால் வெறித்தனமாக படுகொலை செய்யப்பட்டனர் எனச் சுட்டிக்காட்டினார்.

தமிழரசுக் கட்சி தலைவர் சம்பந்தர் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை காணாமல் போன உறவினர்களின் பிரதிநிதி ஒருவர் வவுனியாவில் செருப்பை எறிய முற்பட்ட முயற்சி சம்பந்தருக்கு மாத்திரம் அல்ல ஒட்டுமொத்த தமிழரசுக் கட்சியின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல் முயற்சியே ஆகும். சஜித் பிரேமதாஸ மீதும், ஒட்டுமொத்த ஐ.தே.க. மீதும் நடத்தப்பட்ட தாக்குதல் முயற்சியே ஆகும்.தமிழரசு கட்சியையும், ஐ.தே. கவையும், சஜித்தையும் தமிழ் மக்கள் நிராகரித்துள்ளனர் என்பதற்கு இது ஒன்றே போதுமானது என மேலும் தெரிவித்தார். (ஜ)

# துப்பாக்கி தோட்டாக்கள், கஞ்சாவுடன் முன்னாள் இராணுவ அதிகாரி கைது



(பூண்டுலோயா)

பூண்டுலோயாவில் துப்பாக்கி தோட்டாக்கள் மற்றும் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பூண்டுலோயா கரஹாஹெடதென்ன பகுதியில் பொலிஸ் பொறுப்பதிகாரி ரஞ்சன பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய சோதனை நடவடிக்கையின்போதே அவர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது, ரி- 56 ரக துப்பாக்கியின் தோட்டாக்கள் - 31, வெற்றுத் தோட்டாக்கள் - 8 மற்றும் ஏனைய துப்பாக்கிகளின் தோட்டாக்கள் மற்றும் 13 கிலோ கிராம் கஞ்சா என்பன சந்தேக நபரிடமிருந்து மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பூண்டுலோயா கரஹாஹெடதென்ன பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இவர் முன்னாள் இராணுவ அதிகாரி எனவும் 6 வருடங்களுக்கு முன்னர் இராணுவக் கடமையிலிருந்து வெளியேறியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை எல்பொடை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்த பொலிஸார், மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

பூண்டுலோயா கரஹாஹெடதென்ன பிரதேசத்தில் சட்டவிரோதமாக தோட்டாக்களை ஒருவர் வைத்திருப்பதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து நீண்டகாலமாக மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசாங்க வேலைவாய்ப்பு சம்பந்தமாக எழுத்து மூலம் உறுதி மொழி வழங்கினால் பட்டதாரிகள் சஜித்துக்கு வாக்களிப்போம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு சம்பந்தமாக வாய்மூல அறிவித்தலை தவிர்த்து எழுத்து மூலம் உறுதி வழங்கினால் பட்டதாரிகள் அனைவரும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கு வாக்களிப்போம் என மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் கே.அனிர்தன் கோரிக்கை முன்வைத்தார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டு. ஊடக அமையம் திறக்கப்பட்டு முதலாவது ஊடக சந்திப்பாக இந்த ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இவ் ஊடகச்சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் சீ.மேரிமீரா உட்பட வேலையற்ற பட்டதாரிகள் கலந்து கொண்டனர். இதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் எங்களுடைய உழைப்பில் கஷ்டப்பட்டு பட்டதாரிகளாக இன்று வேலையற்று இருக்கின்றோம். 2014ஆம் ஆண்டு முதல் இன்றுவரையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2300 பேர் வேலையற்ற பட்டதாரிகள் இருக்கின்றார்கள்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் எங்கள் மீது கரிசனை காட்டாமலும் வேலை வாய்ப்புக்களை தர மறுத்துள்ளார்கள். எங்களுக்கு கடந்த அரசாங்கம் மீது நம்பிக்கை இருக்கவில்லை.

பட்டதாரிகள் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்துள்ள நிலையில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ கம்பளையில் நடைபெற்ற கூட்டத்தில் தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி பட்டதாரிகளின் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக தெரிவிக்கப்பட்ட செய்தியானது எங்களுக்கு மகிழ்ச்சி தருகின்றது.

இதனை வேலையற்ற பட்டதாரிகளாகிய நாங்கள் முழுமனதுடன் வரவேற்கின்றோம்.

இவ்வாறான சூழ்நிலையில் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளாகிய நாங்கள் கோரிக்கையை முன்வைக்கின்றோம். மட்டக்களப்பு மாவட்டத்திற்கு எதிர்வரும் 9ஆம் திகதி வருகை தரும் சஜித் பிரேமதாஸவிடம் நாங்கள் எழுத்துமூலமான கோரிக்கையை வழங்குவோம்.

இதனை ஏற்றுக்கொண்டு சஜித் பட்டதாரியாகிய எங்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டும். இவ்வாறு சஜித் பிரேமதாஸ உறுதிமொழி வழங்கினால் மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சஜித்துக்கு வாக்களிப்போம்.

அவ்வாறு உறுதிமொழி வழங்காவிட்டால் முழுமையாக பகிஷ்கரிப்போம். இதனால் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வாக்களிப்பை தவிர்க்க நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செப்புத்தொழிற்சாலை விசாரணை நிறைவு

(வெல்லம்பிட்டிய)

வெல்லம்பிட்டிய செப்புத் தொழிற்சாலை தொடர்பிலான, விசாரணைகள் நிறைவடைந்ததாக பயங்கரவாத விசாரணை பிரிவினர் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் பயங்கரவாத விசாரணை பிரிவினர் இதனைத் தெரிவித்தனர்.

அதன்படி குறித்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளில் கைது செய்யப்பட்டுள்ள அப்துல்லா ராஜேந்திரன் என்பவரை எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# கோத்தபாய குற்றமிழைத்திருந்தால் அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை

## வீரவன்ச கேள்வி? மங்கள, சஜித் மீதும் சாடல்



(பாணந்துறை)

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ, குற்றமிழைத்திருந்தால் ஏன் கடந்த நான்கரை வருடங்களாக அவருக்கெதிராக இந்த அரசாங்கம் சட்ட நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று மகிந்த அணி நாடாளு மன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கேள்வியெழுப்பினார்.**

பாணந்துறையில் நேற்று இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தின் போதே அவர் மேற் கண்டவாறு கேள்வியெழுப்பினார். "கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது அமைச்சர் மங்கள சமர வீர, மிலேனியம் சவால்கள் நிதிய ஒப்பந்தம் தொடர்பாக பத்திரமொன்றைக் கொண்டு வந்திருந்தார்.

இதில், அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதுதான் பிரதான.நோக்கமாக இருக்கிறது. இந்தத் தரப்பின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, பிரசார மேடைகளில் சர்வதேசத்தின் பேச்சைக் கேட்டு செயற்பட முடியாது என ஏமாற்றுக் கருத்துக்களைக் கூறிக்கொண்டிருக்கிறார்.

ஆனால், அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் இந்த அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவைக்கு வந்தபோது, சஜித் பிரேமதாஸ ஒரு வார்த்தையையேனும் எதிர்த்துப் பேசவில்லை.

அவர் இன்று கோத்தபாய ராஜபக்ஷவை பகிரங்க விவாதத்திற்கு வருமாறு சவால் விடுக்கிறார். ஆனால், தனியார் தொலைக்காட்சியொன்று அவரை விவாதத்திற்கு அழைத்தபோது அவரால் இதுவரை செல்ல முடியாமல் உள்ளது.

ஊடகவியலாளரின் கேள்விக்கே பதில் சொல்ல முடியாத சஜித், எப்படி மக்களின் கேள்விகளுக்கு பதில் வழங்குவார்? அத்தோடு இன்று கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிரான காணொலிகளைத் தயார் செய்வதிலும் அவரது குழுவினர் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் இதற்கு எல்லாம் அஞ்சமாட்டோம். கோத்தபாய ராஜபக்ஷ கடந்த காலங்களில் குற்றங்களை செய்திருந்தால், இந்த நான்கரை வருடங்களாக ஏன் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை இவர்களிடம் கேட்க வேண்டும்" என அவர் மேலும்தெரிவித்தார். (இ-7)

## பரிசில் நாள்

(யாழ்ப்பாணம்)

புத்தூர், வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு நாளை 6 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் ஜே.ஏ.தவநாயகம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதிக்கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) த.பால்ராஜ்,சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், கௌரவ விருந்தினராக பன்னாலை சேர்.கனகசபை வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் க.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

(யாழ்ப்பாணம்)

யாழ்.உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பதில் அதிபர் சு.உதயகுமார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம் பெறும்.

இதில் பிரதம விருந்தினராகக் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் இரா.ஜெயக்குமார் கலந்து கொள்வர். (இ-10)

### மூவர் மீது துப்பாக்கிச்சூடு

# கொலைக்குற்றத்திற்காக தேடப்பட்டு வந்தவர் கைது

## இராணுவத்திலிருந்து தப்பியவர் ஹெரோயினுடன் அகப்பட்டார்

(மிரிஹான)

கொஹூவலை, வத்தளை மற்றும் எல்பிட்டி ஆகிய பிரதேசங்களில் கடந்த ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரொருவர் மிரிஹான சட்ட அமுலாக்கல் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

மேற்குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் மூவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்தமை தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இவர் 29 வயதுடைய அம்பலாந்தொட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

கைது செய்யப்பட்ட போது இவரிடமிருந்து 2 கிராம் ஹெரோயின், 2 கைத்தொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் போது அவர் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர் என்பதும் தெரியவந்தது.

மிரிஹான-சட்ட அமுலாக்கல் பிரிவினர் சந்தேகநபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# மிலேனியம் ஒப்பந்தம் இலங்கைக்கு கிடைக்கும் மிகப்பெரிய பரிசு!

### மங்கள விடாப்பிடி



(கொழும்பு)

மிலேனியம் சவால்கள் இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பின்னர் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக நிதி அமைச்சு தெரிவித்தது.

குறித்த ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கையின் ஒரு அடியேனும் இழக்கப்படுமென யாரேனும் நிரூபித்தால் தான் அரசியலில் இருந்து விலகுவதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மிலேனியம் ஒப்பந்தம் இலங்கைக்கு அமெரிக்காவின் ஊடாக கிடைக்கும் மிகப் பெரிய பரிசு எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அருணாச்சலம் மண்டபத்தில் அதிபர் கே.கிருஷ்ணப்பிள்ளை தலைமையில் இடம் பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக வலிகாம வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) சி.மதியழகன் ஆகியோர் கலந்து கொள்வர்.

ஆசியுரையைதெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், நினைவுப் பேருரையை பிரதி அதிபர் திருமதி. நந்தினி சிவராஜன் ஆகியோர் வழங்குவர். (இ-10)

# சமையல் எரிவாயுவை அதிக விலைக்கு விற்பனை செய்தவர்களுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

சமையல் எரிவாயுவை மறைத்து வைத்து அதிக விலையில் விற்பனை செய்துவந்த 37 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படவுள்ளது.


நாட்டில் தற்போது சமையல் எரிவாயுவிற்கான தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சில வர்த்தகர்கள், எரிவாயுக் கொள்கலன்களை மறைத்து வைத்து சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாக நுகர்வோர் சேவைகள் அதிகார சபை தெரிவித்தது.

அவ்வாறான வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நுகர்வோர் சேவைகள் அதிகார சபை எச்சரித்தது. (ஐ)



**புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் "ஜனாதிபதித் தேர்தலும் சிறுபான்மைத்தேசிய இனங்களின் எதிர்காலமும்" என்ற தலைப்பிலான பகிரங்கக் கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழில் இடம் பெற்றது.**




# மகிந்த துரோகியாக இருந்தால் நான் ஒன்றும் செய்யமுடியாது

## வல்லையில் ரணில் காட்டம்

(கரணவாய்)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வைக்கப்பட்ட யோசனைகள் துரோகம் என்றால் பெரிய துரோகி மகிந்த ராஜபக்ஷ தான் என நான் அங்குள்ளவர்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். மகிந்த ராஜபக்ஷ துரோகியாக இருந்தால் நான் அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. அது அவரது யோசனை. கோத்தபாய ராஜபக்ஷ மகிந்த ராஜபக்ஷவின் யோசனைகளை முன் கொண்டு வருவதற்கு தயாராக இல்லை. ஆனால் நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஏனென்றால் எங்களுக்குத் தேவை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு. எனவே நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

50 ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை நீடித்துக் கொண்டிருக்கிறது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு தெரிவித்து தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை வல்லைவெளியிலுள்ள யாழ்.பீச் ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில், நான் இங்கே சிங்களத்தில் பேசுகின்றேன்.ஏனென்றால் நான் இங்கு பேசுவது தெற்கில் இருப்பவர்களுக்கு தெரியவேண்டும். 2015 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி முழு நாடுமே அன்னப் பறவைக்கு வாக்களித்து முழுச் சுதந்திரத்தையும் பெற்றுக் கொண்டோம். மக்களுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்வதை நாங்கள் நிறுத்திக் கொண்டோம். வடக்கு மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதை நாங்கள் தடுத்து நிறுத்தியுள்ளோம். தண்ணீர் கேட்டுப் போராடும் மக்களுக்குத் துப்பாக்கியால் சுடும் கலாசாரத்தை நாங்கள் நிறுத்தியுள்ளோம்.

எண்ணெய் விலையைக் குறைக்குமாறு போராடிய மீனவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தை நாங்கள் நிறுத்தியுள்ளோம். ஊதியத்தை அதிகரிக்கச் சொன்ன மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதை நாங்கள் நிறுத்தியுள்ளோம். காணாமல் போவதை நாங்கள் நிறுத்தியுள்ளோம். அவசரகால தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்திருப்பதை நாங்கள் நிறுத்தியுள்ளோம். வெள்ளை வான் கடத்தலை நிறுத்தி இருக்கின்றோம்.

முழுமையான சுதந்திரத்தை நாங்கள் ஏற்படுத்தி இருக்கின்றோம். முழு நாட்டுக்கும் அந்தச் சுதந்திரம் காணப்படுகிறது. நாங்கள் இன்று வடக்கின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆகவே அதனை மீண்டும் தாருங்கள். காணாமல் போனமை தொடர்பில் ஆராய்வதற்கு அலுவலகம் அமைக்கப்பட்டிருக்கிறது. விடுதலை செய்யப்பட வேண்டியவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் யுத்தத்தால் காயப்பட்டவர்கள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

யாழ்ப்பாண நகரத்திற்கு இலங்கையிலேயே மிகச்சிறந்த நகர மண்டபத்தை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஏராளமான திட்டங்களை நாங்கள் செயற்படுத்தி வருகிறோம். எனவே தான் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி அன்னப்பறவை சின்னத்துக்கு எதிரே புள்ளடியிட்டு சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்கி இந்தச் சுதந்திரத்தை முன் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உங்களை நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம். வெள்ளை வான்கள் மீண்டும் வர அனுமதிக்க வேண்டாம். சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி ஆக்குங்கள்.

இந்தச் சுதந்திரத்தை நாங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும. அதே போல வடக்கின் பிரச்சினைகளுக்கு நாங்கள் தீர்வு காண வேண்டும். நாங்கள் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கி அதன் மூலம் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்துவோம். மொட்டு கட்சி எதிர்த்ததால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இம்முறையும் ஒரு தேவை இருக்கின்றது. இந்த அரசியல



மைப்பை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்கு. வடக்கு, தெற்கு இடையே பேதங்களை உண்டு பண்ணி அரசியல் அமைப்பு தொடர்பாக பேசிக்கொண்டு எந்த நாளும் எங்களால் நாட்டை முன்கொண்டு செல்லமுடியாது. அதனாலேயே கேட்கின்றோம் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்கித் தருமாறு.

அதன்பிறகு புதிய அரசியலமைப்பு ஆதரவளிக்கும் கட்சிகளுக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். 125 ஆசனத்தை பாராளுமன்றத்திலே பெற்றுத் தாருங்கள். உங்களுடைய அரசியலமைப்பு தொடர்பாக சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும். அதே போல நாங்கள் புதிய அரசியலமைப்பை முன் வைக்க இருக்கிறோம். ஜனாதிபதி, பிரதமரின் இணக்கப்பட்டோடு செயற்படுத்தக்கூடியதாக மாற்றி அமைக்க வேண்டும். புதிய தேர்தல் முறையை உருவாக்குதல் ஒன்றிணைந்த நாட்டுக்குள் விசேடமாக மாகாண சபை அதிகாரத்தைப் பரவலாக்குதல் அந்த அதிகாரப் பகிர்வு பிரேமதாஸ, சந்திரிகா, மகிந்த ஆகியோரின் காலத்தில் கொண்டுவரப்பட்ட அறிக்கை ஆகியவற்றை மையப்படுத்தியதாக தான் முன்னெடுக்க உள்ளோம். அது குறித்து நாங்கள் வெளியிலே சொல்லப்போவதில்லை. அதற்குள்ளே எங்களுக்கு தீர்வினை தேடிக்கொள்ள முடியும். ஐக்கிய தேசியக் கட்சி ஊடாக யோசனைகளை முன் வைக்கப் போவதும் இல்லை. நாங்கள் செனட் சபையை உருவாக்க இருக்கின்றோம். மாகாண சபையின் உறுப்பினர்கள் அதற்கு தெரிவு செய்யப்படுவார்கள். அதுமாத்திரமல்ல நாங்கள் இதுவரை பேச்சுவார்த்தை நடத்தி தீர்த்துக் கொண்டிருக்கிற, தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு நாங்கள் தீர்வைக் கொண்டு வர வேண்டும்.

காணிகளை மீள கையளித்தல், காணாமல் போனவர்கள், நீண்டகாலமாக தண்டனை அனுபவித்து வரும் சிறைக்கைதிகள் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும். அதனால்தான் நாங்கள் வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கு ஆதரவு அளிக்குமாறு கோரியிருக்கின்றோம்.

இது தொடர்பில் நாங்கள் யாரிடமும் இரகசியமாக பேச்சுவார்த்தை நடத்தவில்லை. இரகசிய ஒப்பந்தங்களை கைச்சாத்திடவும் இல்லை.நான் கேள்விப்பட்டேன் தமிழரசுக் கட்சி இப்போது சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி ஆக்குவதற்கு இணங்கி இருக்கிறது. ஏனைய கட்சிகளிடமும் நான் இதனையே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழரசுக்கட்சி மகிந்தவின் கோரிக்கைகளை ஏற்கனவே ஏற்றிருந்தது. எங்களுக்கு இப்போது எஞ்சியிருப்பது மகிந்தவை, மகிந்தவின் யோசனைகளுக்கு இணங்க வைப்பது மாத்திரமே. அதனை நாங்கள் செய்யப் போகின்றோம்.

இப்போது இந்த ஊடகத்தில் இருப்பவர்கள் எங்களுக்கு உதவி செய்வார்கள். அவர்கள் எல்லோரும் சொல்வார்கள் நாங்கள் நாட்டைக் காட்டிக் கொடுக்கின்றோம் என்று. இப்போது அவர்களுக்கு சொல்வதற்கு எதுவும் கிடையாது. அந்தத் தேர்தல் முறைமை என்னுடையது அல்ல. இப்போது மிலேனியம் தொடர்பில் அவர்கள் பேசுகிறார்கள்.அதனூடாக நாடு பிளவுபடுவதாக அவர்கள் சொல்கிறார்கள். அது இரகசிய ஒப்பந்தம் என்கிறார்கள் துரோகி என்று என்னைச் சொல்கிறார்கள்.

மகிந்த ராஜபக்ஷவின் யோசனைகள் துரோகம் என்றால் பெரிய துரோகி மகிந்த ராஜபக்ஷ தான் என நான் அங்குள்ளவர்களுக்கு சொல்ல விரும்புகின்றேன். மகிந்த துரோகியாக இருந்தால் நான் அதற்கு ஒன்றும் சொல்ல முடியாது. மகிந்தவின் யோசனைகளை முன் கொண்டு வருவதற்கு கோத்தபாய தயாராக வில்லை. ஆனால் நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஏனென்றால் எங்களுக்குத் தேவை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

நாங்கள் ஒரு அரசியல் அமைப்பை உருவாக்குவோம். அதை ஒரு பொதுஜன வாக்கெடுப்புக்கு விடுவோம். துரோகி என்று சொல்பவர்கள் சில ஊடகங்களின் ஊடாக சொல்கிறார்கள். சிறுபான்மையினரின் பிரச்சினைகளைப் போல நாட்டின் சனத்தொகையில் பெரும்பான்மையாக இருக்கக்கூடிய பெண்களின் பிரச்சினைக்கு நாங்கள் தீர்வு காண வேண்டும்.

நாங்கள் யாழ்ப்பாணத்தை இன்னும் அபிவிருத்தி செய்ய இருக்கின்றோம். நாங்கள் வட பகுதியை நவீனமயப்படுத்த இருக்கின்றோம். அதனை நாங்கள் செயற்படுத்துவோம். முதற்கட்டமாக வடக்கு, கிழக்கு மாகாணம் மற்றும் மொனராகலை ஆகிய பகுதிகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் நாட்டின் அபிவிருத்தியடையாத பகுதிகளாக ஏற்றுக்கொள்ளுமாறு சர்வதேசத்துக்கு சொல்கிற அதே வேளையில் நாட்டின் ஏனைய பகுதிகளை அபிவிருத்தி அடைந்த பகுதிகளாக கருத்திற்கொண்டு இந்தப் பகுதிக்கு அதிக நிதி ஒதுக்குமாறு கோரிக்கை விடுக்க இருக்கின்றோம்.

அதற்கு மேலதிகமான நிதியை சர்வதேசத்திடமிருந்து பெற்று வடக்கில் விவசாயத்தை நவீனமயப்படுத்த இருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# சுதந்திரமாகவும் அமைதியாகவும் தேர்தலை முன்னெடுக்க முடிந்தமை நாட்டின் வெற்றியாகும் - ஜனாதிபதி

(கொழும்பு)

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளை மிக சுதந்திரமாகவும் நீதியானதாகவும் அமைதியாகவும் முன்னெடுக்க முடிந்துள்ளமை நாட்டின் வெற்றியாகுமெனவும் கடந்த காலத்தில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட விரிவான அரசியல் மறுசீரமைப்புக்கள் காரணமாகவே இந்த ஜனநாயகத்தை நாட்டில் ஏற்படுத்த முடிந்துள்ளதெனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.


இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் மூவரின் நற்சான்றுப் பத்திரங்களை கையளிக்கும் நிகழ்வில் நேற்று முற்பகல் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.



லெபனான் குடியரசு, நைஜீரியா மற்றும் ஐரோப்பிய சங்கம் ஆகியவற்றின் இலங்கைக்கான புதிய இராஜதந்திரிகள் நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதியிடம் தமது நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர். (இ-7)

# மஹாராஜாவை தோற்கடித்த எமக்கு நுழைவாயில் காவலனை தோற்கடிப்பது சிரமமான காரியமல்ல - கிரியெல்ல





(கண்டி)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக ரீதியில் மஹாராஜாவை தோற்கடித்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு, அதே ஜனநாயக ரீதியில் நுழைவாயில் காவலனை தோற்கடிப்பது சிரமமான காரியமல்ல என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். கண்டி, செங்கடகலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் வைத்து அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காகவே நாங்கள் அனைவரும் உழைத்து வருகின்றோம். சஜித்தின் வெற்றிக்காக கண்டி மாவட்ட வாக்காளர்கள் பெரிய பங்களிப்பைச் செய்ய வேண்டியுள்ளது.

தேசிய தேர்தலில் கண்டி மாவட்ட வாக்காளர்களின் வாக்குகள் பெரிய அழுத்தங்களை கொடுக்கும். எமது வேட்பாளரின் வெற்றிக்காக இரவு- பகல் பாராது கடமைகளைச் செய்ய வேண்டும்.

25 ஆண்டுகளுக்குப் பின்னர், நாட்டின் ஏழை மக்களை நினைத்து நாங்கள் பணியாற்றி வருகின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியின் எமது இளம் ஜனாதிபதியைத் தெரிவு செய்ய நாங்கள் அதிக அக்கறை காட்டுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் பொலிஸாரின் உடலில் கமராக்கள்



(கொழும்பு)

இலங்கைத் தேர்தல் வரலாற்றில் முதன்முறையாக கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் பொலிஸாரின் உடலில் கமராக்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி 71 நுண் கமராக்கள் விநியோகிக்கப்பட்டதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (பவ்ரல்) அமைப்பு தெரிவித்தது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது குறித்த கமராக்கள் தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்கள், மோசடிகள் மற்றும் ஏனைய கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி சுட்டிக்காட்டினார். (இ-7)

## பொதுஜன பெரமுனவுடன் நேற்று 14 சிறிய கட்சிகள் உடன்படிக்கை



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கும் 14 சிறிய கட்சிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்றுத் திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

அகில இலங்கை தமிழர் மகாசபை, சிறி ரெலோ, இலங்கை மக்கள் தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் கட்சி, புதிய ஜனநாயக மக்கள் கட்சி, தேசபக்தி ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக சோசலிஸ்ட் கட்சி மற்றும் இஸ்லாமிய சோசலிச முன்னணி உள்ளிட்ட 14 கட்சிகளே இவ்வாறு கையெழுத்திட்டன.

குறித்த நிகழ்வில் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மேலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்துள்ள குறித்த 14 கட்சிகளும் இதற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் பங்காளிகளாக இருந்த கட்சிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1879

### கண்ணம்மா



இப்ப திருடுங்கடா பார்க்கலாம்!

### ஜோதிலட்சுமி

ஜீன்ஸ் கிழிஞ்சிடுச்சின்னு ரொம்ப நாளா போடாம விட்டுட்டேன். திடீர்னு தம்பி அத பார்த்துட்டு சூப்பரான மொடலா இருக்கேன்னு எடுத்துகிட்டு போயிட்டான்.



என்னத்த சொல்ல...

### பிரேம்

இப்போதெல்லாம் பணத்தை சேர்த்துக் கொண்டே இருப்பவன் பணக்காரன் ஆகிறான்...



பாசத்தை சேர்த்துக்கொண்டே இருப்பவன் பைத்தியக்காரன் ஆகிறான்...

### திரு

வாழ்க்கையை அடிக்கடி திரும்பி பாருங்கள்



நாம் அடைந்த வலிகளும் அதனை கடந்த வழிகளும் நமக்கு நம்பிக்கையூட்டும்...

### அகிலன்

கறுப்பும் ஒரு கலர்தான் வெள்ளையும் ஒரு கலர்தான். ஆனால் கறுப்பு வெள்ளை ரிவி மட்டும்கலர் ரிவி இல்ல... ஏன்?



### அஞ்சலி

நீ எதை
சொல்கிறாய்
என்பதை விட,
யாரிடம்
சொல்கிறாய்
என்பதே
முக்கியம்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நாங்கள்தான் இந்த நாட்டின் ஜனாதிபதியை தீர்மானிக்கின்ற சக்தியாக மாற முடியும்

## ஒட்டகத்தில் நிற்கும் ஹிஸ்புல்லா கூறுகிறார்



(புத்தளம்)

இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களில் 2 இலட்சத்து 50 ஆயிரம் வாக்குகளை ஒட்டக சின்னம் பெற்றால் நாங்கள்தான் இந்த நாட்டின் ஜனாதிபதியை தீர்மானிக்கின்ற சக்தியாக மாற முடியும் என ஒட்டக சின்னத்தில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

புத்தளம் கரைத்தீவு, மதுரங்குளி கடையாமோட்டை மற்றும் புத்தளம் ஹூதா பள்ளிக்கு அருகாமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அந்தப் பிரச்சினைகளை தேசிய, சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு வருவதுடன், பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய ஒரு பலமான சமூகமாக் கடந்த காலங்களில் இருந்ததை விடவும் ஆட்சியை உருவாக்குகின்ற, உருவாக்கிய அதிகாரமுள்ள பங்காளர்களாக மாற வேண்டும் என்பதற்காகவே நான் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறேன்.

இந்த நாட்டில் ஜனாதிபதி ஆட்சி முறைமை வந்ததும் நாம் பல தேர்தலுக்கு முகம் கொடுத்திருக்கிறோம். முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கிய பின்னர் 1988 ஆம் ஆண்டுகளில் நாம் சந்தித்தது முதலாவது ஜனாதிபதித் தேர்தலாகும்.

அப்போது ஶ்ரீமாவோ பண்டாரநாயக்கவை முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஆக்குவதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. அந்தச் சந்தர்ப்பத்தில் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இரண்டு நாட்களாக மு.காவின் அப்போதைய தலைவர் மர்ஹூம் அஷ்ரப் தலைமையில் இடம்பெற்றன.

முஸ்லிம்களுக்கான தனி அலகு, முஸ்லிம்களின் நிரந்தர பாதுகாப்பை உறுதிப்படுத்த நிர்வாக அலகு போன்ற முஸ்லிம்கள் தொடர்பான பல விடயங்கள் உள்வாங்கப்பட்டிருந்தன. எனினும் ஶ்ரீமாவோ பண்டாரநாயக்கவுடன் ஏற்பட்ட சில முரண்பாடுகள் காரணமாக அந்தப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த போது அந்தத் தேர்தல் கூட்டணியிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் விலகியதுடன், எமது கொள்கைகளை ஆதரித்த ரணசிங்க பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கி அவரை இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ஆக்கினோம்.

அன்றிலிருந்து இன்று வரை நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிடுகின்ற ஜனாதிபதி வேட்பாளர்களோடு உடன்பாடுகளுடனும் உடன்பாடின்றியும் ஆதரவுகளை வழங்கி வருகிறோம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அளுத்கம தாக்கப்பட்ட போது, பள்ளிவாசல்கள் அடித்து நொருக்கப்பட்ட போது, முஸ்லிம்களின் பல கோடி சொத்துக்கள் சூறையாடப்பட்ட போது, பல உயிர்கள் துடிக்கத்துடிக்க கொல்லப்பட்ட போது இந்த நாட்டு முஸ்லிம்கள் மகிந்த அரசை வீட்டுக்கு அனுப்பிவிட்டு ஒரு புதிய அரசாங்கத்தை கொண்டுவர வேண்டும் என்று தீர்மானித்தனர்.

மகிந்த அரசுடன் எங்களுக்கு ஏற்பட்ட விரக்தியால் தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரிபால சிறிசேனவை எவ்விதமான உடன்படிக்கைகளும் செய்யாமல் ஆதரித்தோம். ஆனால், எங்களோடு ஒன்றாகப் பயணிக்கின்ற தமிழ் தலைவர்கள் தங்களது மக்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதனை முன்வைத்து ஐ.தே. முன்னணியோடு உடன்படிக்கைகளைச் செய்தனர். வடக்கிலிருக்கும் இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும், தமிழ் மக்களுடைய காணிகளை, வீடுகளை அவர்களிடம் மீளவும் கையளிக்க வேண்டும் என்று பல நிபந்தனைகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழு முன்வைத்தது.

ஆனால், எமது தலைமைகள் எந்த நிபந்தனைகளுமின்றி, பேச்சுவார்த்தைகளின்றி எமது அரசியல் தலைமைகள் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தனர்.

அதனால்தான் நல்லாட்சியில் முஸ்லிம்கள் இதுவரை அனுபவிக்காத பல கஷ்டங்களையும் துன்பங்களை அனுபவித்தார்கள். அளுத்கம தாக்குதலுக்காக மகிந்த அரசாங்கத்தை மாற்றி புதிய அரசாங்கம் ஒன்றை உருவாக்கியதன் ஊடாக அதேபோன்று பல அளுத்கமைகளை ஜின்தோன் தோட்ட தொடக்கம் மினுவாங்கொடை வரை திகன, தெல்தெனிய, அக்குறணை என்று 340 இற்கும் மேற்பட்ட சம்பவங்களை எமது முஸ்லிம் சமூகம் நல்லாட்சி அரசில் எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தை ஆதரிப்பதற்காக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு முன்வைத்த நிபந்தனைகள் நல்லாட்சி அரசாங்கத்தில் நிறைவேற்றப்பட்டன. நான் கிழக்கு ஆளுநராக இருந்த போது பாதுகாப்புச் சபையில் உறுப்பினராக இருந்தேன். அப்போது வடக்கில் சம்பந்தன் கோரிக்கைக்கு அமைய 98 இற்கும் மேற்பட்ட இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டன. பல ஏக்கர் காணிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

அதுபோல தமிழ் மக்கள் கனடா போன்ற சர்வதேச நாடுகளுக்குச் சென்றுவர வேண்டும். அதனால் கட்டுநாயக்கவுக்கு செல்வது பெரும் சிரமம் உள்ளது. எனவே, சர்வதேச விமான நிலையம் ஒன்றை அமைத்து தாருங்கள் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்கள். அதனையும் ரணில் விக்கிரமசிங்க அரசு ஏற்றுக்கொண்டு தற்போது 2600 மில்லியன் ரூபா செலவில் யாழ்ப்பாணத்தில் சர்வதேச விமான நிலையமொன்றும் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நாம் சிறுபான்மையினர். ஒரு தேர்தல் காலத்தில்தான் எமது சமூகம் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் பற்றிப் பேச முடியும். எமது முஸ்லிம் சமூகத்தின் வாக்குகளின்றி சஜித் பிரேமதாஸவும் ஜனாதிபதியாக வரமுடியாது. கோத்தபாய ராஜபக்ஷவும் ஜனாதிபதியாக முடியாது.

அவர்களுக்கு எங்களுடைய வாக்குகள் தேவை. தமிழ்த்தரப்பினர் மகிந்தவுடன், சஜித்துடன், ரணில் விக்கிரமசிங்கவுடன் இன்றும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வாழ்வாதாரப் பிரச்சினைகள், உரிமைகள் பற்றிய பிரச்சினைகள் பற்றி இன்னமும் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். இன்றும் தீர்மானத்திற்கு வரவில்லை. ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் அவர்கள் முன்னர் வைத்த பல கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொடுத்தாலும் இன்னும் நிபந்தனைகளை வைத்துக்கொண்டு பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

எமது முஸ்லிம் சமூகம் இன்று பல கஷ்டங்களையும் துயரங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம் மக்கள் எல்லோரும் பயங்கரவாதிகள், பயங்கரவாதத்தை ஆதரிப்பவர்கள். அவர்கள் பின்பற்றுகின்ற இயக்கங்கள் பயங்கரவாதத்தை போதிக்கின்றன. எனவே, அதுபற்றி விசாரணை நடத்துவதற்காக சர்வதேச விசாரணைக் குழுவை வரவழைக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

உரிமைகள், மதச்சுதந்திரம் என்பன பற்றி மிகத் தெளிவாகப் பேச வேண்டும். எமக்கு ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாஸ, மகிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ எல்லோரும் எமக்கு ஒன்றுதான். இந்தத் தேர்தல் களத்தில் வேட்பாளர்களாகக் களமிறங்கியிருக்கின்றவர்களிடம் எமது சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிப் பேச வேண்டும். பிரச்சினைகளை முன்வைக்க வேண்டும். உடன்பாடுகளை காணவேண்டும். எமது முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைப் பற்றி பேசுவதற்கு அச்சப்பட்டால் எப்போதும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது.

அவ்வாறு பேசுவது இனவாதமல்ல என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். எமது பிரச்சினைகளைச் சொல்லி உடன்பாடு காணாமல் ஒரு வேட்பாளருக்கு ஆதரவு வழங்கி விட்டு அவர் வெற்றிபெற்றதும் பின்னர் எப்படி எல்லாம் கிடைக்க வேண்டும், எவ்வாறு எதிர்பார்ப்பது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

நாம் தனிநாடு கோரவில்லை. வடகிழக்கை இணையுங்கள் என்று கேட்கவில்லை. இராணுவ முகாம்களை அகற்றுங்கள் என்று சொல்லவில்லை அதிகாரம் கேட்கவில்லை, 13 ஆவது சட்டத்தை அமுல்படுத்துங்கள் என்று கூறவில்லை, சமஷ்டி ஆட்சி கேட்கவில்லை.

எமது சமூகம் மானத்தோடும் மரியாதையோடும் கௌரவத்தோடும் பாதுகாப்போடும் மார்க்கக் கடமைகளை முன்னெடுத்து இந்த நாட்டில் வாழ வேண்டும் என்று நமது கனவு தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் கேட்டிருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## 20 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி சந்தைக்கு விநியோகம்

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தும் சபை 20 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை சந்தைக்கு விநியோகித்தது.

10 ஆயிரம் மெற்றிக் தொன் நாட்டரிசியும் 10 ஆயிரம் மெற்றிக் தொன் சம்பா அரிசியும் இவ்வாறு சதொச நிறுவனங்கள் ஊடாக சந்தைக்கு வழங்கப்பட்டன.

அரிசியின் நிர்ணய விலையைப் பேணுவதற்காகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## முதியோர்களுக்கான மகிழ்களம்



கோண்டாவில் கிழக்கு ஶ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தின் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தினூடாக மருதனார் மடம் முதியோர் இல்ல முதியோர்களுக்கான மகிழ்களம் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. (இ-5)

## தேர்தலுக்கு முதல்நாள் பாடசாலை விடுமுறை

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலை முன்னிட்டு தேர்தலுக்கு முதல் நாளான வெள்ளிக்கிழமை பாடசாலைகளுக்கு விடுமுறையளிக்க தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறையளிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.


குறித்த அறிவித்தல் அனைத்து மாவட்டங்களிலும் காணப்படுகின்ற கல்விப் பணிமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 130 | 140 | 90 | 160 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 115 | 140 |
| பச்சைமிளகாய் | 180 | 250 | 140 | 130 | 300 |
| தக்காளி | 120 | 120 | 130 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 100 | 100 | 80 |
| கோவா | 140 | 140 | 140 | 90 | 160 |
| கரட் | 160 | 230 | 180 | 160 | 300 |
| பூசணி | 80 | 70 | 80 | 70 | 120 |
| புடோல் | 120 | 120 | 120 | 70 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 260 | 240 | 200 | 320 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 120 | 140 | 120 |
| பாகற்காய் | 300 | 360 | 240 | 220 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 | 70 | 120 |
| பயற்றங்காய் | 200 | 300 | 180 | 200 | 200 |
| லீக்ஸ் | 150 | 180 | 180 | 140 | 200 |
| பீற்றூட் | 120 | 100 | 80 | 60 | 120 |
| கறிமிளகாய் | 250 | 260 | 240 | 210 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 240 | 320 | 320 |
| போஞ்சி | 120 | 180 | 180 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | — | 60 | 140 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 60 | 50 | 60 |
| தேசிக்காய் | 150 | 200 | 200 | 220 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 40 | 45 | 30-50 |
| இராசவள்ளி | — | — | 350 | 150 | — |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | 100 | 80 | 40 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 30 | 50 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | 50 | 150 | 120 |




# காக்கா ஏன் கறுப்பாச்சு?



ரொம்ப காலத்துக்கு முன்னாடி காக்கா வெள்ளையா இருந்துச்சாம். வெள்ளைன்னா அப்பிடி ஒரு வெள்ளை. அப்ப எல்லாம் காக்கா ரொம்ப தூரம் பறக்குமாம். சூரியன் வரைக்கும் பறந்து போகுமாம். அப்பிடி இருந்த காக்கா எப்பிடி கறுப்பாச்சு? சொல்றேன்..

சூரியபுர் நாட்டோட ராஜாவுக்கு ரொம்ப வருடம் கழிச்சு அழகான இளவரசி பிறந்தாங்களாம். கொள்ளை அழகு. குழந்தையில இருந்து வீட்டை விட்டு வெளிய வரலையாம். நல்ல பெரியவங்களாகி கல்யாண வயசுல வெளிய விளையாட வந்தாங்களாம். அவங்க பேரு அங்கிகா. அவங்க விளையாடறத பாத்த சூரியனுக்கு அவங்களை ரொம்ப பிடிச்சு போச்சாம். இளவரசிக்கும் சூரியனை பிடிச்சிடுச்சாம். தினமும் விடியற்காலையில எழுந்ததில இருந்து சூரியன் கிட்ட தான் பேசிட்டு இருப்பாங்களாம். சூரியனும் பூமிய சுத்திக்கிட்டே இளவரசிகிட்ட பேசிட்டு இருந்ததாம். ரொம்ப நல்ல நண்பர்களா மாறிட்டாங்க. ஒருநாள் சூரியன் இந்த இளவரசிக்கு பரிசு கொடுக்க நினைச்சுதாம்.

சூரியன் கிட்ட வரைக்கும் காக்கா பறந்துச்சு இல்லையா? அதனால சூரியன் ஒரு காக்காவ கூப்பிட்டு பையில சந்தனம், வாசனை திரவியங்கள், முத்து மாலை எல்லாம் கொடுத்து இளவரசி கிட்ட கொடுத்துடுன்னு சொல்லிட்டு மறைந்து போச்சாம். சாயந்திரம் ஆகிடுச்சுன்னா சூரியன் தூங்க போயிடும் இல்லையா? காக்கா அந்த பையத் தூக்கிகிட்டு இளவரசி இருந்த அரண்மனையை நோக்கிப் பறந்து போயிட்டு இருந்துச்சாம்.

வழியில திருமண ஊர்வலம் போயிட்டு இருந்திருக்கு. நிறையப் பழங்கள், உணவுப்பொருட்கள் எடுத்துட்டு போனாங்க போல. காக்காவுக்கு கொஞ்ச உணவாச்சும் கிடைக்குமேன்னு ஆசை. அரண்மனைக்கு போயிட்டு வந்தா தாமதமாகிப் போகும். சரின்னு அந்த பைய ஒரு மரத்தில மாட்டிட்டு திருமண ஊர்வலத்துக்கு போச்சாம். மரத்துக்கு கீழ இருந்த ஒருத்தன் இந்த காக்கா பைய வெச்சுட்டு போனதை பாத்துகிட்டே இருந்தானாம். நல்ல வாசனை வந்தது. அதனால மரத்தில ஏறி பையத் திறந்து பாத்து இருக்கான். பைக்கு உள்ள சூரியன் கொடுத்து அனுப்பின எல்லா பொருளையும் பாத்து சொக்கி போயிட்டானாம். உடனே எல்லாத்தையும் எடுத்துகிட்டு மரத்தில இருந்த குப்பை எல்லாம் பையில எடுத்துப் போட்டுட்டு கிளம்பிட்டான்.

காக்கா நல்லா சாப்பிட்டு வந்துச்சாம். பைய எடுத்துகிட்டு இளவரசி அரண்மனைக்கு போயிடுச்சாம். அங்க இளவரசிகிட்ட சூரியன் கொடுத்த பைய கொடுத்துச்சாம். திறந்து பார்த்த இளவரசிக்கு அதிர்ச்சி. ச்ச... இந்த சூரியன் ஏன் இப்படி பண்ணிடுச்சு. என் மேல அன்பே இல்ல. எல்லாம் நடிப்பு. அவன் பேச்சு இனி மேல் டூன்னு சொல்லிட்டு பைய விசிரியடிச்சிடுச்சாம்.

மறுநாள் காலை, சந்தோஷமா இளவரசிய பார்க்கலாம்ன்னு வந்த சூரியனுக்கு தூக்கி வாரி போட்டுச்சாம். அந்த பை கீழ விழுந்திருந்ததை பாத்தே ஏதோ தப்பு நடந்திருக்குதுன்னு புரிஞ்சிடுச்சாம். பயங்கர கோபம் வந்துடுச்சாம். காக்காவை கோவமா பாத்த உடனே வெள்ளையா இருந்த காக்கா கறுப்பா மாறிடுச்சாம்.

அதனால தான் சூரியன் கிட்டகூட பறக்க முடியாம போச்சாம். கிட்ட இருந்த சூரியனும் பூமி மேல கோபம் வந்து தூரமா போயிடுச்சாம்.

இப்ப தெரிஞ்சதா காக்கா ஏன் கறுப்பாச்சுன்னு?

## ஆ.ப.ஜெ.அப்துல்கலாம்



இவர் இராமேஸ்வரம் தீவில் ஒரு நடுத்தர தமிழ்க் குடும்பத்தில் பிறந்தார். இவரின் தந்தையார் பெயர் ஜெய்னுல்லாபுதீன். தாயார் பெயர் ஆஷியம்மா ஆவார். இவருடைய தாயாரின் வம்சம் கீர்த்தி வாய்ந்தது. அப்துல்கலாம் பரம்பரையைச் சேர்ந்த முன்னோர் ஒருவர் பிரிட்டிஷாரிடம் ''பகதூர்'' பட்டம் பெற்றார். பெயர் முஸ்தஃபாகமால் ஆவார்.

இவருடைய மூதாதையர் வீடு இராமேஸ்வரம் மசூதி தெருவில் 19 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இவர்பிறந்த ஆண்டு 1931 ஆகும். இவர் 1939 இல் 3 ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் போது 2 ஆம் உலகப் போர் மூண்டது. ராமநாத சாஸ்திரி, அரவிந்தன், சிவப்பிரகாசன் என்பவர்கள் அப்துல்கலாம் நெருங்கிய சிநேகிதர்கள் ஆவார்கள். இராமநாதபுரம் ஸ்வார்ட்ஸ் உயர் நிலைப்பள்ளியில் கல்வி கற்கும் போது இவருடைய வயது 15 ஆகும். ஐயாத்துரை சாலமன் ஒரு அற்புதமான ஆசிரியர். அப்துல்கலாமிடம் தன்னம்பிக்கையை வேரூன்ற வைத்த பெருமை ஐயாத்துரை சாலமன் என்பவருக்கே சாரும். இவருடைய சகோதரனின்

இவர் சென்.ஜோசப் கல்லூரியில் நான்கு வருடம் கற்று வந்தார். இவர் இக்கல்லூரியில் பி.எஸ்.சி. பட்டப்படிப்பில் சேர்ந்தார். இவர் ஹிந்துஸ்தான் நாட்டில் லிமிட்டெட் நிறுவனத்தில் பயிற்சி பெறுவதற்கான எம்.ஐ.டியில் இருந்து பெங்களூர் சென்றார்.


இவர் HALலில் பயிற்சி முடித்து MIT யிலிருந்து விமானப்பொறியியல் பட்டதாரியாக வெளியே வந்தார். இவர் இவ்வாறு வெளியே வந்த போது இவருக்கு இரண்டு வித வேலை வாய்ப்புக்கள் காத்திருந்தன. இந்த இரண்டு வேலை வாய்ப்புக்களும் இவருடைய நீண்டகால கனவை நனவாக்கக் கூடியவை. இவ் இரண்டு வாய்ப்புக்களில் ஒரு விமானப் படையில் அடுத்த படையில் பாதுகாப்பு அமைச்சகத்தின் தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி இயக்குநரகத்தில் ஆகும்.

இவரை இரண்டு இடங்களிலும் நேர்முகத்தேர்வுக்கு வரும்படி அழைத்திருந்தார்கள். இவர் இதற்காக போக வேண்டிய இடம் 2,000KM தொலைவுக்கும் அப்பால் இருந்தது. இவரை 1982 இல் DRD2 ஆய்வுகூட இயக்குநராக நியமித்தார்கள். வெர்ஜீனியா மாகாணத்தின் ஹாம்ப்பனில் உள்ள நாசாவின் லேஞ்சலி ஆய்வு மையத்தில் இவருடைய வேலை தொடங்கியது.

மெலிமெட்ரி கண்காணிப்பை பதிவு செய்யும் சாதனங்கள் விண்வெளி ஆராய்ச்சி செய்யத் தேவையான சோதனைக்கருவிகள் என இவையெல்லாம் ஆமதாபாத்தில் உள்ள விண்வெளி விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மையத்தில் இயற்பியல் ஆய்வு கூடத்திலும் நிறுவப்பட்டன. இவர் 2015 ஜூலை மாதம் இறையடி சேர்ந்தார்.

சு.ரூபிகா,
தரம் 10,
யா/வாதரவத்தை
விக்கினேஸ்வர
வித்தியாலயம்.

## என் அன்பு அம்மாவே



பத்துமாதம் என்னைக்
கருவறையில் சுமந்து
பெற்றெடுத்த என் அன்னை – நீ
பாசமுடன் அள்ளி அணைத்தாயே!

இரவு பகல் பாராது
ஈ எறும்பு தீண்டாது
கண்ணை இமை காப்பது போல
காத்து வந்தாயே

கைக்குட்டையாக வேண்டும் நான்
உன் கரங்களுக்குள்ளே இருக்க
பாதணியாக வேண்டும் நான்
உன் பொற்பாதங்களைச் சுமக்க

இன்னும் ஏழு ஜென்மங்கள் வேண்டும்
நானே அதிலும் உன் மகனாக வேண்டும்
உனக்கு ஆயிரம் கோடி நன்றிகள்
நீ என்னை மகனாய் பெற்றதற்கு

ஜெ.ஜெசிந்தன், தரம் 06

பேச்சுக்கலையே நாகரிகம். முரண்பட்ட பேச்சுக் கூட தொடர்பை வளர்க்கிறது. ஆனால் மௌனம் மக்களை ஒதுக்கி வைக்கிறது. – தாமஸ் பெய்ன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குந்தியின் இராஜதந்திரமே பாண்டவர் வெல்லக் காரணம்

பாரதப்போரின் வெற்றிக்கு பார்த்தசாரதியாக இருந்த கிருஷ்ணபரமாத்மாவே காரணம் என்று பலரும் கூறுவர். இஃது ஒரு பொதுவான நிலைப்பாடு. மாறாக பாண்டவர்கள் வெற்றி பெறுவதற்குப் பலர் காரணமாக இருந்துள்ளனர்.

அதிலும் குந்திதேவியின் மதிநுட்பமே பாண்டவர்கள் வெற்றி பெறுவதற்குக் காரணமாயிற்று.

ஆம், கர்ணன் துரியோதனனின் மிக நெருக்கமான நண்பன். வில்வித்தையில் சிறந்தவன். கவச குண்டலத்தோடு பிறந்தவன். நாகாஸ்திரம் உடையவன். அவன் கௌரவர்களுக்கு மிகப்பெரும் பலம்.

அதேநேரம் பஞ்சபாண்டவர்களில் ஒருவர் போர்க்களத்தில் உயிரிழந்தாரேனும் ஐவரும் உயிரிழக்கும் நியதிக்கு உட்பட்டவர்கள். அதேவேளை துரியோதனன் தரப்பில் பாண்டவர்களைப் பதம் பார்க்க வல்லவர்கள் மூவர் இருந்தனர்.

அதில் ஒருவர் வீஷ்மாச்சாரியார். உடலை கௌ்ரவருக்கும் உள்ளத்தைப் பாண்டவர்களுக்கும் கொடுத்தவர். எனவே அவரால் பாண்டவர்களைக் கொல்ல முடியாது.

இரண்டாமவர் துரோணர். அவரோ குடும்பப் பற்றுடையவர். தன் மகன் அசுவத்தமா மீது அளவு கடந்த அன்பு கொண்டவர்.

எனவே அவர் பற்றுக்கோடுடையவராதலினால் விசுவாசத்தோடு போர் தொடுக்க விரும்பார்.

மூன்றாமவர் கர்ணன். கர்ணனுக்குப் பாண்டவர்களைப் பதம் பார்ப்பதில் எந்தத் தடையும் இல்லை.

எனவே கௌரவர் வெல்வதற்கு ஒரே காரணமாக இருக்கக்கூடியவன் கர்ணன்.

இந்த உண்மையை உணர்ந்த கிருஷ்ண பரமாத்மா; கர்ணன் உன் மகன் என்ற செய்தியை குந்தியிடம் கூறி, அவனிடம் சென்று இருவரம் கேள் என்கிறான்.

கிருஷ்ணபரமாத்மா கூறியபடியும் பாண்டவர்கள் வெல்வதற்காகவும் குந்திதேவி தன் மகன் கர்ணனிடம் சென்று தானே உன் தாய் என்று கூறி இருவரம் கேட்கிறாள்.

கொடைவள்ளல் கர்ணனோ, குந்திதேவியின் வரம் தன் உயிரைப் பறிக்க வல்லது என்பதைத் தெரிந்திருந்தும் கேட்ட வரத்தைக் கொடுக்கிறான்.

வரத்தைப் பெற்ற குந்திதேவி குருசேத்திரப் போரில் கர்ணனின் வகிபங்கு முடியும்வரை கர்ணன் தன் மகன் என்ற உண்மையை யாரிடமும் கூறாமல் தனக்குள்ளேயே வைத்திருக்கிறார்.

இங்குதான் குந்திதேவியின் இராஜதந்திரம் உணரப்பட வேண்டும்.

கர்ணன் தன் மகன் என்பதை அவர் வெளிப்படுத்தியிருந்தால், கர்ணனைக் கொல்வதற்குப் பாண்டவர்கள் ஒருபோதும் உடன்படார்.

தவிர, குந்தியின் மகன் கர்ணன் என்ற தகவலை துரியோதனன் அறிந்தால், அவன் கர்ணனை விடுத்து இன்னொருவரை போர்த் தளபதியாக்குவான்.

எனவே கர்ணன் தன் மகன் என்ற செய்தியை யாருக்கும் சொல்லாமல் குந்திதேவி மறைப்புச் செய்கிறார்.

போர்க்களத்தில் கர்ணன் உயிரிழந்தபோது தான்; என் மகனே! என்று கதறி அழுது அவன் தலையை தன் மடி மீது வைத்து கர்ணன் தன் மகன் என்ற செய்தியை உலகறியச் செய்கிறார்.

குந்திதேவியின் இந்த இராஜதந்திர நுட்பத்தையே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் பின்பற்ற வேண்டும்.

மாறாக தமிழரசுக் கட்சியின் அறிவிப்பு ஆதரித்தவரை தோற்கடிப்பதற்கான முயற்சியாகவும் பார்க்கப்படலாம்.

ஆக, ஜனாதிபதித் தேர்தலில் குந்தியின் இராஜதந்திரத்தைத் தமிழர்கள் பயன்படுத்துவதே புத்திசாலித்தனமாக இருக்கும்.

## ரணிலின் பினாமி வெல்கம

# சந்திரிகாவின் கூட்டத்தில் கலந்துகொண்டால் கடும் நடவடிக்கை- சமரசிங்க எச்சரிக்கை

(இராஜகிரிய)

கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கும் அமைப்பு எனும் பெயரில் சந்திரிகா மற்றும் குமார வெல்கம இணைந்து ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் கலந்து கொள்ள சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எவரும் செல்லக் கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவ்வாறு கலந்து கொள்பவர்களுக்கு எதிராக மத்திய குழுவில் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இராஜகிரியவிலுள்ள மத்திய நிலையத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - பொதுஜன பெரமுனவின் ஒன்றிணைந்த ஊடக சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இந்த ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பவர்கள் எனக் கூறிக்கொண்டு கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கிடைக்கும் வாக்குகளை இல்லாமல் செய்து சஜித் பிரேமதாஸவை வெற்றிபெற செய்யும் வகையிலேயே சந்திரிகா, குமார வெல்கம ஆகியோர் செயற்படுகின்றனர்.

இவர்கள் இருவரும் ரணில் விக்கிரமசிங்கவின் பினாமிகள். இவ்விருவரும் இணைந்து கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கிடைக்கும் வாக்குகளை இல்லாமல் செய்வதற்கே முயற்சிப்பதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (இ-7)

## காணாமல் போனோரின் உறவினர்களுக்கான தீர்வுக்கு ஊடகமாகச் செயற்படுவேன்

### அங்கஜன் வாக்குறுதி

(சாவகச்சேரி)

யுத்த காலங்களில் காணாமல் போனோரின் உறவினர்களுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதில் நான் ஓர் ஊடகமாக முன்னின்று செயற்படுவேன் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

கைதடிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற காணாமல் போனோரின் உறவினர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் போனோரின் குடும்பங்களை நாட்டின் சிறப்பு பிரஜைகளாகக் கருதி சகல விடயங்களிலும் அவர்களை முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் முன்வைத்துள்ளோம். எமது நான்கு அம்சக் கோரிக்கைகளில் அதுவும் ஒன்றாக இடம்பெற்றுள்ளது. நான் ஊடகமாகச் செயற்பட்டு ஆளும் தரப்பிற்கு உங்கள் பிரச்சினைகளைத் தெரியப்படுத்துவேன்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களைச் சந்தித்து அவர்களுக்கு உதவ முன்வந்ததனைப் போன்று அமரா பெண்கள் அமைப்பையும் சந்திக்கவுள்ளோம்.

அதன்மூலம்பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கின்ற பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காணமுடியும்.

வேலைவாய்ப்பு, வீட்டுத் திட்டம்,சமுர்த்தி மற்றும் வாழ்வாதார திட்டங்களில் காணாமல் போனோரின் உறவினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனச் சிபாரிசு செய்வேன். அரசியல் தீர்வு கிடைத்த பின்னரே ஏனையவற்றுக்கு தீர்வு என்றால் யாரும் இல்லாத இப் பிரதேசத்தில் யாருக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப் போகிறார்கள்? இளைஞர்கள் வேலைவாய்ப்பு தேடி வெளிநாடு சென்ற பின்னர் தீர்வு கிடைத்து என்ன பயன்? . காணாமல் போனோரின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காவிட்டால் ஒருபோதும் தமிழ்ச் சமூகம் மீண்டெழ மாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

## எதியோப்பியாவில் இனக்கலவரம் 86 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

### 500 இற்கும் மேற்பட்டோர் படுகாயம்

(அடிஸ் அபாபா)

எதியோப்பியாவில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் 86 பேர் உயிரிழந்துள்ளதுடன் 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

எதியோப்பிய பிரதமர் அபி அஹமட்டின் அரசியல் சீர்திருத்த முயற்சிகளுக்கு எதிராகவே இந்தக் கலவரம் வெடித்தது. எனினும் கடந்த ஒரு வாரமாக நடந்து வரும் போராட்டம் தற்போது இனக் கலவரமாக மாறியுள்ளது.

இதன்படி எதியோப்பியாவில் ஒரோமியா பகுதியில் இனக் குழுக்களிடையே வன்முறை வெடித்ததுடன் சமூக ஆர்வலர்கள் மீது பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்துவதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அபி அகமட் கடந்த 2018 ஆம் ஆண்டு பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் பல்வேறு சமூகச் சீர்திருத்த நடவடிக்கைகளை எதியோப்பியாவில் எடுத்து வந்தார்.

முடக்கப்பட்ட ஏராளமான தொலைக்காட்சி அலைவரிசைகள், இணையத்தளங்கள் மீதான தடையை நீக்கினார். மேலும், சிறையில் அடைக்கப்பட்ட எதிர்க் கட்சி உறுப்பினர்களை விடுதலை செய்தார்.

எதியோப்பியாவில் மக்களிடம் செல்வாக்குமிக்க தலைவராக வளர்ந்து வரும் அபி அஹமட் இந்த ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## பேருந்துச் சேவை மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் 764 வழிப்பேருந்து சேவை மீண்டும் ஆரம்பமானது.

நீண்டகாலத்திற்குப் பின்னர் மீண்டும் பருத்தித்துறையிலிருந்து மந்திகை-கலிகை-நெல்லியடி-புத்தூர்-புன்னாலைக்கட்டுவன் ஊடாக யாழ்ப்பாணம் பேருந்து சேவை நேற்று ஆரம்பமானது.

சகல சேவைகளும் மேற்குறிப்பிட்ட வழியாகவே நடைபெறும் என இ.போ.ச (வ) பருத்தித்துறைசாலை முகாமையாளர் அறிவித்தார்.

இச்சேவையில் பருத்தித்துறையிலிருந்து பேருந்து புறப்படும் நேரங்கள் காலை 6.30, முற்பகல் 10.15, பிற்பகல் 3.10, யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் நேரங்கள் காலை 8.20, பிற்பகல் ஒரு மணி, மாலை 5 மணிஎன்பனவாகும்.(இ-5)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2019

“ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்டவேண்டும்” –அலெக்சாண்டர் சிமித் (ஸ்கொட்லாந்து கவிஞர்)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

உடலின் தசைகள் தளரலாம். மனதின் தன்னம்பிக்கை தளரக்கூடாது. -அன்னை தெரேசா

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில் மண்கும்பான், அல்லைப்பிட்டி, வெண்புரவி நகர், மண்கும்பான் நீர்ப்பாசன சபை, உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், வல்வெட்டித்துறை ஒரு பகுதி, இராமலிங்கம் ஆடியபாதம் வீதி சந்தி, கிளிகடை, நல்லூர் பின் வீதி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் கனகபுரம், அம்பாள் குளம், உருத்திரபுரம், ஜெயந்திநகர், சிவநகர், கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம், இராஜேந்திர குளத்திலிருந்து உளுக்குளம் வரை ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### பற்றில்லாமல் இருக்க



முக்தி என்றால் முழுச்சுதந்திரம். தீமைத்தளையிலிருந்தும் அது போலவே நன்மைத்தளையிலிருந்தும் சுதந்திரம் பெறுவது. இரும்புச் சங்கிலியைப் போலவே தங்கச் சங்கிலியும் தளைதான். என் கையில் முள் ஒன்று குத்தியிருக்கிறது. அதை எடுப்பதற்கு இன்னொரு முள்ளையே பயன்படுத்துகிறேன். எடுத்து முடிந்ததும் இரண்டையுமே எறிந்து விடுகிறேன். இரண்டாவது முள்ளை நான் வைத்திருக்க வேண்டிய தேவையில்லை. ஏனெனில் இரண்டும் முட்களே.

அதுபோலவே தீய இயல்புகள் நல்ல இயல்புகளால் சமன்படுத்தப்படவேண்டும். நல்ல சம்ஸ்காரங்களின் புதிய அலைகளைப் பாய்ச்சி தீய சம்ஸ்காரங்களை ஏறக்குறைய அவை மறைகின்ற வரையில் , ஒடுங்குகின்ற வரையில், மனதின் ஒரு மூலையில் கட்டுப்படுத்தப்படும் வரையில் நீக்கவேண்டும். அதற்குப் பிறகு நல்ல இயல்புகளையும் வெற்றி கொள்ள வேண்டும். இவ்வாறாகிய பற்று “ பற்றின்மை” ஆகிறது.

செயற்படு! ஆனால் அந்தச் செயலோ, எண்ணமோ மனதில் ஆழ்ந்த பதிவை உண்டாக்காமல் பார்த்துக் கொள். அலைகள் வந்து போகட்டும். உடம்பிலிருந்தும் பெரிய பெரிய செயல்கள் புறப்படட்டும். ஆனால் அவை மனதில் ஆழ்ந்த பதிவு எதையும் உண்டாக்க அனுமதிக்காதீர்கள்.

# எஸ்.சோபநாத் ஞாபகார்த்த கிண்ணம் ஆனைக்கோட்டை யூனியன் அணி வசம்



உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தி வருகின்ற சோபநாத் ஞாபகார்த்த கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் ஆனைக்கோட்டை யூனியன் அணி வெற்றி பெற்று சம்பியனானது.

யூனியன் அணி சார்பாக மதி, தம்பா ஆகியோர் தலா ஒரு கோலை பெற்று கொடுத்தனர். (க)

# தேசிய மட்ட தட்டெறிதலில் வி.சானுஜனுக்குத் தங்கம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த வி.சானுஜன் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடர் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த வி.சானுஜன் 38.46 மீற்றர் தூரம் எறிந்து



தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். (க)

# அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி



அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தி வருக்கின்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் இமையாணன் மத்தி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா இரு கோல்களை பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

இமையாணன் மத்தி அணி சார்பாக அலெக்ஸ், சிந்து ஆகியோர் தலா ஒரு கோலையும் நவஜீவன்ஸ் அணி சார்பாக கிருத்தி, வினி ஆகியோர் தலா ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக சஞ்சி தெரிவு செய்யப்பட்டார். (க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# றேஞ்சர்ஸ் அணிக்கு வெற்றி



அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தி வருக்கின்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பெற்றமையால் வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் 04:03 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

றேஞ்சர்ஸ் அணி சார்பாக சுஜாஸ் ஒரு கோலை பெற்று கொடுத்தார். இப் போட்டியின் ஆட்டநாயகனாக சுஜாஸ் தெரிவு செய்யப்பட்டார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தேசிய மட்ட 400 மீற்றர் தடைதாண்டல் மன்னார் பற்றிமா மத்திய ம.வி.தங்கம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட 400 மீற்றர் தடைதாண்டலில் மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ந.மு. நசாத்கான் வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளத் தொடர் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டலில் மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தைப்



பிரதிநிதித்துவம் செய்த ந.மு. நசாத்கான் 54.3 செக்கன்களில் ஓடி வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளார். (க)

# அரச தலைவர் வெற்றிக் கிண்ண கரப்பந்தாட்டம் பருத்தித்துறை பிரதேச பெண்கள் அணி சம்பியன்

அரச தலைவர் கிண்ணத்திற்கான 23 வயதிற்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் பருத்தித்துறை பிரதேச பெண்கள் அணி சம்பியனாகியது.

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்ற ஜனாதிபதி வெற்றி கிண்ணத்திற்கான யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையிலான போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

அரையிறுதியாட்டத்தில் கோப்பாய் பைங்கரன் அணியை எதிர்த்து விளையாடி 3:2 என்ற செற்கணக்கில் வெற்றி கொண்டு இறுதியாட்டத்தில் வயாவிளான் அணியை எதிர்த்து விளையாடியது பருத்தித்துறை பிரதேச அணி. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடினர். பலத்த போராட்டத்தில் பருத்தித்துறை பிரதேச அணியினர் வயாவிளான் அணியை 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகி இவ்வருட தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

இந்த வருடம் நடைபெற்ற ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் கரப்பந்தாட்டத் தொடரிலும்



பருத்தித்துறை பிரதேச அணியினர் ஜெகப்பிரதாபனின் பயிற்றுவிப்பின் கீழ் சம்பியனாகி தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## கடந்தகால வரலாற்றை...

பிரதிகளிலும் ஆங்கில, தமிழ்ப் பிரதிகளிலும் வித்தியாசங்களை உட்புகுத்தியிருக்கும் ஒன்றை நம்பி எவ்வாறு எமது மக்கள் ஆதரவு அளிக்க முடியும் என்ற கேள்வி எழுகின்றது. எனவே எமது கடந்த கால வரலாறு மற்றும் தற்போதுள்ள அக.புற சூழ்நிலைகளை கவனத்தில் கொண்டு மக்கள் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கருதுகின்றோம். யாருக்கு வாக்களிப்பது என்பது ஒவ்வொருவரின் தேர்வாகும்.

இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று மாலை ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த ஊடகவியலாளரின் கேள்விக்கான பதில் என்ற அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் வடிவம் வருமாறு.

புதிய ஜனநாயகமுன்னணியின் ஜனாதிபதி வேட்பாளருடைய தேர்தல் அறிக்கை வெளிவந்துள்ள நிலையில் தங்கள் கட்சியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த முடியுமா?

தென்னிலங்கையின் இரு பிரதான கூட்டுக் கட்சிகளின் சிங்கள வேட்பாளர்கள் எமது 13 அம்சக் கோரிக்கைகளை அடிப்படையாக வைத்து 5 கட்சிகளுடன் கூட்டாகப் பேசுவதற்கு தயாராக இருக்கவில்லை என்பதுடன் தேர்தல் அறிக்கைகளை மாத்திரமே வெளியிட்டுள்ளார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதி பதி வேட்பாளர் கோத்தாபய ராஜபக்சவின் தேர்தல் அறிக்கையில் பொருளாதார விடயங்கள் குறித்தே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவற்றிற்குத் தீர்வு காணும் போது மற்றைய பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்றதொனி அவரின் தேர்தல் அறிக்கையில் வெளிப்பட்டிருந்ததை அவதானிக்க முடிகிறது. இனப் பிரச்சினை பற்றி எந்த ஒரு தீர்வையும் முன்வைக்க அவர் முனையவில்லை.

இதேவேளை சஜித் பிரேமதாச தனது தேர்தல் அறிக்கையில் பிளவுபடாத மற்றும் பிரிக்க முடியாத இலங்கைக்குள் அதிகபட்ச அதிகாரப்பகிர்வு நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறியுள்ளார்.

ஒப்பீட்டளவில் சஜித் பிரேமதாசவினால் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கை வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் குறித்து சில நல்ல விடயங்களை உள்ளடக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் தமிழ் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளான சுயநிர்ணய உரிமை, வடக்கு கிழக்கு இணைப்பு, சமஷ்டி, எமது தேசிய இறைமை ஆகியவை குறித்து அவரது தேர்தல் அறிக்கையில் எதுவும் வெளிப்படையாகத் தெரிவிக்கப்படவில்லை.

2015ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது வெளிப்படையாக எந்த ஒரு உறுதிமொழியையும் பெற்றுக் கொள்ளாமல் தமிழ் மக்கள் வாக்களித்து கடைசியில் ஏமாற்றத்தையே பெற்றுக் கொண்டனர். இன்றும் எமது அடிப்படைக் கோரிக்கைகளை ஏற்காத நிலையே தொடர்கின்றது. இதைத்தான் நான் தொடர்ந்து கூறிவருகின்றேன். இவ்வாறான நிலை நீடித்தால் காலக் கிரமத்தில் த்மிழ் மக்கள் தங்கள் மாகாணங்களில் சிறுபான்மையின்ராக ஆகிவிடுவர். அதற்கு ஏற்றவாறு எம் மக்களுட் பலர் வெளிநாட்டுக்கு செல்வதையே குறிக்கோளாக வைத்துள்ளனர்.

அதேவேளை, ஜனநாயக ரீதியாகத் தேர்தலில் வாக்களிக்கும் எமது மக்களின் ஜனநாயக உரிமையை நாம் மதிக்கின்றோம். அவ்வுரித்தை எம் மக்கள் பயன்படுத்தவேண்டும்.

எமது கடந்தகால வரலாறு மற்றும் தற்போதுள்ள அக, புற சூழ்நிலைகளை கவனத்தில் கொண்டு மக்கள் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று கருதுகின்றோம். யாருக்கு வாக்களிப்பது என்பது ஒவ்வொருவரின் தேர்வாகும் ஏ்ன்றுள்ளது. (ம-3)

## காலி கடற்கரை...

நடவடிக்கையின் போது, இக்கைது நடவடிக்கை இடம்பெற்றதாக. இலங்கை கடற்படை பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இசுறு சூரிய பண்டார தெரிவித்தார்.

இதன்போது சந்தேகத்திற்கிடமான, பல நாள் மீன்பிடிக் கப்பல் சோதனைக்குட்படுத்தப்பட்டது, அந்த மீன்பிடிக் கப்பலுக்குள் இருந்து குறித்த போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அதிலிருந்து 5 இலங்கையர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த போதைப்பொருள் கடல் வழியாக இலங்கைக்குள் கடத்த முயற்சி செய்யப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது. (ம-3)

## நேற்றைய தபால்...

வாக்களிப்பு மாலை 4.15 மணிக்கு நிறைவடைந்தது.

பொலிஸ் திணைக்களம், மாவட்ட மற்றும் தேர்தல் செயலக அதிகாரிகள் நேற்று வாக்களிப்பில் ஈடுபட்டனர்.

நேற்று தபால்மூலம் வாக்களிக்க முடியாதவர்களுக்கு இன்று அதற்கான சந்தர்ப்பம் வழங்கப் பட்டுள்ளது. (ம-3)

## காணிப்பிரச்...

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச பங்குகொண்ட பிரசார கூட்டம் நேற்யைதினம் முல்லைத்தீவு முள்ளியவளை பிரதேசத்தில் இடம்பெற்றது .

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் .

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான, அனைத்து சலுகைகளையும் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையையும் எடுப்போம். பெண்களை மையப்படுத்திய குடும்பங்களுக்கு தேவையான பொருளாதார வசதிகளை கொடுப்போம்

2010ம் ஆண்டு யுத்தம் நிறுத்தப்பட்டது. அதைத்தொடர்ந்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தச் சலுகைகளும் இப்பிரதேசங்களில் வழங்கப்படவில்லை. எமது அரசில் வடக்கு, கிழக்கு வெவ்வேறாக இரு ஜனாதிபதி மையங்களை உருவாக்கி மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்று கொடுக்கும் நடவடிக்கையை எடுப்பேன் என்றார்.

விசேட தேவையுடையவர்களது அனைத்து குடும்பங்களுக்கும் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பேன். வீடுகள், காணிகள் இல்லாதவர்களுக்கு அதனைப் பெற்றுக்கொடுப்பேன். முல்லைத்தீவு கேப்பாபுலவு மக்களின் காணிப்பிரச்சினைக்கும் சிறந்ததொரு தீர்வை பெற்றுக் கொடுப்பேன்.

30 வருடக் கொடிய யுத்தத்தில் நானும்என் தந்தையை இழந்தேன். அதேபோல் தான் இங்குள்ள இலட்சக்கணக்கான மக்கள் நீங்கள் ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களையும் இந்த யுத்தத்தின் மூலம் இழந்திருப்பீர்கள். அதன் கவலை எனக்குப் புரிகிறது. எனவே பிரிபடாத இலங்கைக்குள் சிறந்த ஒற்றுமை மிக்க சூழலை உரு வாக்கி சுதந்திரமாக இந்நாட்டில் ஒரு குடையின் கீழ் வாழ்வதற்கான ஏற்பாடுகளை செய்வேன் என்றார். (ம-3)

## ரெலோ, புளொட்...

துள்ளன.

ரெலோ, புளொட் தலைவர்கள் நேற்று அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடினர். புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவை பெற்றுக் கொள்ளும் நோக்கிலான கலந்துரையாடல்களே இதன்போது இடம் பெற்றன.

புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தமிழரசுக் கட்சியின் ஆதரவு சஜித் பிரேமதாசவிற்கு கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளின் ஆதரவின் முக்கியத்துவம் குறித்து தமிழ் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது பிரதமர் தெளிவுபடுத்தினார்.

தமது கட்சிகளின் நிலைப்பாட்டை இன்று அறிவிப்பதாக தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இதன்போது தெரிவித்துள்ளனர். (ம-3)

## தமிழ் மக்களுக்கு சம்பந்தனும்...

சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ் சிங்கள மக்கள் ஒன்றிணைந்து வாழ்வது காலத்தின் கட்டாயமாக இருப்பதோடு தாய் நாட்டில் ஊடுருவியுள்ள அடிப்படை முஸ்லிம் வாதம் நாட்டில் இருந்து முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.

நாடடில் இம்மாதம் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இரு பிரதான கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்கள் மக்கள் மத்தியில் பிரசராங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அதில் அன்னச் சின்னத்தில் போட்டியிடும் சஜித் பிரேமதாஸவுடன் முஸ்லிம் அடிப்படைவாதக் குழுக்களுடன் தொடர்புள்ள அரசியல்வாதிகள்கைகோர்த்துள்ளதுடன் சம்பந்தன் தலைமையிலான குழுவும் கைகோர்த்துள்ளது.

நாட்டு மக்களைப பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கிய முஸ்லிம் தீவிர வாதக் குழுக்களுடன் சங்கமிக்கும் சஜித் பிரேமதாஸவுடன் நாம் செயற்படத்தயாரில்லை.

ஆதலால்தான் தாய் நாட்டையும் மக்களையும் காப்பாற்றும் நம்பிக்கையுள்ள மொட்டுச் சின்னத்தில் போட்டியிடும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எமது ஆதரவை வழங்கினோம்.

கடந்த காலத்தில் நல்லாட்சி அரசாகங்கத்துக்கு தமிழ் கூட்டமைப்பினர் வழங்கிய ஆதரவால் தமிழ் மக்கள் திருப்தியடையும் விதமாக ஒன்றுமே நடந்ததில்லை மாறாக சம்பந்தனும் சுமந்திரனும் தமிழ் மக்களை ஏமாற்றியதே நடந்தது.

கோத்தபாய ஆட்சிக்கு வந்தால் வெள்ளைவான் வந்துவிடும் எனச் சிலர் பரப்புரை செய்கின்றனர் வெள்ளைவான் அவர்களே தயாரித்த விடயம் மாறாக சஜித் பிரேமதாசவின் தந்தையான ரணசிங்க பிரேமதாச ஆட்சிக் காலத்தில் 50 ஆயிரம் இளைஞர் யுவதிகள் காணாமல் ஆக்கப்பட்டார்கள் இது தொடர்பில் யாரும் பேசவில்லை.

இவ்வாறான நிலையில் சம்பந்தனும் சுமந்திரனும் தமிழ் மக்களுக்காக முன்நின்று உதவ மாட்டார்கள் என்பதற்கு அப்பால் சுமந்திரன் வெளிநாட்டுச் சக்திகளுக்காகவே செயற்படுவார் என அத்துரலிய தேரர் மேலும் தெரிவித்தார். (ம-3.10)

## சிகிச்சைக்காக சென்ற முதியவர்...

அச்சுவேலி வைத்தியசாலையில் நேற்று நண்பகல் சிகிச்சைக்காகச் சென்றிருந்த முதியவர், மருத்துவர் வருவதற்கு ஏற்பட்ட தாமதத்தால் உயிரிழந்தார் என குற்றஞ்சாட்டப்பட்டது.

இதுதொடர்பில் மருத்துவருக்கும் முதியவரின் உறவினர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து வைத்தியசாலையில் கூடிய முதியவரின் உறவினர்கள் மற்றும் ஊரவர்கள் சம்பந்தப்பட்ட மருத்துவரைத் தாக்கியதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

முதியவர் சுவாசப் பிரச்சினையால் அவசர சிகிச்சைக்காக அழைத்துச் சென்ற போது, மருத்துவர் சிகிச்சை வழங்குவதற்கு அக்கறை செலுத்தாது செயற்பட்டார். முதியவரை சுகாதார ஊழியர் ஒருவரே பார்வையிட்டுள்ளார்.

நீண்ட நேரத்துக்கு பின் வருகை தந்த மருத்துவர் முதிய்வர் உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்தார். அதனால் வாக்குவாதம் ஏற்பட்டது. மருத்துவர் மீது தலைக்கவசத்தால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தையடுத்து மருத்துவரால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3.10.60)


















# மின்சார சபை ஊழியர்கள் மீது குழுவொன்று தாக்குதல்

## 6 பேர் வைத்தியசாலையில்

வவுனியா ஆச்சிபுரம் கிராமத்தில் பணி நிமிர்த்தம் சென்ற மின்சாரசபை ஊழியர்களை இளைஞர் குழுவொன்று தாக்கியதில் அறுவர் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக தெரியவருவதாவது,

வவுனியா ஆச்சிபுரத்தில் மின்சாரக் கட்டணத்தினை பல மாதங்களாக செலுத்தாது அதிகளவு நிதி தேக்கமுள்ளவர்களது மின் இணைப்புக்களை துண்டிக்கும் பணிக்காக மின்சார சபை ஊழியர்கள் சென்றிருந்த போது அக்கிராமத்தில் வசிக்கும் சில இளைஞர்கள் மின்சார சபை ஊழியர்களை கண்மூடித்தனமாக தாக்கியுள்ளதுடன் வாகனங்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

இதன் காரணமாக காயங்களுக்குள்ளான ஆறு மின்சார சபை ஊழியர்களை வவுனியாவில் இருந்து சென்ற மின்சார சபை குழுவொன்று தமது வாகனத்தில் ஏற்றி வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளது. (ம-3,299)

# மன்னார் திருக்கேதீஸ்வர வளைவு தொடர்பான வழக்கு

## விசாரணைக்காக ஒத்திவைப்பு

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் வீதியில் மாந்தை மாதா ஆலயத்துக்கு முன்பாக திருக்கேதீஸ்வரம் ஆலய சபையினர் வளைவு அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்ட சம்பந்தமாக மன்னார் பிரதேச சபை அனுமதி வழங்கியது தவறு எனவும் இதை நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும் என்று மாந்தை ஆலய சபையினால் மன்னார் மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ் வழக்கு நேற்று திங்கட்கிழமை மன்னார் மேல் நீதிமன்றில் நீதிபதி என். எம்.அப்துல்லா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பிரதிவாதிகள் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், மற்றும் சட்டத்தரணிகள் கே.வீ.கணேசராஜா, எஸ்.கே. புரந்திரன், சாந்தன், வினோதன், புராதினி, ராகுல் ஆகியோரும்

மனுதாரர் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி வியன்சி அரசகுலரட்ணம் மற்றும் சட்டத்தரணிகள் துஷித் யோன்தாசன், எஸ். எஸ்.லோகு, அர்ஜுன், கமல், மியூரின், சுதர்ஷனா ஆகியோர் இவ் வழக்கில் ஆஜராகியிருந்தனர்.

திருக்கேதீஸ்வரம் வளைவு தொடர்பாக இணைச் செயலாளர் எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன் சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தனது வாதத்தை முன்வைக்கையில்,

தனது கட்சிக்காரனான இராமகிருஷ்ணனியின் பெயர் குறிப்பிடப்படாமல் சொல்லப்பட்டதுக்கான ஆட்சேபனை மன்றில் வாதாட்டமாக முன்வைத்தார்.

எழுத்தாணை மனுவிலே பெயர் குறிப்பிடப்பட வேண்டும் எனவும் பொது உத்தியோகத்தராக இருந்தால் மட்டுமே பதவி நிலை குறிப்பிடலாம் எனவும்

ஆகவே தவறான பதிவு இங்கு முன் வைக்கப்பட்டுள்ளது என தனது வாதத்தை முன்வைத்தார்.

அதற்கு வாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இதை திருத்தி அமைப்பதற்கான அனுமதியை மன்றில் கோரி நின்றார்.

அதற்கு அனுமதி வழங்கக் கூடாது என பிரதிவாதி சார்பாக ஆஜரான சட்டத்தரணி சுமந்திரன் தனது ஆட்சேபனையை தெரிவித்தார்.

மனுவை திருத்துவதற்கு அனுமதிக்கலாமா இல்லையா என்பதை எழுத்து மூலமான சமர்ப்பணத்தை சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் பணித்துள்ளது.

இவ் வழக்கை எதிர்வரும் 14.01.2020 வரை மேலும் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(ம-3,285, 286)

## 18 அமைச்சுக்களுக்கு எதிராக முறைப்பாடுகள்

(கொழும்பு)

தேர்தல் விதிமுறைகளை மீறியமைக்காக 18 அமைச்சுகளுக்கு எதிராக முறைப்பாடுகள் பதிவாகி இருப்பதாக, பப்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

அரச பணியாளர்கள் இடமாற்றப் பட்டமை, பதவி உயர்வு வழங்கப்பட்டமை, புதிய நியமனங்கள் மற்றும் நிரந்தரமாக்கப்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் இவ்வாறு முன் வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, இரண்டு மாகாண சபைகள் மற்றும் 11 உள்ளூராட்சி மன்ற நிர்வாகங்களுக்கு எதிராகவும் தேர்தல் விதி மீறல் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பப்ரல் தெரிவித்துள்ளது. (ம-3)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

**வீடு, காணி விற்பனைக்கு**
பலாலி வீதி, உரும்பிராய் கிழக்கு கரந்தன் நீர்வேலி செல்லும் வீதியில் (400m) புதிதாக கட்டப்பட்ட வீட்டுடன் கூடிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு. (பலாலி விமான நிலையம் - 8 Km யாழ்ப்பாணம் - 10 Km) (856)
தொடர்புக்கு: 0773845608, 0763999528

**உழவு இயந்திரம் தேவை**
பயன்பாட்டிலுள்ள உழவு இயந்திரம் தேவை. விற்க உள்ளவர்கள்
077 315 1326
என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ

**கணித வகுப்பு**
O/L வகுப்பு மற்றும் O/L மறுபடியும் தோற்ற விரும்புவோருக்கான குறுகிய கால மீட்டல் பயிற்சி Paper Class வகுப்புக்கள் தனியாக OR குழுவாக பல வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் வீடுவந்து கற்பிக்கப்படும்.
Model Papers, Past Papers என்பனவும் பயிற்சிப் பரீட்சை என்பனவும் கற்பிக்கப்படும்.
கோண்டாவிலில் தனியான மற்றும் குழு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (865)
தொடர்புகளுக்கு:- 077 649 8444

**காணி விற்பனை**
மல்லாகம் சந்தியின் அண்மையில் K.K.S வீதி, மல்லாகம் நீதிமன்று வீதியை இணைக்கும் கோணப்புலம் குறுக்கு வீதியில் வீதி ஓரமாக 17 1/2 பரப்புக் காணி கிணற்றுடன் உடன் விற்பனைக்கு. (C-8128)
தொடர்பு
075 041 4028

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS (C-8115)
0768226240
V2 TRAVELS

**வேலையாட்கள் தேவை**
கிளிநொச்சியில் அமைந்துள்ள பிரபல Hotel and Wedding Hall ஒன்றுக்கு
Accountant - Male
Receptionist
Plumbing and Wiring
வேலை தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்
076 604 0011
077 766 0396 (864)

**சாவகச்சேரியில்...**
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
**அருள்**
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-8109)

**ஆங்கிலத்தைக் கண்டு அச்சமா?**
இலக்கணத்தைக் காட்டி மிரட்டுகிறார்களா?
இலக்கணம் பற்றிய எந்த அச்சமுமின்றி 6ம் வகுப்புவரை தமிழில் பேசவும், எழுதவும் கற்றுக்கொண்டதுபோல்,
3ஏ மாதத்தில் ஆங்கிலத்தில் பேசுங்கள்!

| | | |
|---|---|---|
| Rapid ENGLISH | 20 Hrs | Rs. 5,000/- |
| Beginners Level | 40 Hrs | Rs. 10,000/- |
| Advanced Level | 80 Hrs | Rs. 20,000/- |
| IELTS Preparatory | 120 Hrs | Rs. 30,000/- |

Money Back Guarantee
3 மாதத்தில் ஆங்கிலத்தில் பேசாவிட்டால் பணம் மீளளிக்கப்படும்
CAMBRIDGE ENGLISH Language Assessment
வெளிநாடு செல்ல விரும்புவோர், தொழில் புரிவோர், பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்/மாணவர்கள், பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கு உகந்தது
077 36 16 798
021 221 9 221
SIKARAM ACADEMY
FAST TRACK to CAREERS
Sri Lankan Enterpreneur of the Year 2017
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம் (இஷாரா ரெக்ஸ் → ரீன் கேர்ல் அருகே)

**காண்டம் பார்த்தல்**
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்,
தொடர்பு: 076 835 1932,
021 223 2222 (உரும்பிராய்) (880)

**வேலையாள் தேவை**
கொக்குவிலில் இயங்கும் ஆயுர்வேத மருத்துவ நிலையத்தில் கடமையாற்ற தாதிய அனுபவம் உள்ள பெண் வேலையாள் தேவை. (847)
தொ.பே : 077 820 1195, 075 041 3579

**தேவை**
யாழ்.நகரில் இயங்கும் போட்டோக் கொப்பி/புத்தகக்கடைக்கு வேலை தெரிந்த அல்லது பழகவிரும்பும் பெண் பிள்ளைகள் தேவை. (867)
0772096310/0768696181

**வேலையாட்கள் தேவை**
யாழ்.நகர் மத்தியில் இயங்கும் பிரபல்ய உணவகம் ஒன்றுக்கு முழுநேர, பகுதிநேர வேலையாட்கள் தேவை.
- காசாளர்
- சிட்டை எழுதுநர்
- உணவு பரிமாறுபவர்

(உணவு, தங்குமிட வசதி உண்டு) தொடர்புகளுக்கு:-
(842) 077 846 1024

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org (857)
021 222 8093
புதிய விலாசம் No.17, Kandy Road, Jaffna.

**அமெரிக்க அதிஸ்ட விசா- இன்றுடன் பதிவுகள் நிறைவடைகின்றன**
2021ல் நீங்களும் அமெரிக்காவில்...
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்
சனத்தொகை கூடிய ஆசிய நாடுகளில் பங்களாதேஸ்,சீனா,இந்தியா, பாக்கிஸ்தான் பிலிப்பைன்ஸ்,வியட்னாம் போன்ற நாடுகள் விண்ணப்பிப்பதற்கு தகுதி இழந்தமையால் இலங்கையருக்கே வாய்ப்புக்கள் அதிகம். ஆகவே அலட்சியம் செய்யாது இறுதி சந்தர்ப்பத்தினை உடனடியாக பயன்படுத்தி அமெரிக்கா செல்லும் அதிஸ்ட வாய்ப்பினை பெற்றிடுங்கள்.
0768226241
55000 இலவச விசாக்கள்
வெற்றிபெற்ற அமெரிக்கா சென்ற வெற்றியாளர்களில் சிலர்

அலட்சியம் வேண்டாம் உடனே பதியுங்கள்
V2 Travels (C-8117)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 | புதுக்குடியிருப்பு 0764550673 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 | மருதங்கேணி 0764550671 |


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.11.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.